விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 26 திங்கட்கிழமை (09.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829, ஒலி 141

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# ஐ.நா.அறிக்கை குறித்துப் பேச இந்திய உயர்மட்டக் குழு வருகிறது

## நிலைமை மோசமடைவதாகத் தகவல்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கை குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக புதுடில்லியின் உயர்மட்டக் குழுவொன்று கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்புக்கு விஜயம் செய்யும் இக்குழுவில், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ், படைத்துறைச் செயலாளர் பிரதீப் குமார் ஆகியோர் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவுடன் பேச்சுவார்த்தை நடத்த எதிர்வரும் 16ஆம் திகதி புதுடில்லிக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில், இந்தியாவின் உயர்மட்ட குழு கொழும்புக்கு விஜயம் -செய்யவுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட கொழும்பின் உயர்மட்ட அதிகாரிகள் பலருடன் இந்திய (02 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகள் குடாநாட்டில் இருக்க மாட்டாது

## நோர்வே நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

இலங்கையில் நடந்த தமிழினப் படுகொலைக்கு பொறுப்பானவர்களான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பாலித ஹோகன மற்றும் சரத் பொன்சேகா உள்ளிட்ட 17 இராணுவத் தளபதிகள் உட்பட 21நபர்கள் மீது நோர்வே ஈழத் தமிழர் அவை வழக்குத் தொடுத்துள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். கட்டளைத் தளபதி திட்டவட்டம்

(யாழ்ப்பாணம்)



குடாநாட்டில் மக்களுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் படை முகாம்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்படுகின்றன. ஆனால் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகள் என எவையும் இருக்காது. இவ்வாறு யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

## அறிக்கைக்கு எதிராக யாழிலும் கையெழுத்து

(யாழ்ப்பாணம்)

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக யாழ்ப்பாணத்திலும் நேற்று கையெழுத்து வேட்டை இடம்பெற்றது. தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தலைமையில் யாழ்.பஸ் நிலையத்தில் நேற்று மாலை 4 மணி முதல் இந்த கையெழுத்து சேகரிக்கும் வேலை இடம்பெற்றது.

ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டதன் அடிப்படையில் (02ஆம் பக்கம் பார்க்க)


# இலங்கை மீது அனைத்துலக விசாரணை ஐ.நாவில் மீண்டும் பிரேரணை வருகிறது

(நியூயோர்க்)

நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்காக முயற்சி எதிர்பார்த்த பலனை இன்னும் அளிக்காத நிலையில், ஐ.நா. மனித உரிமைச் சபையில் போர்க்குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணையை வலியுறுத்தும் பிரேரணை ஒன்றை கொண்டுவருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான அவசரக் கூட்டம் ஒன்று அடுத்த வாரம் நியூயோர்க்கில் நடைபெறவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தலைவர் நவநீதம்பிள்ளை மற்றும் மனித உரிமை கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகளும் ராஜ தந்திரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்குழு வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரில் மனித உரிமை மீறல்களும் போர்க்குற்றங்களும் புரியப்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத் (20ஆம் பக்கம் பார்க்க)



# யாழ். பல்கலைக்கழக வளாகத்திற்குள் மாணவர்கள் செல்வதற்குத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வணிக முகாமைத்துவ பீட மாணவர்களிடையேநேற்று முன்தினம் ஏற்பட்ட கைகலப்பை அடுத்து, பல்கலைக்கழக வளாகத்திற்குள் மாணவர்கள் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

## உஷார் நிலையில் பொலிஸார்

நேற்று முன்தினம் வணிக முகாமைத்துவ பீடமாணவர்களிடையே ஏற்பட்ட கைகலப்பைத் தொடர்ந்து பல்கலைக் கழகத்தின் சொத்துக்களும் சேதமாக்கப்பட்டன.

இதனையடுத்து பொலிஸார் அப்பகுதியில் குவிக்கப்பட்டனர். நேற்றையதினம் பொலிஸார் பல்கலைக் கழக வளாகத்தினுள் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. இதேவேளை மாணவர்களிடையே ஏற்பட்ட கைகலப்பின் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK Canada and India**

Intake Get Register Now Collecting
the Application Until June 30th 2011
Start the academic on September
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation



என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
(Free Financial Sponsor for UK Visa) இதுவரை உத்தரவாதப் படுத்திய வீசாக்கள் 40க்கு மேல் கிடைத்துள்ளன.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777


# ஐ.நா. அறிக்கைக்கு ஆதரவு

இலங்கை போரின் இறுதி நிகழ்வுகள் குறித்து ஆராய்ந்த ஐ.நா. செயலருக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையை தான் வரவேற்பதாக கனேடிய நாடாளுமன்றத்திற்கு, கனேடிய புதிய ஜனநாயக கட்சியின் சார்பில் தேர்ச்தெடுக்கப்பட்டுள்ள முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்சபேசன் தெரிவித்துள்ளார்.

ஸ்கார்புரோ ரூச் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் விடுதலைப் புலிகள் அமைப்பு ஏற்கனவே அழிந்து விட்ட நிலையில் இனிமேல் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டு அவதியுறும் மக்களின் நலனை கவனிப்பதிலேயே தமது முழுக் கவனம் இருக்கும் என்றும் தெரிவித்தார்.

கனடாவுக்கு வரும் அகதிகள் விவகாரத்தில் அகதிகளை அவமரியாதைப்படுத்தாத வகையில் கனேடிய அரசாங்கம் செயற்பட வேண்டும் என்றும் அதற்காக தாங்கள் பாடுபடுவோம் என்றும் கூறினார். (ந-5)


**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை அரசு உத்தரவாதப் படுத்திய நிறுவனங்களாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் நம்பிக்கையையும் இலகுவாகப் பதிவு செய்து அடைந்து கொள்ள

தொடர்புகளுக்கு:-0729994777


# பிளேக்கை சந்திக்க மகிந்த மறுப்பு
# விசனத்தில் மேற்குலக நாடுகள்

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக் கடந்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்திருந்தபோது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்திக்க முயற்சித்த போதிலும், இச்சந்திப்பை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளதாக கொழும்பு ஊடக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் றொபேட் ஓ பிளேக் கொழும்பில் தங்கியிருந்த போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் ஜனாதிபதி செயலகத்திற்கு அறிவித்திருந்தது.

ஆனால் றொபேர்ட் ஓ பிளேக்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்திக்க முடியாதுள்ளதாக கவலை தெரிவித்து ஜனாதிபதி செயலகம் அமெரிக்கத் தூதரகத்துக்கு கூறியிருந்ததாகவும் இவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக்குடனான சந்திப்பை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தவிர்த்தமை தொடர்பில் இலங்கையின் மூத்த அமைச்சர் ராஜித சேனாரத்னவும், மேற்கத்தைய ராஜதந்திரிகளும் விசனம் தெரிவித்துள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் இணைந்து அமைச்சர் ராஜித சேனரத்னவும் றொபேர்ட் ஓ பிளேக்கை சந்திப்பார்கள் என அரசாங்கத்தரப்பில் முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், றொபேர்ட் ஓ பிளேக்குடனான சந்திப்பில் அமைச்சர் ராஜித சேனரத்ன கலந்து கொள்ளவில்லை.

அதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ றொபேர்ட் ஓ பிளேக்கை சந்திப்பதை தவிர்த்துக் கொண்டமைக்கு பல்வேறு காரணங்கள் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பின் மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கடந்த மாதம் வெளியிட்டிருந்த அறிக்கையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்பமே ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் ஆதிக்கம் செலுத்தி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் இக் குற்றச்சாட்டு மகிந்த ராஜபக்ஷவுக்கு கடுமையான கோபத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில் றொபேர்ட் ஓ பிளேக்கை சந்திப்பதை அவர் விரும்பவில்லை என கொழும்பு ஊடகம் ஒன்று கடந்த மாதம் தெரிவித்திருந்தது.

அதேவேளை ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக் கூறும் வகையில் கொழும்பு முழு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் றொபேர்ட் ஓ பிளேக் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்பட்டதாலும், அதனை நேரடியாகச் சந்திப்பதை ஜனாதிபதி தவிர்த்துக் கொண்டதாக ராஜதந்திர வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசை சந்தித்த றொபேர்ட் ஓ பிளேக் அமெரிக்காவின் சார்பில் இரு முக்கிய விடயங்களை வலியுறுத்தி கூறியுள்ளார்.

நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை கொழும்பு மேற்கொள்ளத்தவறும் பட்சத்தில், சர்வதேச பொறிமுறைகள் ஊடான விசாரணைகளை மேற்கொள்ளும்படி அமெரிக்கா வலியுறுத்தும் எனவும்,

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் ஆரோக்கியமான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு கொழும்பு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் எனவும் றொபேர்ட் ஓ பிளேக் அமைச்சர் பீரிஷிடம் வலியுறுத்தியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## அன்பு வாசகர்களே!

வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் கியூடெக்-கரித்தாஸ் எழுதிய கடிதத்திற்கான பதில் இன்று வெளிவருவதாக இருந்த போதிலும், தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 12.05.2011 அன்று வெளிவரும் என்பதை அறியத்தருகின்றோம். (ஆ-ர்)

## அறிக்கைக்கு...

பஸ்களில் கொண்டுவரப்பட்டவர்களிடமிருந்து கையொப்பம் பெறப்பட்டது. இதே வேளை நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக யாழ்.முற்றவெளி பகுதியிலிருந்து ஆரம்பித்தப் பேரணியொன்று யாழ். பஸ் நிலையத்தை வந்தடைந்தது.பேரணியில் வந்த வர்கள் ஐ.நாவுக்கு எதிரான பதாகைகளையும் தாங்கிருந்தனர். (ந-6)

## நோர்வே...

இது தொடர்பாக நோர்வே ஈழத்தமிழர் அவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நோர்வே நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் மீது சர்வதேச பிடியாணை பிறப்பித்து அவர்களை உரிய முறையில் விசாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நோக்கிலேயே வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. (ந)

# யாழ்.நகரில் போக்குவரத்து நெரிசல் மாற்று நடவடிக்கை எடுக்கப்படும்
# அமைச்சர் டக்ளஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் ஏற்பட்டுவரும் வாகன நெரிசல்களால் ஏற்பட்டுவரும் இடர்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலொன்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

யாழ்.மாநகர சபை மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற இக்கலந்துரையாடலில் யாழ்.நகரப் பகுதியிலுள்ள வாகன நெரிசல்களால் பொதுமக்களுக்கு ஏற்படும் இடர்பாடுகள் குறித்த விரிவாக ஆராயப்பட்டது.

இதன் பிரகாரம் தென்பகுதி உள்ளிட்ட தூர இடங்களிலிருந்து வரும் பேருந்துகள் பண்ணையில் அமைந்துள்ள தரிப்பிடத்தில் தரித்து நிற்க வேண்டுமெனவும் நகரத்தின் முக்கிய வீதிகளில் பொருட்களை நாள்தோறும் மாலை 6மணிக்கு பிறகு ஏற்றி இறக்க வேண்டுமென வும் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று அரச மற்றும் தனியார் பேருந்துகளின் போக்குவரத்து சேவைகள் தொடர்பாகவும் அதனால் பொதுமக்கள் எதிர் கொள்ளும் இடர்பாடுகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

இங்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்து தெரிவிக்கையில், எல்லோருடைய அபிப்பிராயத்தையும் பெற்றுக் கொண்டு இதனை நடைமுறைப்படுத்துவதே சிறந்த முடிபாக அமையும்.முக்கியமாக நகரத்தில் ஏற்பட்டுவரும் நெருக்கடியை கட்டுப்படுத்துவதற்காகவே இக்கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது.பொதுமக்களுக்கு ஏற்படும் சாதக பாதக நிலைகளை ஆராய்ந்ததுடன் அரச மற்றும் தனியார் பேருந்துகளின் துறைசார்ந் தோருடன் கலந்துரையாடி இறுதி முடிபெடுக்கப்படுமெனவும் உறுதிபடத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ், யாழ்.மாநகர பிரதி முதல்வர் துரைராஜா இளங்கோ (றீகன்), பொலிஸ் உயர் அதிகாரிகள், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் திருமதி பவானி பசுபதிராஜா, யாழ். மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ மற்றும் வர்த்தக சங்கத்தின் உள்ளிட்ட துறை சார்ந்த பலரும் கலந்து கொண்டனர். (ந-5)

## ஐ.நா.அறிக்கை...

உயர்மட்டக்குழு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இந்திய உயர்மட்டக் குழு கொழும்புக்கு அழுத்தங்களை ஏற்படுத்தலாம் என இவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக் கடந்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்திருந்த போது நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள விடயங்கள் நடைமுறைப்படுத்துவது குறித்த கொழும்பிடம் வலியுறுத்தி இருந்தார்.

அதேவேளை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் இந்திய உயரதிகாரிகளைச் சந்திக்க முற்பட்ட போது எதிர்வரும் ஜூன் மாதத்துக்கு முன்னர் அவர்களைச் சந்திக்க நேரமில்லை என புதுடில்லி தெரிவித்திருந்தது.

இந்நிலையில் நிபுணர்கள் குழுவின் அறிக்கை குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்தியாவின் உயர்மட்டக் குழு திடீரென கொழும்புக்கு விஜயம் செய்கின்றமை முக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கர்களால் கருதப்படுகின்றது.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் போர்க் குற்ற அறிக்கை தொடர்பாக ஆராய்வதற்காக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தலைமையில் புதுடில்லி குழுவொன்றை நியமித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்திய உயர் மட்டக்குழுவின் கொழும்பு வருகை ஐ.நா.அறிக்கையால் இலங்கையின் நிலைமை மோசமடைவதை சுட்டி நிற்பதாக இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந-5)

# காணி, பொலிஸ் அதிகாரம் இல்லாத தீர்வை ஏற்கமாட்டோம் - சுரேஷ்

(கொழும்பு)

காணி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் கொண்ட ஒரு அலகையே அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வலியுறுத்துவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.காணி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் இன்றிய எந்தத் தீர்வையும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

லக்பிம பத்திரிகையில் வெளியாகியிருந்த செய்தியொன்று குறித்து கருத்து வெளியிடும் போதே நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

காணி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் தொடர்பில் அரசுடன் பேசுவதில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளதாக லக்பிம நேற்றுச் செய்தி வெளியிட்டிருந்தது.இது தொடர்பில் கருத்து வெளிட்ட சுரேஷ் பிரேமச்சந்திரன்,

இவ்வாறான தகவல்களை வெளியிடுவதன் மூலம் தமிழ் கூட்டமைப்பின் மீதும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் பிரதிநிதிகள் மீதும் தமிழ்மக்கள் அவநம்பிக்கை கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட பிரசாரம் கட்விழ்த்து விடப்பட்டுள்ளமை புலனாகின்றது.



அரசாங்க தரப்பினரும் அவர்களின் சார்பு நிலை ஊடகங்களும் கடந்த காலத்திலும் இப்போதும் இவ்வாறான மூன்றாந்தர பிரசாரங்களை கட்டவிழ்த்து விடுகின்ற போதிலும் பல தசாப்தங்களாக தொடரும் இன முரண்பாட்டிற்காக தமிழ்மக்கள் செய்து வரும் தியாகங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு போதும் விலைபேசாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)


**தவறிவிட்டது**

பிரம்படி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு கொக்குவில் எனும் முகவரியுடைய இராசேந்திரம் சசிந்தன் என்பவரது தே.அ.அட்டை (80366540 9V) சாரதி அனுமதிப்பத்திரம் என்பன கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த தனியார் பஸ்ஸில்பேர்சுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே: 0776630466

(4882)

# இன்று ஒரு தகவல்

## கபீர்தாசர்

ஒருநாள் கபீர்தாசர் வீட்டில் நிறைய பக்தர்கள் குழுமியிருந்தார்கள். எல்லோரும் அவரைச் சுற்றி அமர்ந்து தங்களின் ஆன்மீகம் பற்றிய சந்தேகங்களைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களின் கேள்விகளுக்கு கபீர்தாசர் பொறுமையாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார். இவ்விதம் அன்றைய பொழுது கழிந்தது. விளக்கம் பெற்றவர்கள் வீட்டுக்குச் சென்று விட்டார்கள்.

மாலை 5 மணியளவிருக்கும் ஒருவர் மட்டும் போகாமல் உட்கார்ந்திருந்தார். அவரிடம் கபீர்தாசர் உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அந்த ஆள் பதில் சொல்லத் தயங்கினார்.

கபீர் அவரைப் பார்த்து விட்டு, ' உங்கள் முகத்தில் காணப்படும் துன்ப அறிகுறிகளைப் பார்த்தால்... உங்களது இல்லற வாழ்க்கை இன்பமாக இல்லை என்று தோன்றுகிறது... அப்படித்தானா?' என்று வினவினார்.

'' அப்படித்தாங்க...! நானும் என் மனைவியும் மகிழ்ச்சியுடன் குடும்பம் நடத்தவில்லை...! எப்பவும் சண்டை தான். நான் என்ன சொன்னாலும் அவள் கேட்பதில்லை... எதிர்த்துப் பேசுகிறாள்...! கோபப்படுகின்றாள்...! எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை'' என்று குறைபட்டுக் கொண்டார்.

கபீர்தாசர்'' சரி... இன்னும் சிறிது நேரம் இங்கேயே இருங்கள்... யோசித்து பதில் சொல்கிறேன்'' என்று கூறிவிட்டு எழுந்து வீட்டுக்குள் சென்றார்; ஒரு பெரிய நூல் கண்டை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

வீட்டின் வெளிப்பக்கம் வெளிச்சத்தில் உட்கார்ந்தார். அந்தப் பெரிய நூல்கண்டு கன்னா பின்னா வென்று சிக்கியிருந்தது. கபீர் அதில் இருந்த சிக்கல்களையெல்லாம் ஒவ்வொன்றாகப் பிரித்து எடுக்க ஆரம்பித்தார். வெளியில் அப்போது நல்ல வெளிச்சமிருந்தது.

இருந்தாலும் அவர் திடீரென்று உள்ளேயிருந்த தமது மனைவியைக் கூப்பிட்டு, ' இருட்டாக இருக்கிறது! விளக்கை ஏற்றி எடுத்து வா' என்றார். அந்த அம்மையாரும் உடனே விளக்கேற்றி வந்து கபீரின் அருகில் வைத்தார்.

'' இவ்வளவு வெளிச்சம் உள்ளது இந்த நேரத்தில் விளக்கு எதற்கு?'' என்று அந்த அம்மையார் கேட்கவில்லை. மாறாக, பேசாமல் விளக்கை கொண்டு வந்து வைத்து விட்டுச் சென்றார். சிறிது நேரம் கழித்து அவர் இரு டம்ளரில் பால் வைத்து விட்டுச் சென்றார். இரண்டு பேரும் அதை குடிக்க ஆரம்பித்தனர்.

வந்திருந்தவரின் முகம் சுருங்க ஆரம்பித்தது. அவ்ரால் அதைக் குடிக்கவே முடியவில்லை. ஏனெனில் அந்த அம்மையார் பாலில் சீனிக்குப் பதிலாக உப்பைக் கலந்திருந்தார். வந்திருந்தவர் கபீரின் முகத்தைப் பார்த்தார். கபீரின் முகத்தில் எந்தவித வித்தியாசமும் தெரியவில்லை. அவர் பேசாமல் அந்தப் பாலைக் குடித்து கொண்டிருக்கிறார்.

அப்போது வீட்டுக்குள்ளேயிருந்த அம்மையார் '' பாலுக்கு சீனி போதுமா? இன்னும் வேண்டுமா?'' என்ற கேட்டார். அதற்குக் கபீர், '' போதும் இனிப்பு சரியாக உள்ளது.'' என்றார். வந்தவர் இதையெல்லாம் பார்த்துக் கொண்டேயிருந்து விட்டு, கபீரிடம், '' நான் கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் சொல்லவில்லையே'' என்றார்.

இதற்கு கபீர்தாசர்''நான் இப்போது என் மனைவிக்கு என்ன பதில் சொன்னேனோ அதுவேதான் உங்கள் கேள்விக்கும் பதில். எந்தக் குடும்பத்தில் கணவனும் மனைவியும் ஒருவர் குற்றத்தை இன்னொருவர் பார்க்காமல் இருக்கிறார்களோ அந்தக் குடும்பம் பூலோக கைலாசம் என்று யசுர் வேதம் கூறுகிறது'' என்றார்.

இதில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு பெரும் படிப்பினை இருக்கிறது. அதாவது, குடும்பத்தில் ஒருவரை ஒருவர் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து நடந்து கொள்ள வேண்டும் என்பது தான் அது.

வாழ்க்கையில் நாமோ பிறரோ தவறு செய்வது இயல்பு. ஆனால் அதைப் பெரிதுபடுத்தாமல் இருப்பது தான் பண்புடமை.

' குற்றம் பார்க்கில் சுற்றமில்லை' 'ஒருவர் போன்ற இருவர் நட்பு' போன்ற அனுபவ மொழிகளை நாம் நினைவில் வைத்து கொண்டால் நாம் வாழ்க்கையில் சந்திக்க வேண்டிய எத்தனையோ பிரச்சினைகள் தலை தூக்காமலே போய்விடும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கொழும்பு பல்கலை. அமைந்துள்ள இடத்தில் கசினோ விடுதி அமைக்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

கொழும்புப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடத்தில் கசினோ விடுதிகள் மற்றும் ஐந்து நட்சத்திரக்ஹோட்டலொன்றையும் நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அத்துடன் கொழும்பு பல்கலைக்கழக சுற்று வட்டாரத்தில் உள்ள வீதிகளையும் கசினோ வீதிகளாக மாற்றியமைக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது.

உள்நாட்டு வர்த்தகர்களுக்கு கொழும்பு மத்தியில் உயர்மட்ட வர்த்தக வலயமொன்றை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடனேயே அரசாங்கம் பிரஸ்தாப திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

அதனையடுத்து கொழும்புப் பல்கலைக்கழகத்தை திவுலப்பிட்டிய அல்லது ஹோமாகமயில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு விளையாட்டரங்கின் அருகில் மீள்நிர்மாணிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இதனைப் போலவே கொழும்பு இராணுவத் தலைமையகம் அமைந்திருந்த இடத்தையும் சிங்கப்பூரின் ஷாங்கிரிலா ஹோட்டல் நிறுவனத்திற்கு ஆயிரத்து 387 கோடிகளுக்கு அரசாங்கம் விற்பனை செய்திருந்தது.

ஆனால் பத்தரமுல்லயில் இராணுவத் தலைமையகத்தை மீள் நிர்மாணிப்பதற்கு 3 ஆயிரத்து 850 கோடிகள் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இலங்கையில் அரிய வெள்ளை நிற மீன்கொத்தி

இலங்கையில் மகாவலி அபிவிருத்தி திட்டத்துக்கு அருகில் வைத்து முற்றிலும் வெள்ளை நிறம் உடைய அரிய மீன் கொத்திப் பறவை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்பறவை தெஹிவளை மிருகக் காட்சிச்சாலைக்கு பொலனறுவை வனவிலங்கு அலுவலகத்தினரால் அனுப்பிவைக்கபட உள்ளது.காட்டில் இப்பறவையை விட்டால் ஏனைய பறவைகள் கொத்தித் துன்புறுத்தக் கூடும் என்று வனவிலங்கு அதிகாரிகள் அஞ்சுகின்றனர். (ஸ்ரீ-2)

# தொடர்பாடல் கணனி தொழிநுட்ப பயிற்சிநெறிக்கு விண்ணப்பம்

(நவாலி)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் தொடர்பாடல் கணனி தொழிநுட்பம் ஆகிய பயிற்சிகளை வழங்குவத்றகு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்போர் க.பொ.த.(சா/த) பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாமல் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன் காரைநகர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 17 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். இப்பயிற்சிநெறி 6 மாத காலப்பயிற்சிநெறியாகும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் பொறுப்பதிகாரி, இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை பயிற்சி நிலையம், வலந்தலை, காரைநகர் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பொறுப்பதிகாரி வே.சிறீகுகன் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சிகள் யாவும் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாகும். (ஸ்ரீ-3-26)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 65 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 70 | 60 |
| தக்காளி | 80 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 55 | 50 | 40 |
| கோவா | 40 | 80 | 50 |
| கரட் | 70 | 100 | 70 |
| பூசணி | 25 | 30 | 30 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 30 | 40 | 25 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 130 |
| பெரிய வெங்காயம் | 55 | 60 | 60 |
| பாகற்காய் | 100 | 100 | 110 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 30 |
| கருணைக் கிழங்கு | -- | 90 | 80 |
| பயற்றங்காய் | 70 | 50 | 40 |
| லீக்ஸ் | 70 | 80 | 60 |
| பீற்றூட் | 40 | 80 | 50 |
| கறிமிளகாய் | 60 | 100 | 70 |
| முருங்கைக்காய் | 450 | 350 | 300 |
| போஞ்சி | -- | 100 | 90 |
| கத்தரிதம்புள்ள | -- | 60 | 40 |
| கீரை - 1 பிடி | 15-20 | 30 | 25 |
| தேசிக்காய் | 120 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 60 |

# இராசி பலன்

*09.05.2011*
*சித்திரை 26 , திங்கட்கிழமை*
*சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு*
*சஷ்டி பிறபகல் 12.50 மணி வரை*
*புனர் பூசம் முற்பல் 7.39 மணி வரை*
*இராகுகாலம் 7.24-8.54 மணி வரை*
*சுபநேரம் 11.54-1.24 மணிவரை*
*சஷ்டி விரதம்*

**மேடம்** தொட்ட காரியம் வெற்றி பெறும், அழகு சாதனப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பெற்றோர்மீது பாசம் கூடும், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உதவும்.

**இடபம்** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்,சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறைகாட்டுவர், வம்பு வழக்குகள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

**மிதுனம்** நாவன்மையால் நல்ல பெயரெடுக்கும் நாள்,தொழில் நன்மையுண்டு, கடினமான பணியைக்கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள் ,வெளியூர் பயணங்களால் ஆதாயம் கிடைக்கும்.

**கடகம்** இறைவழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், பயணங்களின் மூலம் நல்ல தகவல்களைப் பெறுவீர்கள்,நண்பர்களின் ஒத்துழைப்பால் நன்மையடைவீர்கள்.

**சிங்கம்** வேலைப்பளு அதிகரிக்கும், காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை அமையலாம்,சுப செலவுகள் அதிகரிக்கும், திடீர் மாற்றங்களால் ஏற்றம் காண்பீர்கள்.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும்,நண்பர்கள் வீடு தேடி வருவர்,தொழிலில் நல்ல வருமானம் கிடைக்கும், பெருமையடைய வேண்டிய நாள்.

**துலாம்** தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் மேலோங்கும்,தொழிலில் ஏற்பட்ட இடையூறுகள் அகலும், புத்துணர்வுடன் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் நாள், அதிர்ஷ்டவாய்ப்புக்கள் கூடிவரலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், தொழில் நன்மையுண்டு.


**தனுசு** எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, பயணத்தில் விழிப்புணர்வு தேவை, கௌரவக்குறைவான நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மகரம்** பிரிந்த நண்பர்கள் மீண்டும் ஒன்று சேர்வர்,அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மறக்க முடி யாத சில சம்பவங்கள் நடைபெறலாம்.

**கும்பம்** தொழிலில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும்,குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும்,அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்,போசன சுகமுண்டு.

**மீனம்** பிள்ளைகளால் மகிழ்ச்சியடையும் நாள்,பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பணத் தேவைகள் பூர்த்தியாகும், எடுத்த கருமங்கள் கைகூடும்.

வளவன்





ஐ.நா. செயலாளர் பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக பத்து இலட்சம் கையொப்பம் சேகரிக்கும் வேலைத்திட்டத்திற்கு அமைவாக யாழ் பேருந்து நிலையத்தில் நேற்று கையொப்பம் சேகரிக்கப்பட்டது. இதில் கையொப்ப வேட்டை இடம்பெறுவதையும், கண்டனப் பேரணி இடம்பெறுவதையும், தனியார் பேருந்து அமைச்சர் சி.பி.ரத்நாயக்க உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# இலங்கையின் போர்க்குற்றம் சுயாதீன விசாரணை அவசியம்

## பிரித்தானியா மீண்டும் அழுத்தம்

(லண்டன்)

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான, காத்திரமான விசாரணைகள் மேற் கொள்ளப்படவேண்டும் என பிரித்தானியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இத்தகையதொரு செயன்முறை யையே பிரித்தானியா விரும்புவதாக பிரித்தானிய நாடாளுமன்றத்தின் பொதுச்சபையில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த போது அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சரும், பிரதி வெளிவிவகார அமைச்சரும் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பான பிரித்தானியாவின் நிலைப்பாடு மற்றும் பொதுநலவாய நாடுகளில் ஒன்றான இலங்கை மீது நடவடிக்கை எடுக்கப்படுவது தொடர்பில் பிரித்தானியாவின் நிலைப்பாடு குறித்து அந் நாட்டின் நாடாளுமன்றத்தின் பொதுச் சபையில் கடந்த 3 ஆம் திகதி லிபரல் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சைமன் ஹியுஸ் கேள்வி எழுப்பியிருந்தார்.

இவரது கேள்விகளுக்குப் பதிலளித்த பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹக் இவ்வறிக்கை குறித்த இலங்கை அரசாங்கத்தின் கருத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் அவர்களின் பதில் கொழும்பின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் எனவும் கூறியிருந்தார்.

அதேவேளை பிரித்தானிய நாடாளுமன்றத்தின் பொதுச்சபையில் கடந்த 6 ஆம் திகதி அந்நாட்டு வெளிவிவகாரபிரதி அமைச்சர் அலிஸ் ரெயர் பேர்ட் கருத்துத் தெரிவிக்கையில், போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து சுயாதீனமான நம்பகத் தன்மை வாய்ந்த விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையே பிரித்தானியா விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை அரசாங்கத்தின் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு எதிர்வரும் 15 ஆம் திகதி வெளியிடவுள்ள அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான எமது நிலைப்பாட்டினையும் நாம் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம். அதேவேளை உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு தமது அறிக்கையில் எதனைப் பரிந்துரைக்கப் போகிறது என்பதை நாம் முற்கூட்டியே குறைகூற முடியாது.

இலங்கையில் இனங்களுக்கு இடையில் நிலையான தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பமாக இவ் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்டுக் கொள்கின்றோம் என அலிஸ்ரெயர் பேர்ட் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

## கலைப்பணிக்காய் தன்னை அர்ப்பணித்த கலைஞானச் சுடர் டானியல் தேவமதுரம்



சிரித்த முகமும் நீறணிந்த பரந்த நெற்றியும், கருத்தும் கொண்ட கதையும், நித்திய வீச்சாகக் கொண்டு வாழ்ந்து, சேவை செய்வதே வாழ்வின் பொருள் இலக்கணம் என்பதை தனது நடைமுறையால் சமூகத்திற்கு உணர்த்திய மறைந்த அமரர் டானியல் தேவமதுரத்தின் நினைவுகளோடு சில குறிப்புக்களை வரையவேண்டிய பொறுப்பாளனாக இங்கு காணப்படுகின்றேன்.

அமரர் டானியல் தேவமதுரம் என்ற பெயர் ஒரு கிறிஸ்தவ சமூகத்தினை சேர்ந்தது என்று எண்ணினோமென்றால் அது தேவமதுரத்தினைப் பொறுத்தவரையில் தவறாக அமைந்துவிடும். அவரது நீறணிந்த பரந்த நெற்றியும் அவரது சிரிப்பும் அவ்ரை ஒரு சிறந்த சிவ பக்தனாக எடுத்துக் காட்டியது. எம்மதமும் சம்மதம் என வாழ்ந்து, சமூக சேவை புரிந்த ஓர் இனிய மனிதரை எமது சமூகம் இழந்துவிட்டது.

அமரர் டானியல் தேமதுரம் அவர்கள் மறைந்து 30 நாட்களாகின்றன என்று நினைக்கவே முடியாதுள்ளது. ஏனெனில் அன்னாரது பரந்த முகத்தில் நித்தியமாக மலரும் அக்குறுஞ்சிரிப்பே அவருடன் பழகியோருக்கு நினைவில் நீண்டிருக்கும். அத்தகையதோர் வடிவம் வாழ்விலிருந்து திடீரென மறைந்தமையை எமது உள்ளம் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.

அன்னார் கல்வி நிர்வாக சேவையில் ஓர் உயர் அதிகாரியாகப் பணிபுரிந்தமையின் பின்னணியில் பெற்றுக்கொண்ட கல்வியியல் -வாழ்வியல் சிந்தனைகள், ஆங்கில மொழிப் புலமையூடாக ஈட்டிக் கொண்டிருந்த அரிய தத்துவக் கருத்துக்கள் போன்றவற்றை தனது நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வதற்குத் தயங்குவதேயில்லை.

உலக வாழ்வியக்கம் தொடர்பாக அவர் மிகவும் தெளிவான சிந்தனையுடையவராக வாழ்ந்து வந்திருந்தார். வாழ்வின் வெற்றியின் இரகசியம் என்பது ஓர் வரையறைக்குள் வாழப்பழகிக் கொள்வது என்பதேயாகும்.

வரையறை மிகத்தெளிவாக அமைக்கப்பட்டிருக்காவிடின் வாழ்வு பற்றிய திட்டமிடல் நடைமுறைச்

### மறைந்தார் மாண்பு

சாத்தியத்தினை பெருமளவிற்கு இழந்துவிடும் என்பது அமரர் டானியல் தேவமதுரம் அவர்களின் நிலைப்பாடாக காணப்பட்டது. பிறப்பு என்றொரு கோட்பாடு உண்டெனில் இறப்பு என்றொரு நித்தியமான செயல்வினை வடிவமும் மனித வாழ்வில் வடிவம் பெறும் என்பது அவரது தத்துவமாகும். இத்தகைய பிறப்பிற்கும் இறப்பிற்குமிடையே இயற்கையினால் இரட்சிக்கப்பட்ட மானிட சமுதாயத்தில் சிலர் மனித நேயத்துடனான மனிதராவதும், மாவீரம் காக்கும் மண்ணின் மைந்தராவதும், இன்னும் ஒரு சிலர் மனிதருக்குள் மாணிக்கமாவதும் நிகழ்ந்தேறுகின்றன.

கடமையை நேசிப்போர், கலையை வளர்ப்போர் என இயற்கையால் வரமளிக்கப்பட்டோர் பட்டியல் மானிட சமூகத்தில் நீண்டு செல்வதனைக் காணலாம்.

மானிட வாழ்வில் எத்தனை பல அங்கங்கள்!, சிந்தனைகள்–சாதனைகள், விருப்பு–வெறுப்புக்கள், தன்னலம்–பிறர்நலம், பொதுநலம் எனத்தனது வாழ்வில் பெரும் பகுதியை உள்ளடக்கிய வகையில் அமரர் டானியல் தேவமதுரமும் தனது வாழ்க்கைப் பயணத்தில் பயணித்து வந்திருந்தார்.

ஒரு நிர்வாகியாக, அறிவியல் வழிகாட்டியாக, தமிழ்மொழியால் கவிஞராக சமூகப் பண்பாட்டியக்கங்களுக்கு தலைமைதாங்கி, நல்லூர் கலாசாரப் பேரவையினையும் வழிநடத்திச் சென்றிருந்த திறனை அமரர் டானியல் தேவமதுரத்தின் பணிகளிலிருந்து கண்டு கொள்ள முடிகிறது. அவருடைய அந்த ஈடுபாட்டின் முத்தாரமாக, சாட்சியாக இன்றும் அவரது நல்லூர் கலாசாரப் பேரவைக் கீதம் காணப்படுவது எம்மை உவகையடையச் செய்வதாக உள்ளது.

அமரர் டானியல் தேவமதுரம் அவர்கள் பிறந்ததும் வாழ்ந்ததுமான ஒரு பாக்கியத்தினை அரியாலை என்ற பேரூர் பெற்றிருந்தது.

கவியினால் தமிழ் தழைத்தது;
மொழியானால் நிலம் செழித்தது;
அரியாலையின் வரையிலாப் புகழ் பரந்த உலகில் விரிந்து செல்ல இத் தமிழ்க்கவி புனைந்த பா வடிவங்கள் முத்தாரமிட்டன.

அதனால் நல்லூர் கலாசாரப் பேரவைவளர்ச்சி கண்டது. நல்லூர் கலாசாரப் பேரவையின் உப செயலாளர் என்ற கடமையினூடாக அமரர் டானியல் தேவமதுரம் ஈன்றெடுத்த மதுர கீதங்கள் இன்றும் ஒலித்த வண்ணமேயுள்ளன.

பேராசிரியர்
செல்லையா கிருஷ்ணராசா
வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


## இலங்கைப் பிரஜை கைது

இந்தோனோசியாவில் இருந்து அவுஸ்திரேலியாவிற்கு படகு மூலம் செல்ல முனைந்த இலங்கை பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியா மாத்திரமின்றி கனடா போன்ற ஏனைய சில நாடுகளுக்கும் அகதி அந்தஸ்து கோருவோர் பலர் செல்வதற்கு தயாராக இருப்பதாக அந்த நபர் தகவல் வெளியிட்டுள்ளார்.

மலேசியாவுடனான பறிமாற்று ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே குறித்த அகதி அந்தஸ்து கோருவோர் வெளிநாடுகளுக்கு செல்வதாக அந்த நபர் தகவல் வெளியிட்டுள்ளார்.

தற்சமயம் அவுஸ்திரேலியா செல்லும் நிலையில் கைது செய்யப்பட்ட இலங்கை பிரஜை ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் அகதி அந்தஸ்து உரித்தை பெற்றுள்ளவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)



ஜப்பானின் நிதியுதவியுடன் யாழ்.போதனா வைத்திய சாலையில் நிர்மாணிக்கப்படும் புதிய தொடர்மாடிக் கட்டட பணிகள் நவீன பொறிமுறைகள் மூலம் நடைபெறுவதைப் படத்தில் காணலாம்

# சம்பள உயர்வு கோரிப் போராடும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்

இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கையின் அனைத்துப் பல்கலைக் கழகங்களிலுமுள்ள சிரேஷ்டநிலை விரிவுரையாளர்கள் தங்களது தன்னார்வநிலையுள்ள பதவிகளான துறைத்தலைவர்கள், இணைப்பாளர்கள், மாணவ ஆலோசர்கள் போன்ற பதவிகளைத் துறக்கின்றார்கள்.

உறுதியளிக்கப்பட்ட சம்பள உயர்வு வழங்கப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவித்து மேற்கொள்ளப்பட்ட ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் பயனளிக்காத நிலையில் இப்போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இப்போராட்டத்தினை முன்னெடுக்கும் அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்துடன் சகோதர பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்கள் கைகோர்த்துள்ளன. ஜனாதிபதி,அமைச்சர் பசில் ராஜபக்ஷ, உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க மற்றும் நிதியமைச்சின் செயலாளர் டீ.பீ.ஜெயசுந்தர ஆகியோருடனான பேச்சுவார்த்தைகளின் போது, கடந்த வருடத்திற்கான வரவு- செலவுத்திட்டத்தில் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கான சம்பளம் அதிகரிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் கோரப்பட்ட சம்பள உயர்விற்குப் பதிலாக, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஊக்குப்படி என்ற பெயரில் அடிப்படைச் சம்பளத்தில் 25% தருவதாக 20.04.2011 அன்று இறுதியாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 1/2011 இன்மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தாங்கள் கேட்கும் நியாயமான கோரிக்கையை இச்சிறிய தொகை அதிகரிப்பால் அரசு திசை திருப்ப முயல்கிறது என்பதே பல்கலைக்கழக அனைத்து ஆசிரியர் சங்கங்களின் வாதமாகும். இப்பதவி விலகல்களின் மூலம் விரிவுரைகள் பெரிதும் பாதிக்கப்பட்டாத போதிலும், நிர்வாகச்சுமை பீடாதிபதிகளில் சுமத்தப்படுவதோடு, பேரவைக்கூட்டங்கள் நடாத்துவதற்கு பாதிப்பு ஏற்படுவதால் பரீட்சை முடிபுகள் வெளியிடப்படுவதும் தாமதமாகும். காலப்போக்கில் பல்கலைக்கழக நடவடிக்கைகள் முடங்கநேரிடும்.

மேலும் க.பொ.த உயர்தரப்பரீட்சை தொடர்பான பணிகளையும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் புறக்கணிக்க உள்ளனர். மேற்படி பரீட்சையில் வினாத்தாள் தயாரிப்பது முதல் பிரதம பரீட்சகராகத் தொழிற்படுவது வரை பல்கலைக்கழக ஆசிரியர்களே பிரதான பங்கினை வகிக்கின்றனர். மேற்படி பணிகளை, பல்கலைக்கழக ஆசிரியர்களுக்குப் பதிலாகப் பாடசாலை ஆசிரியர்கள் மூலம் நிறைவேற்ற அரசு முயன்றபோதும், அகில இலங்கை ஆசிரியர்சங்கம் தங்களது மறுப்பினைத் தெரிவித்ததன் மூலம், பல்கலைக் கழக ஆசிரியர்களின் மேற்படி போராட்டத்திற்கான ஆதரவினைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் தாக்கங்களினை நன்குணர்ந்ததாலேயே, உயர்கல்வி அமைச்சரும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரும் இப்போராட்டத்தினைக் கைவிடுமாறு கேட்டுள்ளனர். "போராட்டத்தில் ஈடுபட்டு அரச துரோகிகளாக வேண்டாம்" என அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் அவர் குறிப்பிட்ட ஒரு விடயம் "5% உயர்வுகிடைத்த ஏனைய அரச ஊழியர்களே அமைதியாக இருக்கும்போது 36% சம்பள உயர்வு பெறப் போகும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் போராடுவதா?" என்பதாகும்.

இலங்கையைவிடத் தனிநபர் வருமானம் குறைந்த தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையிலேயே பல்கலைக்கழக ஆசிரியர்கள் மிகக்குறைந்த சம்பளம் பெறுகின்றார்கள். நாங்கள் கேட்பது இத்தகைய நாடுகளில் வழங்கப்படும் மிகவும் குறைந்த சம்பளமே என்பது அனைத்துப்பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் வாதம்.

பல்கலைக்கழக ஆசிரியத் தொழில் தனித்துவமாகக் கருதப்பட வேண்டிய ஒன்றாகும். முதல் வகுப்பு அல்லது இரண்டாம் தர உயர் பிரிவில் சித்தி எய்தியவர்களே பல்கலைக்கழக ஆசிரியர்களாக நியமனம் பெறுகின்றனர்.

வேறிடத்தில் இவர்களுக்கு அதிக சம்பளம் கிடைக்குமெனில் இவர்கள் அத்துறைகளில் நியமனம் பெறுவதால், விரிவுரையாளர்களாகத் தெரிவாவோர் தரம் கேள்விக்குறியே. மேலும், எட்டு வருடத்தினுள் பட்டப்பின் படிப்பினை முடிக்க வேண்டும். நீண்டகாலத்தினைப் பட்டப்பின் படிப்புகளில் செலவழித்து விசேட தகுதிகள் பெற்றவர்கள், சம்பளம் போதியளவு வழங்கப்படாதபோது வெளிநாடுகளுக்குச் செல்வது தவிர்க்க முடியாததே. ஏனெனில், வெளிநாடுகளில் இவர்களால் பல மடங்கு ஊதியத்துடன் கௌரவமாக வாழமுடியும். இருந்தபோதும் பலர் இங்கு தங்கி நிற்பது மண்ணின் மீதும் கொண்ட பாசத்திலேயே. இருந்தபோதும் வாழ்க்கைச் செலவு உயர்விற்கேற்ப நீண்டகாலமாக போதிய சம்பள உயர்வு வழங்கப்படாவிடின் அவர்களின் வெளியேற்றத்தில் குற்றங்காண முடியாது. இன்றைய போட்டி மிகுந்த உலகில், ஒரு நாட்டினுடைய முன்னேற்றம் மூளை வளத்திலும் தொழில்நுட்ப வளங்களிலுமே தங்கியுள்ளது. பல வல்லரசு நாடுகள் எத்தகைய விலை கொடுத்தாவது புத்திசாலிகளை வாங்குவதற்குப் போட்டிபோடுகின்றன.

புலமைப் பரிசில்கள் வழங்கப்படுவதன் நோக்கமும் அஃதே. அத்தகைய மூளை வளவாளர்க ளும், பல மூளைசாலிகளை உருவாக்குபவர் களுமான பல்கலைக்கழக ஆசிரியர்கள் விசேட இடத்தில் வைத்துப் பார்க்கப்பட்டு, அவர்களின் வெளியேற்றம் தடுக்கப்படல் வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமிருக்காது என்றே நம்புகிறேன். அதற்கான ஒரே வழி அவர்கள் கௌரவமாக வாழ்வதற் கேற்ற ஊதிய உயர்வினை வழங்குவதாகும்.

தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குவதன் மூலமும், வெளிநாட்டு மாணவர்களைக் குறிப்பிட்ட வீதத்தில் (5%) அனுமதிப்பதன் மூலமும் அதிக சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதே அரசின் வாதம். இவ்வாறு செய்வதால் இலவசக் கல்விக்குச் சாவுமணி அடிக்கப்படும் என்பது மட்டுமல்லாது, பணமிருந்தால் மட்டும் போதும் பட்டம் பெற்றுவிடலாம் என்ற நிலை பட்டதாரிகளின் தரத்தில் பாரிய வீழ்ச்சியை நிச்சயம் ஏற்படுத்தும் என்பதே பலரது கருத்தாகும்.

நிற்க, உரிமைகளுக்காக எவ்வித இனமத பேதமின்றி ஒன்றிணைந்துள்ள பல்கலைக் கழக ஆசிரியர்கள் கடமைகளைச் செய்வதிலும் ஏனையோருக்கும் முன்மாதிரியாக விளங்குவார்கள் எனலாம். தரமான பல்கலைக் கழக ஆசிரியர் சமூகத்திற்கு முன்மாதிரியாகத் திகழ்வார். சமூகத்தினதும் காலத்தினதும் தேவைக்கேற்பவே பட்டதாரிகளை உருவாக்குதல் அவரது கடமையாகும். அப்பட்டதாரிகளே எதிர்காலத்தில் சமூகத்தினை வழிநடத்துவபர்கள். எனவே, சமூகத்தினை வழிநடத்தும் பாரிய பொறுப்பு அவர்களுக்கு உண்டு. சில பல்கலைக்கழகங்களில் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இவ்வாறு நடைபெறாது என்றே கருதுகிறேன்) சிரேஷ்ட நிலையிலுள்ள சில விரிவுரையாளர்கள், மாணவர்கள் பணம் செலுத்திக் கற்கும் கற்கை நெறிகளுக்குத் தாங்கள் கற்பித்துக் கொண்டு, உள்ளக பல்கலைக்கழக மாணவர்களுக்கு இளம் நிலை விரிவுரையாளர்களைக் கொண்டு கற்பிக்கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பட்டதாரிகளின் தரத்தினை எவ்வாறு எதிர்பார்க்கலாம்.

மேலும், குறித்த துறைசார்ந்த அறிவினைத் தேடுவதும் ஆய்வுகளை மேற்கொள்வதும் ஒரு பல்கலைக்கழக ஆசிரியரின் தலையாய கடமையாகும். இது கணனி யுகம். எத்தகைய தகவல்களையும் நொடிப்பொழுதில் பெறலாம். மாணவர்கள் வயது காரணமாக எதையும் அறிய வேண்டும் என்ற காரணத்தால் புதிய புதிய தகவல்களைப் பெற்றிருப்பர்.

எனவே தேடலும் ஆய்வும் இல்லாத ஆசிரியர் தாக்குப்பிடிக்க முடியாது. கிழிந்து போன குறிப்பையே காலாகாலமாக வாசிக்கிறார்கள். மாணவர்கள் ஆர்வங் காரணமாக கேள்வி கேட்பதை வேறு வழிகளில் அடக்குகிறார்கள் என்பவை ஒரு சில ஆசிரியர்கள் பற்றிய மாணவர்களது ஆதங்கம் ஆகும். இதுவரை காலமும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்த யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில், பெரும்பாலான ஆசிரியர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்தமைக்கு சமூகம் என்றென்றும் நன்றிக் கடன் பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில், போட்டி மிகுந்த உலகின் எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் வகையில் வினைத்திறன் மிக்க பட்டதாரிகளை உருவாக்க வேண்டிய பாரிய வரலாற்றுப் பொறுப்பு பல்கலைக்கழகங்களுக்கு உள்ளது.

எனவே, மிகவும் புதிய, பொருத்தப்பாடான தகவல்கள் உடனான கற்பித்தலுக்காக, தேடல்களுக்கும் ஆய்வுகளுக்கும் தமது பெரும்பாலான நேரத்தினை செலவிடும் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சம்பள உயர்வு கேட்பது யாராலும் மறுக்கமுடியாததே.

**Dr. செ. கண்ணதாசன்,**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**மருத்துவபீடம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

## இலங்கை-இஸ்ரேலுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கை மற்றும் இஸ்ரேலிய அரசாங்கங்களுக்கு இடையேயான மேலும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தற்போது இலங்கைக்கு வருகை தந்துள்ள இஸ்ரேலிய விவசாய அமைச்சர் ஓரில் நொக்கட்டாக்கி மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான இந்த ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதன்மூலம் பல இலங்கை விவசாய துறைக்கு பல்வேறு நன்மைகள் கிடைக்கப் பெறும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ-2)









வடமராட்சி தெற்கு,மேற்கு பிரதேச செயலகத்தின் சமுர்த்தி புலமைப்பரிசில் வழங்கும் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கி ஆசீர்வதிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கரவெட்டி செய்தியாளர்.)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மட்டுவில் வேரற்கேணி அருள்மிகு ஸ்ரீகந்தசுவாமி திருக்கோயில் மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும்.

இவ்வுற்சவத்தில் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 17ஆம் திகதி காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும். (ஸ்ரீ-2)

## கலை இலக்கியப் போட்டிகள்

(சாவகச்சேரி)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் இலக்கியப் போட்டிகள் இவ்வருடமும் பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய மட்டரீதியாக நடத்தப்படவுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு கட்டுரை, கவிதை, சிறுகதை ஆக்கங்க்ளும் மற்றும் கவிதை பாடுதல் , கட்டுரை போன்ற போட்டிகளும் திறந்த பிரிவில் பாடலாக்கம், நாட்டார் கலை விமர்சனம், சிறுகதையாக்கம் போன்றவை நடத்தப்படவுள்ளன.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னதாக பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், தென்மராட்சி என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபாலிலோ விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தேசிய கலை இலக்கியப் போட்டிகள்-2011 என குறிப்பிட வேண்டும்.

குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் ஆக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்றும் பாடசாலை மாணவர்கள் அதிபராலும் திறந்த போட்டியாளர்கள் கிராம அலுவலராலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-29)

## தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே, அனைத்து தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

## பொங்கல் விழா

(பொலிகண்டி)

அருள்மிகு கொற்றாவத்தை ஆண்டாவளவு வைரவர் பெருமான் ஆலய வருடாந்த பொங்கல் விழாவும் முனீஸ்வர பெருமானின் வேள்வியும் எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளதாகவும் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை பெரிய தம்பிரானுக்கான பொங்கல் விழாவும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-48)

## மஹா கும்பாபிஷேகம்

(பொலிகண்டி)

நவிண்டில் சக்கலாவத்தை அருள்மிகு வைரவர் தேவஸ்தான மகா கும்பாபிஷேக நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11.45 முதல் 12.30 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் பிரதம குரு ரெங்கசாமி குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை விநாயகர் வழிபாடு , கணபதி ஹோமத்துடன் கிரியைகள் ஆரம்பமாகி மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாகபூசை ஹோமம் தொடர்ந்து கும்பாபிஷேகம் என்பன நடைபெறவுள்ளதென தர்மகத்தா சபையினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-48)

## தேசிய நாட்டிய நாடக விழாவிற்கு விண்ணப்பங்கள் கோரல்

(சாவகச்சேரி)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு இலங்கை கலாசார கழகத்தின் தேசிய நடன, நாட்டிய நாடகப் பொம்மலாட்ட சபை ஆகியவற்றினால் 2011ஆம் ஆண்டிற்கான தேசிய நாட்டிய நாடக விழாவில் கலந்துகொள்ளவுள்ளவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி போட்டியில் கலந்துகொள்ளவுள்ள தென்மராட்சி பிரதேச கலைஞர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாக தென்மராட்சி பிரதேச செயலக கலாசாரப் பிரிவினருடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி.அ. சாந்தசீலன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

## அல்வாய் இளைஞர் சனசமூக நிலையம் மீண்டும் புதுப்பொலிவுடன் ஆரம்பம்

(கரவெட்டி)

வடமராட்சி அல்வாய் இளைஞர் சனசமூக நிலையம் பல வருடங்களுக்கு பின் மீண்டும் புதுப் பொலிவுடன் இயங்க ஆரம்பித்துள்ளது.

அல்வாய் இளைஞர் சனசமூக நிலையம் கடந்த 1996 ஆம் ஆண்டு இராணுவ முகாமாக்கப்பட்டபின் முற்றாக செயலிழந்திருந்தது.

கடந்த 2003 ஆம் ஆண்டு இராணுவ முகாம் அகற்றப்பட்ட பின் அப்பகுதி மக்களினால் மீண்டும் சனசமூக நிலைய செயற்பாடுகள் ஓரளவு ஆரம்பிக்கப்பட்டது.




அதைத் தொடர்ந்து கடந்த 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

இதில் தலைவராக எஸ்.மேனகன், செயலாளராக க.ரதீசன், பொருளாளராக பி.சந்திரபாபு, உப தலைவராக எஸ். தர்சன், உப செயலாளராக கே.ராகுலன் மற்றும் 5 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் சனசமூக நிலையத்தில் ஆலோசகராக கே.சுந்தரலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஸ்ரீ-3-24)

## சிறுவர் சித்திரப் போட்டிகள்

(அல்வாய்)

வடமராட்சி வலய கரவெட்டி கோட்டப் பாடசாலைகளுக்கான சிறுவர் சித்திரப் போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/நெல்லியடி மெதடிஸ்த மிசன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. அத்துடன் பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளுக்கான சிறுவர் சித்திரப் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/வடஇந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என வடமராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## வடமராட்சி தெற்கு,மேற்கு பிரதேசசபையால் எட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையினால் அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 8 வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதில் நான்கு வீதிகள் உட்பட பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைபெறவுள்ளன. இதற்கு சுமார் 50 இலட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

இதற்கமைய துன்னாலை தெற்கு வனந்தில் வீதி, அல்வாய் தெற்கு யமூலை வீதி, உடுப்பிட்டி தெற்கு பண்டகை வீதி, உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்க வீதி ஆகிய வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

அத்தோடு கரணவாய் கிழக்கு, மண்டாவில் குப்பை கொட்டும் இடத்திற்கான சுவர் அமைத்தல், நெல்லியடி ஆயுள்வேத வைத்தியசாலை புனரமைத்தல், துன்னாலை தெற்கு குமரன் குளவீதியில் மதகு அமைத்தல், வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலக வாகன தரிப்பிடம் அமைத்தல் போன்றவற்றை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைச் செயலர் திருமதி.தி. அன்னலிங்கம் மேற்கொண்டுவருகின்றார். (ஸ்ரீ-3-10)

## மாணவர்களுக்கான சித்திர, கவிதைப் பேட்டிகள்

(அல்வாய்)

*பன்மைத்துவக் கலாசாரம் ஊடாக சமாதானம்* எனும் தொனிப்பொருளில் மாணவர்களுக்கான சித்திர, கவிதைப் போட்டி 2011 பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்டது.

இப்போட்டியில் தெரிவு செய்யப்பட்ட சித்தரங்கள், கவிதைகள் போன்ற ஆக்கங்களில் மூன்று ஆக்கங்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படவுள்ளது.

இவ் ஆக்கங்கள் வலய மட்டப் போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டு வலய மட்ட தெரிவுகள் எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறும்.

இவ்வலய மட்ட ஆக்கங்கள் மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட ஆக்கத்துக்குரிய மாணவர்களுக்கு எதிர்வரும் ஆனி மாதம் 19 ஆம் திகதி நடைபெறும்.

மதர் ஒவ் ஸ்ரீலங்கா நிகழ்ச்சியில் பரிசில்கள் வழங்கப்படும் என வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# ஸ்பெக்டரம் சுனாமியால் கேள்விக்குறியாகும் கனிமொழியின் அரசியல் எதிர்காலம்?



தேசிய அரசியலில் பெண் தலைவர்களுக்கு இந்தியாவில் எப்போதும் பற்றாக்குறையே. அதுவும் மாநிலக் கட்சிகளிலிருந்து தேசிய அரசியலுக்கு வரும் பெண் தலைவர்கள் அரிது.

தமிழகத்திலிருந்து தேசிய அரசியலில் பங்கெடுத்த பெண்களை விரல் விட்டு எண்ணி விடலாம். தி.மு.க.வில் எம்.பி.யாகி டில்லி செல்பவர்களே தேசிய அரசியலில் தி.மு.க.வின் சார்பில் பங்கு பெறுவார்கள். அந்த வாய்ப்பு கனிமொழிக்கு கிடைத்தது. அவர் எம்.பி. என்ற அளவில் மட்டுமல்ல தி.மு.க. தலைவர் மற்றும் தமிழகத்தின் முதல்வர் கருணாநிதியின் மகள் என்பதால் கூடுதல் தகுதிகளைப் பெற்றவர்.

அவருக்குக் கிடைத்த வாய்ப்பின் மூலம் கட்சியின் நிலையை டில்லியில் நிலைப்படுத்துவதோடு தேசிய அளவில் தி.மு.க.வுக்கு ஒரு தலைவராக விளங்குவார் என எதிர்பார்க்கப்பட்டது. கட்சியிலிருந்து டில்லிக்கு அனுப்பப்படும் ஒருவர் கட்சி சொல்லும் கருத்துக்களை பிரதிபலிக்கக் கூடியவராக இருப்பார். டில்லியில் நிலவும் சூழலுக்கேற்ப அவரால் உடனடியாக பிரதிபலிக்க முடியாது. கட்சியின் கருத்தைக் கேட்டுதான் அவரால் செயற்பட முடியும்.

ஆனால் கட்சித் தலைவர் குடும்பத்திலிருந்து சென்ற கனிமொழிக்கு இந்த சங்கடம் இல்லை. அவரால் உடனடியாக செயற்பட்டு பின்னர் கட்சியின் அனுமதியை பெற்றுக் கொள்ளலாம். பல நேரங்களில் கட்சியின் நிலையைக் கூட அவரே உருவாக்கும் அதிகாரமும் பெற்றவர்.

இந்த சிறப்பு அம்சங்களைக் கொண்ட கனிமொழி டில்லியில் ஜொலிப்பார் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் ஸ்பெக்ட்ரம் விவகாரம் இந்த எதிர்பார்ப்புக்களை தவிடு பொடியாக்கிவிட்டது. வழக்கின் பின் விளைவுகள் அரசியலில் கடும் பாதிப்புக்களை அவருக்கு ஏற்படுத்தும் என்றே கூறப்படுகின்றது.

ஸ்பெக்ட்ரம் விவகாரம் தி.மு.க.வின் மதிப்பை டில்லியில் குறைத்துவிட்டது. கூட்டணிக் கட்சியாக இருந்தாலும் இப்பிரச்சினையில் விலகியே நிற்கின்றது காங்கிரஸ். அரசில் அங்கம் வகிக்கும் கட்சி தி.மு.க. என்றாலும் கூட ஒட்டுமொத்த பொறுப்பு உள்ளதாக காங்கிரஸ் கருதவில்லை.

இந்நிலையில் கனிமொழிக்கான நெருக்கடிகள் அதிகமாகவே இருக்கின்றன. ஸ்பெக்ட்ரம் விவகாரத்திலிருந்து காப்பாற்றுவதற்கு தந்தை என்ற முறையில் கருணாநிதி உதவிகளை செய்யலாம். ஆனால் கட்சி என்று வரும்போது அவரால் ஒன்றும் செய்ய முடியாது என தி.மு.க.வின் மூத்த நிர்வாகி ஒருவர் கூறுகிறார்.

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் டில்லி சி.பி.ஐ நீதிமன்றத்தில் ஆஜராகி பிணை மனுவை கனிமொழி தாக்கல் செய்துள்ளார். இனி குற்றப்பத்திரிகை நகல் வழக்கில் இருந்து விடுவிக்கக் கோரும் மனு விசாரணை, எதிர் மனு, மேல்முறையீடு என விசாரணைக் காலம் நீண்டு கொண்டே இருக்கும்.

இந்தப் பிரச்சினையில் அழகிரி, ஸ்டாலின் மற்றும் தி.மு.க.வினர் அரசியல் ரீதியாக எடுக்கும் நிலைகூட கனிமொழிக்கு எதிராகவே இருக்கும்.

ஸ்பெக்ட்ரம் பிரச்சினையிலிருந்து தி.மு.க. மீளுவதற்கு இன்னும் சில காலம் ஆகும். அதுவரை கனிமொழியின் முக்கியத்துவம் குறைக்கப்படும் என்றும் தெரிவிக்கின்றனர். மேலும் வழக்கிலிருந்து விடுபடுவதற்கான உதவிகள் மட்டுமே கட்சியிலிருந்து அவருக்குக் கிடைக்கும் என்றும் கூறுகின்றனர்.

இளம் வயதில் எம்.பி.யாகும் வாய்ப்பு கனிமொழிக்குக் கிடைத்தது. பெண் என்பதால் கூடுதல் ஆதரவும் அவருக்கு இருந்தது. கருணாநிதியின் வாரிசுகளில் ஆங்கில மொழியறிவு பெற்றவர் என்பதால் டில்லியில் சுயமாக செயற்படும் ஆற்றலும் பெற்றிருந்தார். இந்தச் சிறப்பம்சங்கள் அனைத்தையும் ஸ்பெக்ட்ரம் என்ற சுனாமி தூக்கி சாப்பிட்டு கனிமொழியை அரசியலில் பின்னுக்குத் தள்ளிவிட்டதாகவே மூத்த தலைவர்கள் கருதுகின்றனர்.

குடும்பத்தின் பல அதிகார மையங்களின் ஆளுமைக்கு மத்தியில் கட்சி உள்ள நிலையில் அவர் மீண்டு வருவதற்கு பல தடைக்கற்கள் உள்ளன. அவரை முன்னிலைப் படுத்துவதில் கட்சித் தலைமையே தயக்கம் காட்டும் நிலை கூட வரலாம். கனிமொழியின் அரசியல் எதிர்காலம் இப்போதைக்கு இருட்டாக உள்ளது என மூத்த கட்சியினர் கணிக்கின்றனர். ✦

## காஷ்மீருக்குள் ஊடுருவ 200 தீவிரவாதிகள் தயார்

### மத்திய அரசு எச்சரிக்கை

இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் தீவிரவாதிகளை பயன்படுத்தி நாசவேலையில் ஈடுபட்டு வருகிறது. இதற்காக பாகிஸ்தானில் தீவிரவாதிகள் பயிற்சி முகாம்கள் செயற்பட்டு வருகிறது. பயிற்சி முடிந்ததும் அவர்களை காஷ்மீருக்குள் ஊடுருவ செய்கிறது.

இதனால் எல்லையில் இந்தியப்படை விழிப்புடன் இருந்து கண்காணிக்கிறது. சமீபத்தில் பின்லேடனை அமெரிக்கா சுட்டுக் கொன்றதால் பாகிஸ்தான் பதற்றமும் அடைந்துள்ளது.

இந்தியாவும் தாக்குதல் நடத்துமோ என்று அஞ்சி எல்லையில் படைகளைக் குவித்துள்ளது. மேலும் பயிற்சி பெற்ற தீவிர வாதிகளை காஷ்மீருக்குள் ஊடுருவச் செய்யவும் திட்டமிட்டுள்ளது. இதற்காக பாகிஸ்தானில் பல்வேறு இடங்களில் உள்ள பயிற்சி முகாம்களில் 700 முதல் 800 தீவிரவாதிகள் வரை தயார் நிலையில் உள்ளனர்.

பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் மட்டும் 42 பயிற்சி முகாம்கள் செயற்படுவதை இந்திய உள்வுத்துறை கண்டித்துள்ளது. (ஸ்ரீ)

## துணை நிலை குற்றப்பத்திரிகையில் தயாளுவை ஏன் சேர்க்கவில்லை?

### சி.பி.ஐ.கூறும் வினோத காரணம்

ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரத்தில் கடந்த மாதம் 2ஆம் திகதி முதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இதில் முன்னாள் அமைச்சர் ராஜா உட்பட ஒன்பது பேரின் பெயர்கள் இடம்பெற்றன. கடந்த மாதம் 25 ஆம் திகதி துணை நிலை குற்றப்பத்திரிகையை சி.பி.ஐ.தாக்கல் செய்தது. இதில் ஸ்பெக்ட்ரம் உரிமத்தை டி.பி.ரியாலிட்டி குரூப்பை சேர்ந்த சுவான் நிறுவனம் பெற்றதற்காக அதே குருபைச்சேர்ந்த குசேகான் சினியுக் நிறுவனங்கள் மூலம் 214 கோடிரூபா பிரதிபலனாக எவ்வாறு கலைஞர் டி.வி இற்கு கைமாறியது என்பது குறித்து விளக்கப்பட்டுள்ளது.

இந்த துணை குற்றப்பத்திரிகையில் கனிமொழி, சரத்குமார் உள்ளிட்ட ஐந்து பெயர்கள் இடம்பெற்றிருந்தன. முதல்வர் கருணாநிதியின் மனைவி தயாளுவின் பெயர் இல்லை. குற்றப்பத்திரிகையில் தயாளுவை சேர்க்காமல் இருப்பதற்கு பா.ஜ.க. ஆட்சேபம் தெரிவித்து வருகிறது.

கலைஞர் டி.வி.யில் 60 சதவீத பங்குகள் வைத்துள்ள தயாளுவின் பெயரை குற்றப்பத்திரிகையில் சி.பி.ஐ. சேர்க்கவில்லை என்பது வியப்பாக உள்ளது. இதற்கு ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் நடந்த அரசியல் பேரம், அரசியல் நிர்ப்பந்தம், அரசியல் பயமுறுத்தல் ஆகியவை காரணமாக இருக்கலாம் என்று பா.ஜ.க தரப்பு கருத்து தெரிவித்துள்ளது.



இந்நிலையில் முதல்வர் கருணாநிதியின் மனைவியான தயாளுவின் பெயர் குற்றப்பத்திரிகையில் சேர்க்காமல் விட்டதற்கு கூறப்படும் காரணங்கள் தான் அரசியல் வட்டாரத்தில் ஆச்சரியமாக பேசப்பட்டு வருகிறது. தயாளு பெயர் விடுதலுக்கு தமிழைத்தவிர ஆங்கிலம், இந்தி மொழிகள் அவருக்கு தெரியாது என்பது காரணமாக கூறப்பட்டுள்ளது.

மேலும் கலைஞர் டி.வியில் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களை கொண்டு பார்க்கும் போது கலைஞர் டி.வி.யில் உள்ள 60 சதவீத பங்குகள் தயாளுவின் பெயரில் இருந்தாலும் அதன் கூட்டங்களிலும் முக்கிய முடிவுகள் எதிலும் இவர் பங்கு கொள்ளவில் லை. பார்வையாளராக மட்டுமே இருந்துள் ளார் என்று சி.பி.ஐ. விளக்கம் அளித்துள்ளது.

தயாளுவின் வயது மற்றும் உடல் நிலையை கருத்தில் கொண்டும் ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகள் தெரியவில்லை என்பதா லும் கருணையின் அடிப்படையில் சி.பி.ஐ. அவரை குற்றப்பட்டியலில் சேர்க்காமல் விட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

மொத்தத்தில் ஒரு காலத்தில் இந்தி எதிர்ப்பு போராட்டம் நடத்தி தமிழகத்தைவிட்டு தி.மு.க.வால் இந்தி விரட்டப்பட்டது. தமிழகத்திற்கு பயன்பட்டதோ இல்லையோ தற்போது தயாளுவுக்கு பயன்பட்டுள்ளது. (ஸ்ரீ)

## ஸ்பெக்ட்ரம் வழக்கில் நீதி கிடைக்க வேண்டும்

## புதிய தமிழகம் கிருஷ்ணசாமி தெரிவிப்பு



ஸ்பெக்ட்ரம் வழக்கில் அனைவருக்கும் சமமான நீதி கிடைக்க வேண்டும் என்றும் புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

புதிய தமிழகத் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி சென்னையில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

ஸ்பெக்ட்ரம் வழக்கில் கனிமொழி நேற்று முன்தினம் சி.பி.ஐ. நீதிமன்றத்தில் ஆஜரானார். அப்போது கனிமொழியை காப்பாற்றக் கூடிய அடிப்படை வாதங்களை முன் வைத்ததை நாம் குறை சொல்லமுடியாது. தலித் கதிரவன் என்று புகழப்பட்ட ராசாவை தனிமைப்படுத்தி அவர் மீது ஒட்டுமொத்த பழியையும் சுமத்தியது கண்டனத்துக்குரியது.

தி.மு.க சார்பில் கனிமொழிக்காக களமிறங்கிய மூத்த வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி கனிமொழி நிராபரதி . அவர் எதுவும் அறியாதவர். அவர் பெயரில் 20 சதவீதம் பங்குகள் உள்ளதே தவிர அவருக்கும் ஸ்பெக்ட்ரம் ஊழலுக்கும் எந்த தொடர்பும் கிடையாது . ஸ்பெக்ட்ரம் முறைகேட்டில் முழுக்கமுழுக்க தவறிழைப்பது ஆ.ராசா மட்டும் தான் என்று ஒட்டுமொத்தமாக குற்றம் சாட்டியுள்ளார்.

இது கண்டிக்கத்தக்கதும் அவமானகரமானதும் ஆகும். அன்று ராசாவைப் பாதுகாப்பது போல் காட்டிக்கொள்வதாகவும் தி.மு.க.வின் மீது பழிவிழுந்துவிடக்கூடாது என்பதற்காகவும் ராசாவிற்கு தலிக் என்ற முகத்திரையை போர்த்தினார்கள். ஆனால் அந்த முகத்திரை இன்று ஒட்டுமொத்தமாக கிழிந்து போயிருக்கிறது.

கனிமொழிக்காக வழக்கறிஞர் வாதாடிய விதம் இதை அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கிறது. எந்த கட்டத்திலும் இந்த விவாகரத் தில் கனிமொழி அப்ரூவர் ஆவதை ஏற்க முடியாது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட கனிமொழி உட்பட அனைவருக்கும் ஒரே சமமாக நீதி வழங்க வேண்டும். (ஸ்ரீ-2)

# வியாழமாற்றம் உங்களுக்கு எப்படி?




**(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)**

குழப்பம் தீர்க்கும் குருபார்வை!
கொடுக்கல் - வாங்கல் ஒழுங்காகும்!

*நினைத்ததை அடைய நிதானத்தைக் கடைப்பிடிக்கும் மகர இராசி நேயர்களே!*

தளராத மனதைப் பெற்றவர்கள் நீங்கள். எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வதால்தான் வெற்றி வாய்ப்பு உங்களைத் தேடி வருகிறது. சிக்கனத்தைக் கடைப்பிடிப்பவர்களுக்கு முன் உதாரணமாக இருப்பீர்கள். தேவைப்படும்போது மட்டும் பணத்தை செலவழிக்க முன் வருவீர்கள். உடன்பிறப்புகள் மீது உங்களுக்கு பாசம் அதிகமாகவே இருந்தாலும், அவர்களுக்கு உங்கள் மீது அவ்வளவு பாசம் இருக்குமா என்பது சந்தேகம் தான்.

நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்த குருப்பெயர்ச்சி வந்துவிட்டது. ஆனால், அர்த்தாஷ்டமக் குருவாக அல்லவா சஞ்சரிக்கிறது. எப்படி அஷ்டமத்து குரு, அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் நடைபெறும்போது பலன் கிடைக்குமோ, அதில் பாதியளவு அர்த்தாஷ்டமக் குருவின் ஆதிக்கம் நடைபெறும் போதும் கிடைக்கும்.

இருப்பினும், குரு உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாகி நான்காமிடத்தில் சஞ்சரிப்பதால் ஆரோக்கியத்திற்காகவும், ஆதரவு தரும் தாய்க்காகவும், தாய்வழி உறவினர்களுக்காகவும், உடன் பிறப்புகளுக்காகவும் செலவிடக்கூடிய சூழ்நிலை உருவாகும். வரும் குருவின் பார்வை அஷ்டமத்தில் பதிவதால், மலைபோல் வந்த துயர் பனிபோல விலகும். மகத்தான குருவை பெயர்ச்சி நேரத்தில் வழிபாடு செய்து மகிழ்ச்சியான வாழ்க்கையை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

**தேவைகளை பூர்த்தி செய்யும் குருப்பெயர்ச்சி**

*பொன்னவன்* என்று வர்ணிக்கப்படும் குரு, இதுவரை உங்கள் இராசிக்கு மூன்றாமிடத்தில் சஞ்சரித்து வந்தார். இனி, 08.05.2011இல் நான்காமிடமான சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக, வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சி கூடும். நிலையான வருமானத்திற்கு வழிவகுத்து நிம்மதி காண்பீர்கள். விரயாதிபதியாக விளங்கும் குரு நான்கில் வருவதுதான் யோசிக்க வேண்டியதாக இருக்கி றது. உங்கள் சௌகரியத்தை முன்னிட்டு நீங்கள் செலவிட்டால், அது தவறில்லை.

அதேநேரத்தில் மூன்றிற்கு அதிபதியாகவும், குரு விளங்குவதால், பிறர் சௌகரியத்திற் காகவும் நீங்கள் ஒரு பெரும் தொகையைச் செலவிட வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். எனவே, சேமிப்பில் கொஞ்சம் கரையத்தான் செய்யும். அதற்காக கவலைப்பட வேண்டியதில்லை.

இராசிநாதன் சனியின் வக்ர நிவர்த்திக்கு பின்னர் கூடுதல் வருமானங்கள் உங்களுக்கு வந்துசேரலாம். சகாய ஸ்தானாதிபதியாகவும், குரு விளங்குவதால், சகாயங்களையும், சந்தோஷங்களையும் குருதான் உங்களுக்கு வழங்க வேண்டும். எனவே, குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே குரு வழிபாட்டை முறையாக மேற்கொண்டால், குதூகலத்தை நீங்கள் வரவழைத்துக் கொள்ள இயலும். குருவிற்குரிய பரிகாரங்களை முறையாகச் செய்தால், உங்கள் முன்னேற்றத்திற்குரிய முட்டுக்கட்டைகள் அகலும்.

வியாழன் தோறும் விரதமிருந்து தென்முகக்கடவுளுக்கு முல்லைப்பூ மாலை சூட்டி, வழிபட்டு வாருங்கள். பொன்னான வாய்ப்புகள் வந்து சேரும்.

"மன்னவன் நான்கில் நிற்க
மலைபோல துயர் வந்தாலும்,
கண்ணெதிரில் பனியாய் மாறும்!
கடல் பயண வாய்ப்பும் கிட்டும்!
முன்னாளில் இருந்த நோய்கள்
முற்றிலும் விலகியோடும்!
பொன்னான தொழில் தொடங்க
புதியதோர் நண்பர் சேர்வர்!"

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் நான்காமிடத்தில் சஞ்சரிக்கும் குரு, உடல் நலத்தில் ஏற்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும். உற்சாகத்தோடு பணிபுரியத் தொடங்குவீர்கள். வாகனயோகம் உண்டாகும். அஸ்திவாரத்தோடு நின்ற கட்டடப் பணியை, மீண்டும் பூமி பூஜை செய்து தொடங்குவீர்கள். இடம், பூமி விற்பனையால் இலாபம் கிடைக்கும். ஒரு சொத்தை விற்று மற்றொரு சொத்தை வாங்குவீர்கள்.

குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும். பக்கத்து வீட்டார் பகையை வளர்த்துக் கொண்ட நீங்கள், இப்பொழுது முற்றிலும் அது விலக எடுத்த முடிவு வெற்றி தரும். நீங்கள் எடுத்த முடிவிற்கு சகோதரர்கள் முக்கியத்துவம் கொடுப்பர். பெற்றோர் மீது பிரியம் கூடும். இதுவரை மற்ற சகோதரர்களை தலைமேல் தூக்கி வைத்து கொண்டாடுகிறார்களே என்று நினைத்த நீங்கள், இனி அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்வீர்கள். உதாசீனப்படுத்திய பெற்றோர்கள் இனி உங்களுக்கும் உதவிக்கரம் நீட்டுவர்.

**விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை!**

இதுவரை மூன்றாமிடத்தில் சஞ்சரித்து வந்த குருபவகவான், இப்பொழுது நான்காமிடத்தில் சஞ்சரித்து நன்மைகளை அதிகம் வழங்கப் போகிறார். அதன் பார்வை 8,10,12 ஆகிய இடங்களில் பதிகிறது. தேவகுருவின் பார்வை பதிந்தால், தெய்வாம்சம் கிடைக்கும். சிக்கல்கள் எல்லாம் விலகி, மக்கள் போற்றும் வாழ்வும் அமையும்.

அந்த அடிப்படையில் இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக, ஆரோக்கியம் சீராகி ஆனந்தம் கிடைக்கப் போகிறது. ரண சிகிச்சை ஏதும் இன்றி தினமும் சாப்பிடும் மருந்து, மாத்திரைகளாலேயே நீடித்த நோயில் இருந்து நிவாரணம் காண்பீர்கள். சென்ற ஆண்டில் தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை இந்த ஆண்டு ஈடுகட்டுவீர்கள். இடமாற்றம், ஊர் மாற்றத்திற்காக விண்ணப்பம் செய்தவர்கள் இதுவரை இருந்த தடை அகன்று, நினைத்த ஊருக்கே மாறுதல் பெறுவர்.

தொழில் வளர்ச்சி மேலோங்கும் விதத்தில், குருவின் பார்வை தொழில் ஸ்தானத்தில் பதிகிறது. எனவே, இந்த தொழிலிலா இவ்வளவு இலாபம் என்று கருதும் அளவிற்கு நீங்கள் ஈடுபட்ட தொழிலில் வளர்ச்சி கூடப் போகிறது. மூடிக்கிடந்த தொழிலில் முன்னேற்றம் கிடைக்கும். தேடிச் சென்ற நபர்களை தெருவிலேயே சந்திப்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். பொன்னான வாய்ப்புகள் வராதா என்று ஏங்கிக் கொண்டிருந்த உங்களுக்கெல்லாம் மண், பூமி சேர்க்கை ஏற்பட்டு மனதை குளிர்விக்கப் போகிறது. உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்ட, ஒப்பற்ற தொழில் ஒன்றைத் தொடங்க முன் வருவீர்கள். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருப்பதால், அனைத்து காரியங்களையும் வெற்றிகரமாக முடித்துக் கொள்வீர்கள்.

அந்நிய தேசத்தில் இருந்து அழைப்புக்கள் வரவில்லையே என்று ஏங்கியவர்கள் எண்ணியபடியே செல்வதற்கான வாய்ப்புகள் கைகூடி வரும். மண்ணை வாங்கலாமா? மனையை வாங்கலாமா? பொன்னை வாங்கலாமா? பொருளை வாங்கலாமா? என்று 24 மணி நேரமும் யோசனையிலேயே ஆழ்ந்திருப்பீர்கள். என்ன வாங்கினால், எதிர்காலதில் நலன் கிடைக்கும் என்பதை யோசித்து பார்த்து வாங்கினால் நல்லது.

மதிப்பும், மரியாதையும் உயரும். மகத்தான பதவிகளும் வந்து சேரும். குரு இருக்குமிடம் நான்காமிடம் என்பதால் வாகனமாற்றம் செய்ய வேண்டிய நேரமிது. அதில் உள்ள எண்களும் உங்களுக்கு அதிர்ஷ்டம் தரும் விதத்தில் எண்சோதிடப்படி வாங்கினால் மேலும், மேலும் வாகனங்களை வாங்கிச் சேர்க்கும் விதத்தில் மகழ்ச்சி கூடும்.

தாய்வழி ஆதரவு பெருகும். தடம் புரண்டு சென்றவர்கள் தானே தேடி வந்து சரணடைவர். கடன்காரர்கள் தொல்லையில் இருந்து விடுபட்டு, கணிசமான தொகையை கையில் வைத்துக் கொண்டு இனி என்ன தொழில் செய்யலாம் என்று யோசிப்பீர்கள். குடும்ப உறுப்பினர்களில், யாருடைய ஜாதகத்தில் தொழில் ஸ்தானம் வலுவாக உள்ளதோ, அவர்கள் பெயரில் தொழிலைத் தொடங்கினால் தான் இலாபத்தை குவிக்கும் நல்ல வாய்ப்பைப் பெறுவீர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

மேடத்தில் சஞ்சரிக்கும் குரு 18.08.2011 முதல் 15.12.2011 வரை வக்ர கதியில் இயங்குகிறார். உங்கள் இராசிக்கு 3, 12 க்கு அதிபதியான குருபகவான், வக்ரம் பெறும் பொழுது ஒரு வழிக்கு நன்மைதான் என்றாலும், சகாய ஸ்தானாதிபதியாகவும் குரு விளங்குவதால், வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி மாறி வரும். வளர்ச்சி வரும்பொழுது, அதை ஏற்றுக் கொள்ளுங்கள். தளர்ச்சி வரும் பொழுது, வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பொதுவாக, இக்காலத்தில் செய்யும் காரியங்களை யோசித்துச் செய்வது நல்லது. சில இடையூறுக ளைச் சந்திக்க நேரிடலாம். உடன் பிறப்புகள் உங்களுக்கு எதிராகச் செயற்படுவர். வழக்குகள் நீடிக்கும்.

நீண்டதூரத்தில் இருந்து வரும் தொலைபேசி வழித்தகவல் நிம்மதியைக் குறைக்கலாம். நிச்சயிக்கப்பெற்ற சில செயல்களை மாற்றி அமைப்பீர்கள். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது. கொள்கைப் பிடிப்பையும் கொஞ்சம் தளர்த்திக் கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகும். இக்காலத்தில் முறையான குருவழிபாடும், சனி வழிபாடும், சர்ப்ப சாந்தியும் உங்களுக்கு சந்தோஷத்தை வரவழைத்துக் கொடுக்கும்.

**மகர இராசிப் பெண்களுக்கு**

*மனக்குழப்பம் அகன்றோடும், மகிழ்ச்சி வெள்ளம் புரண்டோடும்!*

இந்த குருப்பெயர்ச்சி மனக்குழப்பத்தை அகற்றும் விதத்திலேயே அமைகிறது. சனியின் வக்ர காலத்திற்கு பின்னர் குருவின் பலன் கூடுதலாக கிடைக்கும். குடும்ப ஸ்தானம் எனப்படும் இடமாகவும், தாய் ஸ்தானம் என்று சொல்லப்படும் இடமாகவும் இருக்கும் நான்காமிடத்தில், அர்த்தாஷ்டமக் குருவாக சஞ்சரிப்பதால் காரியத்தைத் தொடங்கினால் காசு, பணம் வந்து சேரும். குடும்ப பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடுவதற்கான வாய்ப்பு கிட்டும். தொழில் முயற்சியில் புதியவர்கள் வந்திணைவர். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்தபடியே சலுகைகள் கிடைக்கும். குருவழிபாடும், தெசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடும் குடும்ப முன்னேற்றத்தை அதிகரிக்கும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

அர்த்தாஷ்டமக் குருவின் ஆதிக்கத்தில், அன்றாட வாழ்க்கை நன்றாக அமைய வியாழன் தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

(தொடரும்)

**சிவல்புரி சிங்காரம்**

# இலங்கையை உலுப்பிவரும்

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

47. கிழக்கில் கிடைத்த இராணுவ வெற்றியினால் உற்சாக மடைந்த அரசாங்கம் கிட்டத்தட்ட இரு வருடங்களாக மேற்கொண்ட போர்தந்திரத் தயாரிப்புக்களின் பின்னர் 2008 ஜனவரி 16ஆம் திகதி முழு அளவிலானதொரு இராணுவ நடவடிக்கையை அறிவித்தது. ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம், டோக்கியோ இணைத்தலைமைகள் மற்றும் ஏனைய உறுப்பு நாடுகள் யுத்தநிறத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கான மற்றும் இராணுவத் தீர்வொன்றைப் பெறுவதற்கான அரசாங்கத்தின் தீர்மானம் பாரிய விளைவுகளை ஏற்படுத்துமென எச்சரிக்கை விடுத்தபோதிலும், அதன் இடப்பரப்பில் பயங்கர வாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அரசாங்கத்தின் உரிமை



யையும் ஏற்றுக்கொண்டன.

2008 பெப்ரவரி நடுப்பகுதியளவில், நாடுபூராகவும் தற்கொலைத் தாக்குதல்களை எல்.ரி. ரி.ஈ தீவிரப் படுத்தியபோது யுத்தப்பிரதேசத்திற்கு வெளியேயுள்ள பொதுமக்கள் மீதான யுத்தத்தின் தாக்கம் அச்சுறுத்தும் நிலையை அடைந்தது. அரசாங்கத்தின் வான்குண்டுத் தாக்குதல்களும் ஆழஊடுருவித்தாக்கும் நடவடிக்கைகளும் யுத்தப்பிர தேசங்களிலுள்ள பொதுமக்களை மேலும் தூக்கமுறச் செய்தன. 2008 செப்ரம்பரில் கிளிநொச்சியை நோக்கிய அதன் இறுதி இராணுவத்தாக் குதலை அரசாங்கம் மேற்கொண்டது.

### ஐஐஐ குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்களின் சுபாவம் மற்றும் நோக்கெல்லை

48.அதன் ஆணைப்பிரகாரம், செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குவதற்காக "குற்றம் சாட்டப்பட்ட மீறல்களின் சுபாவம் மற்றும் நோக்கெல்லையைக் கவனத்துக்கெடுத்து" யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது (செப்ரெம்பர்2008 மே 2009) மற்றும் அதனை உடனடுத்து நடைபெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்ட மீறல்கள் பற்றி இப்போது குழு கவனம் செலுத்துகிறது.

குற்றச்சாட்டுக்களின் சுபாவம் மற்றும் நோக்கெல்லையே குழு பொறுப்புக்கூறல் பற்றி வழங்கும் ஆலோசனையின் இயல்பை நிர்ணயிக்கிறது. அத்தியாயம் ஐ.ஏ இல் இம்மீறல்கள், நிரூபிக்கப்படின், சர்வதேச சட்டத்தை மீறியதாக அமையுமா என்பதை நிர்ணயிப்பதற்காக இக்குற்றச்சாட்டுகளை சட்டக் கண்ணோட்டத்தில் குழு சீர்துாக்கிப் பார்க்கிறது.

### (19)அ. குற்றச் சாட்டுக்களைச் சீர்தூக்கிப்பார்ப்பதற்கான முறைமை

49. யுத்தத்தின் இறுதிக்கட்டங்கள் தொடர்பாக விடுக்கப்பட்ட குற்றச் சாட்டுக்களை கவனமாக ஆராய்ந்து அவற்றின் உண்மையை எடைபோடு வதின் அடிப்படையில் குழுவின் மதிப்பீடு அமைந்துள்ளது. எழுத்து மூலமான தகவல்கள் மற்றும் பல் வேறு நபர்களுடன் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்கள் ஆகியற்றை குழுவின் பரிசீலனை உள்ளடக்கியது.

அறிக்கைகள், ஆவணங் கள் மற்றும் பல்வேறு முகவர்கள், திணைக்களங்கள், நிதியங்கள், அலுவலகங்கள் மற்றும் ஐ.நா.வேலைத் திட்டங்கள், ஏனைய அரசாங் கத்திற்கு இடையிலான அமைப்புகள் அரசசார்பற்ற அமைப்புகள் மற்றும் ஊடகவியலாளர்கள் அத்துடன் இலங்கை பற்றிய நிபுணர்களை உள்ளிட்ட தனிநபர்களினால் எழுதப் பட்ட ஏனைய விவரணங்கள் ஆகியவற்றை எழுத்து மூலமான மூலங்கள் கொண்டிருந்தன.

### இலங்கைப்படையினருக்கு இந்தியக் கடற்படை உதவியது

யுத்தத்தின இறுதிக்கட்டங்கள் பற்றிய செய்மதி உருவங்கள், நிழற்படங்கள் மற்றும் வீடியோப் படங்களை அது உள்ளடக்கியது. ஐக்கிய நாடுகள் இணையத்தளத்தின் மூலம் விடுக்கப்பட்ட அதன் நடவடிக்கைகள் பற்றிய அறிவித்தலுக்குப் பதிலளிக்குமுகமாக கிடைக்கப்பெற்ற சமர்பணங்களையும் அது உள்ளடக்கியது. இவை ஒவ்வொன்றையும் தனித்தனியாக சரிபிழைபார்க்க முடியவில்லை. என்ற போதிலும் சில சமயங்களில் அவை ஏனைய மூலங்களை உறுதிப்படுத்த உதவின.

உதாரணமாக இலங்கை அரசாங்கத்தின் அல்லது குறிப்பான வேறு பகிரங்க அறிவித்தல்கள் பற்றிய சம்பந்தப்பட்ட ஊடக மூலங்கள் இவ்வத்தியாயத்தில் மேற்கோள் காட்டப்பட்டபோதிலும் குழு சேகரித்த தகவலை உறுதிப் படுத்துவதற்கு மாத்திரம் அவை உதவுகின்றன.

வன்னியில் நடந்தேறிய விடயங்கள்பற்றிய பல அரசசார்பற்ற அமைப்புக்களின் அறிக்கைகள் இருக்கின்றன.

இவ்வறிக்கைகள் சிலவற்றை இக்குழு மீளாய்வு செய்த போதிலும், இக்குற்றச்சாட்டுக்களைத் தொகுப்பதற்காக அது அவற்றில் தங்கியிருக்கவில்லை. என்பதோடு, குற்றச் சாட்டுக்களின் சுபாவம் மற்றும் நோக்கெல்லை பற்றிய மதிப்பீட்டினை குழு தானாகவே மேற் கொண்டது.

50. சம்பந்தப்பட்ட காலகட்டத்தில் இலங்கையில் அல்லது வன்னியில் இருந்த சிலசர்வதேச அமைப்புக்களின் அலுவலர்கள், அரசசார்பற்ற அமைப்புக்கள், ஊடகவியலாளர்கள், தூதுவர்கள், கல்விமான்கள் மற்றும் ஏனைய தனிநபர்களை உள்ளிட்ட ஆயதம் தாங்கிய மோதல்பற்றிய நிபுணத்துவம் அல்லது அனுபவம் கொண்ட பலருடன் குழு கலந்துரையாடியது.

51. குழுவின் ஆணை உண்மையைக் கண்டறிவதை அல்லது புலனாய்வினை உள்ளடக்காத அதே வேளையில் பகிரங்க செயற்களத்தில் கிடைக்கூடிய குற்றச்சாட்டுக்கள் மேலதிக புலனாய்வினை போதிய அளவில் தேவைப்படுத்துகின்றனவா என்பதை மதிப்பீடு செய்வது அவசியம் எனக்குழு நம்புகிறது. அவை காரணமாக எழும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் சிக்கல்களை நெறிப்படுத்த இக்குற்றச் சாட்டுக்களின் சுபாவம் மற்றும் நோக்கெல்லை பற்றி நிர்ணயிப்பது குழுவுக்கு வழிவகுக்கும்.

சம்பந்தப்பட்ட செயல் அல்லது சம்பவம் நேர்ந்தது என்பதை நம்புவதற்கான நியாயமான அடிப்படை இருந்தால் ஒரு குற்றச்சாட்டு நம்பகமானது என்பதாக குழு நிர்ணயிக்கும். குழு பிரயோகிக்கும் இத்தரக் கட்டளை உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழ் அரசாங்கம் ஒன்றிற்கு அல்லது வேறுபாத்திரங்களுக்கு பதிலளிப்பதற்கான பொறுப்பை ஏற்படுத்துகிறது.

(20)52. குற்றச்சாட்டொன்று நம்பகமானதா என்பதை நிர்ணயிப்பதறந்காக தன்வசமுள்ள தகவலை முழுமையாக, அதன் ஏற்புடைய தன்மை, எடை மற்றும் ஒவ்வொரு மூலங்களினதும் நம்பத்தகு நிலை அத்துடன் முழுமையான தகவலுடனான அதன் தொடர்பு ஆகியவற்றைக் குழு கவனத்தில் கொள்கிறது. ஏற்புடைத்தானது மற்றும் நம்பகரமானது என குழு தீர்மானிக்கும்அடிப்படை மூலங்களைக் கொண்டிருந்தால் மாத்திரமே குற்றச் சாட்டொன்று நம்பகமானது என எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்த அடிப்படைமூலங்களை, நேரடி மற்றும் மறைவான, ஏனைய தகவல்களின் மூலங்கள் உறதிப்படுத்துகின்றன. கீழே தரப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நம்பகமான மற்றும் முரண்பாடற்ற தகவல் மூலங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. உண்மையிலேயே அனேகமான குற்றச்சாடடுக்கள் சான்றின் உயர் தரத்தினை நிறைவு செய்வதாகத் தென்படுகின்றன.

53. நம்பகமானவை என அது காணும் இக்குற்றச்சாட்டுக்களை கூடியளவிலான அவற்றின் சூழ் நிலைப் பொருத்தம் மற்றும் சகல அம்சங்களையும் வழங்குவதற்காக சட்ட வகுதிகளின்கீழ் அவற்றை வசைப் படுத்தாமல் சொற்றொடர் விளக்க மாக சமர்ப்பிப்பதை குழு தெரிவு செய்துள்ளது. இவ்விளக்கத்தை நிரூபிக்கப்பட்ட உண்மை எனக்கொள்ளல் ஆகாது என்பதோடு, குறிப்பான பொறுப்புக்களை நிர்ணயிப்பதற்கான ஏதும் முயற்சி மேலும் உயர்நிலையிலான ஒரு அமைப்பைத் தேவைப்படுத்தும்.

### ஆ. இராணுவ உத்திகள் மற்றும் நடவடிக்கைகளின் பின்னணி

54. இவ்வத்தியாயத்தின் இ) முதல் ஊ) பிரிவுகளில் விளக்கப் பட்டுள்ள நம்பகமான குற்றச் சாட்டுக்களை புரிந்துகொள்வதற்கான அவற்றின் சூழ்நிலை பொருத்தத்தைப் பெறுவதற்காக, யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போதான அரசாங்கத்தின் மற்றும் எல்.ரி.ரி.ஈ. இன் அரசியல் மற்றும் இராணுவ உத்திகள் அத்துடன் கொள்ளளவுகளை குழு ஆராய்ந்தது.


பொதுவான உத்தியின் பகுப்பாய்விற்காக பகிரங்கமாகக் கிடைக்கக்கூடிய அரசியல் மற்றும் இராணுவப்பகுப்பாய்வுகள் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளம் மற்றும் ஐக்கியநாடுகள் அலுவலகத்தின் இராணுவ அலுவலகங்களுக்கான சர்வதேச இராணுவ நிபுணர்கள் போன்ற பல்வேறு மூலங்களில் குழு சார்ந்திருந்தது.

**தமிழாக்கம் தொடர் 08**

குறிப்பான குற்றச் சாட்டுகளை குழு ஆராயும்போது, அடிப்படை மூலங்களை அடிப்படையாகக் கொண்டு அதனை அது மேற்கொண்டது.

### 01. இலங்கை அரசாங்கம்

55. தோல்வியில் முடிவடைந்த



சமாதானச் செயற்பாட்டைத் தொடர்ந்து 2006 இல் எல்.ரி.ரி.ஈ. இனைத் தோற்கடிப்பதற்காக பலனைக்கொண்ட முழுமையானதொரு உபாயத்தை இலங்கை அரசாங்கம் திட்டமிட்டது. இராஜதந்திர மற்றும் அரசியல் அம்சங்கள், யுத்தவலயம் பற்றிய தகவல்கள் மற்றும் அதற்கான பிரவேசத்தை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அத்துடன் மிகவும் கண்டிப்பான இராணுவ அம்சங்களை இவ்வுபாயம் உள்ளடக்கியது.

(தொடரும்)

# வடக்கிற்கு வரும் வெளிநாட்டுப் பிரஜைகள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவேண்டும்

## முன்னறிவித்தலின்றிய இறுக்கமான நடைமுறையால் சிரமம்

**(கொழும்பு)**

**வவுனியா ஓமந்தை சோதனைச் சாவடியூடாக வன்னிப் பிரதேசம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் வெளிநாட்டுப் பிரஜைகள் அனைவரும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றே செல்ல வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

**இலங்கையில் பிறந்து வெளிநாடுகளில் குடியுரிமை பெற்றவர்களும் இந்த அனுமதியைப் பெற்று பிரயாணம் செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இவ்வாறான அனுமதி பெறாமல் வடபகுதிக்குச் செல்ல முயன்ற வெளிநாட்டுப் பிரஜைகள் அனைவரும் ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து படையினரால் தற்போது திருப்பி அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

இந்த பாஸ் நடைமுறை முன்னறிவித்தலின்றி இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதன் காரணமாக வெளிநாடுகளில் இருந்து தாயகத்திற்கு வருகின்ற வெளிநாடுகளில் குடியுரிமை பெற்றவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவிக்கையில்,

இது ஒன்றும் புதியதல்ல. ஏற்கனவே நடைமுறையிலுள்ள ஒரு விடயமே. இது குறித்து ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

இது பற்றி பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் விபரம் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

16 வயதிற்கு மேற்பட்ட அனைத்து வெளிநாட்டவர்களும் வடபகுதிக்குச் செல்வதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டும் என பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன் இலங்கை பிரஜை ஒருவரைத் திருமணம் செய்துள்ள வெளிநாட்டுப் பிரஜை மற்றும் இலங்கையில் பிறந்து வெளிநாட்டுக் கடவுச்சீட்டைக் கொண்டிருப்பவர்களும் இந்த அனுமதியைப் பெறவேண்டும் என்றும் பாதுகாப்பு அமைச்சு தனது இணையத்தளத்தின் ஊடாக அறிவித்திருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல், இலங்கையில் பிறந்து வெளிநாட்டுக் குடியுரிமையைப் பெற்றிருப்பவர்களும் வடபகுதிக்குச் செல்வதானால் பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதி பெற்றிருக்க வேண்டுமெனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருக்கின்றது.

இந்த முன் அனுமதியைப் பெறுவதற்கு நான்கு தினங்களுக்கு முன்னர் அதாவது 96 மணித்தியாலங்களுக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பிப்பவர்கள் தொலைநகலில் பதிலைப் பெறுவதற்கான தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்தல் வேண்டும் என்றும் அவ்வாறு தொலைநகலில் பதிலைப் பெறமுடியாதவர்கள் நேரடியாகப் பாதுகாப்பு அமைச்சின் அலுவலகத்திற்குச் சென்று தமக்குரிய பதிலைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

எனினும் இந்த நடைமுறை ஏன் பின்பற்றப்படுகின்றது என்பதற்கான விளக்கம் பாதுகாப்பு அமைச்சினால் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை விவகாரம் விவாதிக்கப்படமாட்டாது

## சிங்கள ஊடகம் தெரிவிப்பு

(கொழும்பு)

சுவிற்சர்லாந்தின் ஜெனீவாவில் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் சர்வதேச மனித உரிமைப் பேரவையில் இலங்கை விவகாரம் விவாதிக்கப்படமாட்டாது என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பேரவையில் இலங்கைக்கு எதிராக விசேட யோசனைத் திட்டமொன்று முன்வைக்கப்பட இருந்ததாகவும் இறுதி நேரத்தில் அந்த திட்டம் கைவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் விளக்கமளிப்பதற்கு இலங்கைக்குப் போதியளவு கால அவகாசம் வழங்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இம்முறை மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் சிரியா நாட்டில் இடம்பெற்று வரும் விடயங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# அலங்கார உற்சவம்

முரசுமோட்டை அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெற்றுவருகிறது.

இதில் காலை 9.30 மணி மற்றும் மாலை 6.30 மணிக்கு விசேட பூசைகள் நடைபெறும். (ஸ்ரீ-2)

# மஹோற்சவம்

திருவருள் மிகு அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 9 நாட்கள் திருவிழா நடைபெறும்.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு அம்பிகை கிராமப் பிரதட்ஷணமும் (ஊர் உலா) மறுநாள் சனிக்கிழமை காலை 11 மணிக்கு திருத்தள பூசை ஆரம்பமாகி அம்பிகை திருவீதி வலம்வந்து மதியம் ஒரு மணிக்கு கொடியிறக்கம் இடம்பெறும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை 7 மணிக்கு மஹா சங்காபிஷேகம் நடைபெறும். (ஸ்ரீ-2)

# விசேட வழிபாடு

சுழிபுரம் சம்புநாதேஸ்வரி சமேத சம்புநாதேஸ்வரர் தேவஸ்தானத்தில் வியாழன் மாற்றத்தை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் தட்சணாமூர்த்திக்கு விசேட அபிஷேகங்கள், ஆராதனைகள், பூசைகள் இடம்பெறவிருப்பதால் அடியார்களை கலந்து சிறப்பிக்குமாறு ஆலய நிர்வாகம் கேட்டுக் கொள்கின்றது. (ஸ்ரீ-2-17)

# இலங்கை மீது ஐரோ. நாடுகள் வர்த்தகத் தடை விதிக்குமா?

## அச்சத்தில் அரசாங்கம்

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பில் 27 நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய நாடாளுமன்றம் எதிர்வரும் 19ஆம் திகதி அவசர விவாதம் ஒன்றை நடாத்தவுள்ளது.

இந்த விவாதத்தை நடாத்த வேண்டும் என ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 50 உறுப்பினர்களைக் கொண்ட கிரீன் கட்சி கோரிக்கை விடுத்திருந்தது.

பான் கீ மூனின் நிபுணர் குழு இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பிலான அறிக்கையை வெளியிட்டதன் பின்னரே கிரீன் கட்சி தமது கோரிக்கையை முன்வைத்தது.

இந்நிலையில் இந்த அவசர விவாதம் மூலம் ஐரோப்பிய நாடாளுமன்றம் இலங்கைக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என்று இலங்கையின் வெளியுறவு அமைச்சு தரப்புகள் அச்சம் வெளியிட்டுள்ளன.

பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கையின்படி சுயாதீன சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஐரோப்பிய நாடாளுமன்றம் வலியுறுத்தக்கூடும்.

இதனடிப்படையில் இலங்கை மீது ஐரோப்பிய நாடுகள் வர்த்தகத் தடையைக் கொண்டு வரலாம் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்கான ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையை இரத்துச்செய்வதற்கான அவசர விவாதத்தைக் கடந்த வருடம் மே மாதம் நடாத்திய பின்னர் ஐரோப்பிய நாடாளுமன்றம் முதற்தடவையாக இலங்கை தொடர்பில் விவாதத்தை நடாத்துகிறது. (ஸ்ரீ-2)

# கட்டாரில் இலங்கையருக்கான வேலைவாய்ப்பை அதிகரிக்கத் திட்டம்

## அமைச்சர் டிலான் கட்டார் பயணம்

கட்டாரில் இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் டிலான் பெரேரா மேற்கொண்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக கட்டார் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடாத்த அமைச்சர் தலைமையிலான குழுவொன்று நேற்று கட்டார் பயணமாகியுள்ளது.



இந்த விஜயத்தின்போது இருதரப்பு உறவுகள் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் பேச்சுவார்தைகளை நடாத்துவதுடன் இலங்கையர்களுக்கு மேலதிக வேலைவாய்ப்பைப் பெறும்நோக்கில் இரு முக்கிய சந்திப்புகளையும் மேற்கொள்ளவுள்ளனர். இச்சந்திப்பில் கட்டாரில் தொழிற்படும் வேலைவாய்ப்பு முகவர்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதேவேளை கடந்த பெப்ரவரி மாதம் கட்டார் சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வேலைவாய்ப்பு உட்பட பல விடயங்கள் குறித்து கட்டாரின் உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை எதிர்வரும் 2022ஆம் ஆண்டு கட்டாரில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்தத் திட்டமிட்டுள்ள விளையாட்டுத் திடல்களில் பல்வேறு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இக்கட்டுமானப் பணிகளுக்கு இலங்கையர்களைச் சேர்த்துக்கொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை ஜோர்தானில் பணியாற்றும் இலங்கையர்கள் சிலர் மேற்கொண்டுவரும் பணி நிறுத்தப் போராட்டம் தொடர்பாக பல்வேறு தகவல்கள் வெளியான நிலையில் நேற்று முன்தினம் இது தொடர்பாக அமைச்சர் டிலான் பெரேராவினால் கொழும்பில் செய்தியாளர் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜோர்தானுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு மாறாகவே இந்தப் பணியாளர்கள் வேதன அதிகரிப்பைக் கோருவதாகவும் அவர் செய்தியாளர் சந்திப்பில் சுட்டிக் காட்டினார். (ஸ்ரீ-2)

நல்லூர் மங்கையர்கரசி வித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமச்சாரிய சுவாமிகள், தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரட்ணம், அதிபர் ஆகியோர் அழைத்து வரப்படுவதனையும் பிரதம விருந்தினரும் அவரது பாரியார் திருமதி தங்கமலர் நாகரட்ணம் ஆகியோர் இணைந்து சிரேஷ்ட மாணவ முதல்வருக்கு வெற்றிக்கிண்ணம் வழங்குவதனையும் படங்களில் காணலாம்.

# போர்க்குற்றம் சுமத்தப்பட்டவர்களை விசாரிப்பதாக உறுதியளிக்க வேண்டும்

## அரசிடம் ஆனந்தசங்கரி கோரிக்கை



(கொழும்பு)

போர்க்குற்றம் சுமத்தப்பட்டவர்களை தானே விசாரிப்பதாக ஐக்கிய நாடுகள் சபைக்கு இலங்கையரசு வாக்குறுதி வழங்க வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

தாரூஸ்மான் அறிக்கைக்கு விபரமான பதில் அனுப்புவதாக அரசு எடுத்த தீர்மானத்தை நான் வரவேற்கிறேன்.

ஆரம்பத்தில் இருந்தே அரசு இதனை எதிர்நோக்க வேண்டும் என்றும் நாட்டின் சரித்திரத்தில் இதையொரு நிரந்தர கரும்புள்ளியாக இருக்க விடாது இக்குற்றச் சாட்டுக்களில் இருந்து கௌரவமாக விடுபட வேண்டும் என்ற கருத்தை நான் கொண்டிருந்தேன்.

இவ்வறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளதேயன்றி தனிப்பட்ட பான் கீ மூனிற்கு அல்ல. பான் கீ மூன் வகிக்கும் ஐக்கிய நாடுகள் செயலாளர் பதவி மிக கண்ணியமானதும் பல்வேறு நாடுகளால் தேர்ந்து எடுக்கப்பட்ட பதவியுமாகும்.

ஆகவே, அவர் மீது சேறு அடிக்கப்படுவது ஐக்கிய நாடுகள் சபையின் எந்த ஒரு அங்கத்துவ நாடும் இலங்கை அரசுடன் எத்தகைய உறவைக் கொண்டிருந்தாலும் அச்செயலை ஒரு போதும் அங்கீகரிக்காது என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் கண்ணியத்தையும் கௌரவத்தையும் காப்பாற்ற வேண்டியது தமது தார்மீகக் கடமை என்றே உணர்ந்து செயற்படும்.

ஆகவேதான் எந்தவிடயத்திலும் எந்த நாட்டுடனும் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அரசாங்கமோ அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர்களோ மட்டுமே ஈடுபட வேண்டும். நாடு முழுவதும் அறிக்கையை வாபஸ் பெறுமாறு கூறி ஆர்ப்பாட்டங்கள், கொடும்பாவி எரித்தல் மற்றும் அவரின் பெயரைக் கிண்டல் செய்தல் போன்றவற்றை எவருமே தமதெண்ணப்படி நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது துரதிர்ஷ்டமே.

சர்வதேச நீதிமன்றத்தின் முன் இலங்கை ஜனாதிபதியை நிறுத்தி போர்க்குற்றங்களுக்காக விசாரிக்க வேண்டும் என்று பல்வேறு அமைப்புகளும் பல்வேறு நாடுகளில் வேண்டுமென்பது வெறும் கேலிக்கூத்தானதாகும். இலங்கையில் புகுந்து ஜனாதிபதியை கைது செய்து வெளிநாட்டுக்கு கொண்டு செல்ல யாருக்கு தைரியம் வரும்? அல்லது பிற வைத்து கைது செய்ய எந்த அதிகாரியிடம் அனுமதி பெற முடியும்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் இத்தகைய கோரிக்கைகளும் ஆர்ப்பாட்டங்களும் இலகுவாக புகழ் சம்பாதிக்கவும் பணம் சேகரிக்கவுமேயன்றி இதனால் எதுவித பயனும் கிட்டப் போவதில்லை.

அரசாங்கப் படைகளால் கிளிநொச்சி கைப்பற்றப்பட்ட போது இக்கட்டத்திலேனும் அப்பாவி பொது மக்களையும் எஞ்சியுள்ள புலிப் போராளிகளையும் பல கோடி பெறுமதியான சொத்துக்களையும் காப்பாற்றுமாறு பிரபாகரனிடம் மன்றாட்டமாக கேட்டிருந்தேன். அதற்கு அவர் செவி சாய்க்கவில்லை என்றார். (ச-5)

## இலவச வைத்தியசேவை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய நிர்வாகத்தினால் நடத்தப்படும் இலவச வைத்திய சேவை எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11.30 மணிவரை சந்நிதி பொது நல்நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வைத்திய சேவையில் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் வைத்திய கலாநிதி டாக்டர் பி.அச்சுதன் (பொது வைத்திய சேவை), வைத்திய கலாநிதி டாக்டர் அச்சுதன் வினோதா (சருமநோய்) வைத்திய சேவைகளை வழங்கவுள்ளனர்.

எனவே, இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது நோய்களைத் தீர்த்துக் கொள்ளுமாறும் வைத்திய சேவைகள் மற்றும் மருந்துகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும் எனவும் ஆலய பரிபாலன சபை செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## இலங்கை பிரச்சினை தொடர்பில் ஐரோ. பாராளுமன்றில் விவாதம்

இலங்கை பிரச்சினை தொடர்பில் ஐரோப்பிய பாராளுமன்றில் விவாதம் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

27 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய பாராளுமன்றில் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை இலங்கை விடயம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

குறிப்பாக மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விவாதிக் கப்படவுள்ளது.

நிபுணர் குழு அறி க்கை வெளியிடப்பட்டதன் பின்னர் க்ரீன் கட்சியினால் இலங்கை தொடர்பில் அவசர விவாதம் நடத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

எதிர்வரும் மே மாதம் 12 ஆம் திகதி இலங்கை தொடர்பில் அவசர விவாதம் நடத்தப்படவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைப் பிரதிநிதி ரிவன்த ஆரியசிங்க உறுதி செய்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக தீர்மானங்கள் நடுநிலையானதாகவும் சரியானதாகவும் அமையப் பெற வேண்டுமென ஏற்கனவே வலியுறுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான அவசர விவாதம் வெளிவிவகார அமைச்சில் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. அவசர விவாதத்தில் இலங்கைக்கு பாதகமான நிலைமை ஏற்படக்கூடுமென அஞ்சப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை பரிந்துரைகள் விசாரிக்கப்பட வேண்டுமென பலம் பொருந்திய ஐரோப்பிய நாடுகள் அழுத்தம் கொடுக்கக்கூடுமென அச்சம் வெளியிப் பட்டுள்ளது.

சில வேளைகளில் பொருளாதார தடைகள் விதிக்கப்படக்கூடுமென சுட்டிக்காட்டப்படுகிறது. (ஸ்ரீ-2)

## இலங்கைக்கு தண்டனை வழங்கக்கோரி கொழும்பிலிருந்து அறிக்கை அனுப்பிவைப்பு

### சிங்கள ஊடகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றச்சாட்டுக்களுக்காக இலங்கையை தண்டிக்க வேண்டும் என வலியுறுத்தி கொழும்பிலிருந்து அறிக்கை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மிக இரகசியமாக அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை இலங்கைக்கு தண்டனை வழங்க வேண்டிய முறைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 28 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கையில் இலங்கைக்கும் இலங்கைக்கு ஆதரவாக செயற்படும் நாடுகளுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## இந்திய மீனவரின் மரணம் தொடர்பில் விசாரிக்க மூவர் கொண்ட குழு நியமனம்

(கொழும்பு)

இந்திய மீனவரின் மரணம் தொடர்பான பிரேத பரிசோதனை அறிக்கை குறித்து விசாரணை செய்வதற்கு மூவர் கொண்ட விசாரணைக் குழுவை அரசாங்கம் நியமித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி நெடுந்தீவுக்கும் நயினாதீவுக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் கடற்படையினரால் சடலம் ஒன்று மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட சடலம் இராமேஸ்வரம் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த சேவியர் விக்டஸ் (வயது 41) என்ற இந்திய மீனவரின் சடலமே அது என்று அவரது சகோதரனான சேவியர் சுமன் கடந்த மாதம் 9 ஆம் திகதி அடையாளம் காட்டினார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி மேற்கொண்ட உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் சித்திரவதை செய்யப்பட்டே குறித்த நபர் கொலையுண்டார் என்பதற்கு சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில் குறித்த உடற்கூற்றுப் பரிசோதனைகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்வதற்கு அரசினால் மூவர் கொண்ட சட்டவைத்திய அதிகாரி குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளுக்கு சமுகமளிக்குமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைகள் நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-2)

## தனியார் ஓய்வூதிய பிரேரணைக்கு 26 தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

உத்தேச ஓய்வூதிய நிதிய சட்டமூலத்திற்கு எதிராக அரசாங்கத்திடம் மனுவொன்றை கையளிக்க 26 தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளதாக பொது சேவைகள் ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலை ஊழியர் சங்கத்தின் துணை செயலாளர் அன்டன் மார்க்ஸ் வெளியிட்டுள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை ஓய்வூதிய நிதிய சட்ட மூலத்திற்கு எதிரான கையொப்பங்களை பெறும் நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## இதய சத்திரசிகிச்சை கருவிகள் கொள்வனவு

(கொழும்பு)

இதய சத்திர சிகிச்சைக்குத் தேவையான கருவிகளை சுகாதார அமைச்சு கொள்வனவு செய்துள்ளது. இந்தக் கருவிகள் மலேஷியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டுள்ள இதய சத்திரசிகிச்சைக்கான கருவிகளை வைத்தியசாலைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் 350 இதய சத்திர சிகிச்சை கருவிகளை நாட்டிற்கு இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. நாடு முழுவதிலுமுள்ள பிரதான வைத்தியசாலைகளுக்கு மாத்திரம் 4 ஆயிரம் சத்திர சிகிச்சை கருவிகள் தேவைப்படுவதாகவும் அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. (ஸ்ரீ-2)

# எது புனிதத்தலம்?



## ஆன்மீகம் 12

இங்குள்ள சக்திநிலை பற்றி நான் அதிகம் சொல்வதற்கு ஒன்றுமில்லை.பூமியில் வெகுசில இடங்களே இப்படியுள்ளன. சில இடங்களில் அதிகமான சக்தி நிலை உள்ளது, ஆனால் ஒழுங்கற்ற நிலையில் உள்ளது வெகுசில இடங்களில் மட்டுமே ஒழுங்குபடுத்தப்பட்ட சக்திநிலை இருக்கிறது. அது குறிப்பிட்ட வழியில் இயங்கி உங்களை சிலசெயல்கள் செய்ய அனுமதிக்கிறது, அதே நேரத்தில் ஒருஎல்லைக்கு மேல் போவதில்லை. வெகுசில இடங்களே இப்படியள்ளன. அவற்றிலும் அனேக இடங்களில் காலநிலை(Weather) சரியில்லை. இங்கோ காலநிலையும் நன்றாக இருக்கிறது. கொசு மட்டும்தான் சிறிது பிரச்சனை. ஒருவேளை அவையும் சக்திநிலை நோக்கி ஈர்க்கப்பட்டிருக்கலாம். ஏனெனில் சக்தியை ஒரு குறிப்பிட்ட திசையில் ஒரு குறிப்பிட்ட தீவிரத்துடன் ஒருமுறை செலுத்தி விட்டால் அதன் பாதிப்பிலிருந்து எதுவும் தப்பமுடியாது. ஒவ்வொன்றும் அதைநோக்கியே நகர ஆரம்பிக்கும்.

எனவே ஆசிரமத்தில் தொடர்ந்து இருந்தீர்களானால் நிச்சயமாக நீங்கள் விரைவான செயல்முறையில் (fast-forward) இருக்கிறீர்கள். ஆனால் இந்த இடம் உங்கள்மீது செயல் செய்ய நீங்கள் விழிப்புணர்வுடன் அனுமதித்தால் செயல்முறை மேலும் விரைவானதாக இருக்கும். விரைவான செயல்முறை உங்களுக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்காது. பழைய ரேப் ரெக்கோட்டரைப் பார்த்திருப்பீர்கள் ரேப்றெக்கார்டரில் உங்களுக்குப் பிடிக்காத தேவையில்லாத பாட்டு ஓடிக்கொண்டிருக்கிறது. அந்தப் பாட்டிலிருந்து தப்பிக்க நினைக்கிறீர்கள். அடுத்தபாட்டிற்கு போவதற்கான பட்டனை (fast-forward button) இயக்குகிறீர்கள் அப்போது அழுத்தம் காரணமாக க்க்க்கீகீகீ கீகீஞ்ஞ்... என்று சப்தம் போட்டபடி டேப் ஓடுகிறது, எல்லா சப்தமும் கேட்கிறது, திணறுகிறது. ஆனால் ஒரு முக்கியமான விடயம், அந்த தேவையற்ற பாட்டிலிருந்து நீங்கள் இப்போது தப்பித்துவிட்டீர்கள். அதுதான் விடயமே.விரைவான செயல்முறையில் சில அழுத்தங்களும் வலிகளும் இருக்கலாம், ஆனால் அதேமுட்டாள்தனங்கள் மீண்டும்மீண்டும் நடக்கத்தேவையில்லை.

முக்திக்கான தாகம்வரக் காரணமே திரும்பதிரும்ப அதேபோல வாழ்க்கையை நடத்த விரும்பாததுதான். வாழ்க்கை எவ்வளவு சுவார்சியமாக இருந்தாலும் சரி, எவ்வளவு அழகாக இருந்தாலும் சரி, அந்த ஒன்றையே திரும்பத்திரும்ப செய்ய நீங்கள் விரும்பவில்லை. அதனால் தான் முக்திக்கு ஏங்குகிறீர்கள். நீங்கள் துன்பத்தில் இருப்பதால் முக்திக்கு ஏங்கவில்லை. நீங்கள் துன்பத்தில் இருந்தால் முக்திக்கு ஏங்கமாட்டீர்கள், சொர்க்கத்திற்குத்தான் ஏங்குவீர்கள். அங்கு இன்பமாக வாழமுடியும். வாழ்க்கை நன்றாகவே இருக்கிறது. ஆனாலும் அதையே திரும்பத்திரும்ப செய்ய விரும்பவில்லை. அப்படிச் செய்வது அறிவான செயலாக உங்களுக்குத் தோன்றவில்லை. எனவே விரைவான செயல்முறையின் மூலம் அதிலிருந்துதாவ விரும்புகிறீர்கள்.

எனவே எல்லாப் புனித இடங்களும் இப்படித்தான் உருவாக்கப்படுகிறதா? அப்படித்தான் என்று கிடையாது. அவை வெவ்வேறு வழிகளில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக சக்தி தீவிர நிலையில் உள்ள இடங்கள் உங்களை ஒன்றிரண்டு படிகள் தாவவைக்கின்றன. ஆனால் அந்த எல்லா இடங்களுமே ஒரு குறிப்பிட்ட ஒழுங்கில் உருவாக்கப்பட்டவை என சொல்ல முடியாது.

அவை உங்களை பல சாத்தியத்திற்கு இட்டுச் செல்லலாம். ஆனால் ஆன்மீக செயன்முறையை விரைவுபடுத்துவதைத் தவிர்த்து வேறு சாத்தியம் உருவாகாதபடி நாம் இங்கு உறுதி செய்கிறோம். வேறு சாத்தியங்கள் ஆன்மீக சாதகருக்கு அவசியமற்றவை.

இங்குள்ளதுபோல் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கில் தீவிரசக்தி நிலையுள்ள இடங்கள் மிகவும் அரிது. பரிசோதனைகள் மூலம் நாம் அதை நிரூபிக்கமுடியும். ஆனால் எதற்காக அப்படிச் செய்யவேண்டும்? அதை நிரூபிக்கத் தேவையில்லை. அது அங்கு இருக்கிறது. நீங்கள் தான் அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் ஏற்கனவே ஆசிரமத்தில் கூட்டம் அதிகமாக இருக்கிறது. எனவே பரிசோதனைகள் மூலம் நிரூபித்து எல்லாக் கூட்டமும் இங்கு வரச் செய்யத்தேவையில்லை. பின்னர் மிகவும் கஷ்டமாகிவிடும். இந்த இடம் ஏற்கனவே மக்களால் நிரம்பியுள்ளது. இங்கு மேற்கொண்டு எதுவும் செய்யமுடியாது. ஒரு வேளை அதிகமக்கள் பயன் பெறுவதற்காக இதேபோன்ற சில இடங்களை நாம் மேலும் உருவாக்க வேண்டிவரலாம்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

(முற்றும்)

# இலங்கைத் தமிழ் இலக்கியத்திற்கு மலையகம் புதிய இரத்தம் பாய்ச்சியது

01

மலையக இலக்கிய வளர்ச்சியைப்பற்றி ஆராய்வோமானால் மலையக மக்கள் என்று இனங் காணப்படும் மக்கள், பத்தொன் பதாம் நூற்றாண்டில் மூன்றாம் தசாப்தத்திலிருந்து 1828 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் குடியேறியவர்களில் தொடர் சந்ததியாவார்கள். ஆங்கிலேயர்கள் தங்களின் பெருந்தோட்டங்களில் சேவை செய்வதற்கென்றே இவர்களைக்கொண்டு வந்தார்கள்.

இவர்கள் இங்கு வரும்பொழுது தங்களோடு தங்களின் கலாசாரத்தையும், பண்பாட்டையும் கொண்டு வந்தார்கள். அவர்கள் அவ்விதம் கொண்டு வந்தது பழைமை மிகுந்த வளம்நிறைந்த தென்னிந்தியக் கலாசாரமாகும். அதனையொட்டியே மலையக இலக்கியம் வளர்ச்சியடைந்துள்ளது.

இந்திய வம்சாவழியினரான மலையகமக்கள் சுமார் இரு நூற்றாண்டுகளாக இலங்கையில் வாழ் கிறார்கள். 1824 ஆம் ஆண்டு 16 குடும்பங்களின் வருகையோடு இவர்களின் குடியேற்றம் ஆரம்பமானது. இவர்களின் ஆரம்பகால வெளிப்பாடுகள் வாய்மொழி இலக்கியமாகவே அமைந்தன.

கிராமியப்பாடல்கள், நாட்டார் பாடல்கள், நாடோடிப்பாடல்கள், கதைப்பாடல்கள், தெம்மாங்குப்பாடல்கள், குரவைப்பாடல்கள், தாலாட்டு ஒப்பாரிஎன்றெல்லாம் இவ்வாய் மொழி இலக்கியம் வகுக்கப்பட்டும் தொகுக்கப்பட்டும் இருக்கின்றன. இலங்கையில் ஏனைய பிராந்திய வாய்மொழி

**“கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை”**

இலக்கியம் அம்மக்களின் சமூக வாழ்க்கை முறைகளையும், பழக்கவழக்கங்களையும் வெளிப்படுத்தி அமைகின்ற பொழுது இந்த மலையக மக்களின் வாய்மொழிப் பாடல்கள் அம்மக்களின் வரலாற்றில் பல நெளிவு சுளிவுகளையும் வெளிப்படுத்தியிருப்பதைக்கண்டு கொள்ளலாம்.

“வாடையடிக்குதடி
வாடைக்காத்து வீசுதடி
செந்நெல் மணக்குதடி
சேர்ந்து வந்த கப்பலிலே”

என்று புலம்பெயர்ந்து வந்ததையும், பின்னர் தேயிலைப்பயிர்ச் செய்கைக்கு முன்னர் கோப்பிப்பயிர் செய்கை காலதத்தில்:-

‘பழமும் எடுக்கவில்லை
பழைய சோறும் திங்கவில்லை
வேகுதையா என் மனசு’

என்ற பாடல்களில் கண்டிச் சீமைக்கு வருவதற்கு அனுபவித்த கஸ்டத்தையும், கங்காணிமார்களிடம் அனுபவித்த கொடுமையையும் கோப்பி பயிரிட்ட காத்தில் ஏற்பட்ட அவலத்தையும், அதன்பின்னர் தேயிலை பயிரிடப்பட்ட காலத்தில் இடம்பெற்ற மாற்றத்தையும் அவதானிக்கலாம்.

மலை சூழ்ந்த தோட்டங்களில் வாய்மொழி இலக்கியமான நாட்டார் பாடல்களுடன் ஆயிரம் தலைவாங்கிய அபூர்வசிந்தாமணி, ராஜாதேசிங்கு, அல்லிஅரசராணிமாலை, நளமகாராசன் கதை, விக்கிரமாதித்தன்கதை, மாரியம்மன் தாலாட்டுப் போன்றவற்றைப் பாடியும் படித்தும் வந்தார்கள்.


1920ஆம் ஆண்டுவரை இந்த நிலையே நீடித்தது. அதன் பின்னர் அவர்களது உணர்வுகள் அச்சில் இடம்பெற்றன. சட்டநிரூபண சபையிலும் அரசாங்கசபையிலும் கோ.நடேசய்யர் பிரதிநிதித்துவம் வகித்தகால கட்டத்தில் முக்கியபங்கு வகிக்கிறார். மலையகமக்களிடையே ஓர் எழுச்சிக்கும் ஆக்க இலக்கியமுயற்சிக்கும் வித்திட்ட பெருமை “தேசபக்தன்” கோ.நடேசய்யரையே சாரும். இலங்கையின் பத்திரிகைத்துறைக்கு இவர்


**அன்ரனி ஜீவா**

பெரும் பணியாற்றியுள்ளார்.

தென்னிந்தியப் பிராமணரான கோ.நடேசய்யர் தஞ்சாவூரில் அரசாங்கப்பணியில் இருந்து விட்டுப் பின்னர் பத்திரிகை ஒன்றில் பணியாற்றி, பத்திரிகைக்கு சந்தா திரட்ட இலங்கை வந்துள்ளார்.

(தொடரும்)







ஏஏஏ மூவிஸ் இன்ரநஷனல் திரைப்பட நிறுவனத்தினால் முல்லைத்தீவு பாலிநகர் மகா வித்தியாலயம் மற்றும் முல்லைத்தீவு அலம்பில் அ.த.க பாடசாலை என்பவற்றிக்கு சிறுவர் பூங்கா அண்மையில் அமைத்துக் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் திரைப்பட நிறுவனத்தின் தலைவர் க.செவ்வேள் பூங்காவினை திறந்து வைப்பதனையும் நிறுவன நிர்வாக இயக்குநர் சுபாசினி வீரசிங்கே நிற்பதையும் மாணவர்கள் சிறுவர்கள் பூங்காவில் விளையாடுவதையும் படங்களில் காணலாம்.

## யாழ்ப்பாண மாவட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 50 வீதத்தினால் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 50 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த கால புள்ளி விபரத் தரவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது யாழ்ப்பாண மாவட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 4 இலட்சத்தால் குறைவடைந்துள்ளது.

கடந்த கால புள்ளி விபரங்களின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தின் மொத்த வாக்காளர் தொகை 8 இலட்சத்து 15 ஆயிரம் எனவும் தற்போது அந்த எண்ணிக்கை 4 இலட்சத்து 30 ஆயிரம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயிரக்கணக்கானவர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாகவும் பலர் வேறு பிரதேசங்களில் மீள் குடியேறியுள்ளதாகவும் இதனால் வாக்களர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

புதிதாக 90 ஆயிரம் வாக்காளர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது புதிய வாக்காளர் டாப்பு பயன்படுத்தப்பட மாட்டாது எனவும் 2009 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பே பயன்படுத்தப்படும் எனவும் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

## ஆஸியிலுள்ள புகலிட கோரிக்கையாளர்களை ஏற்றுக் கொள்ள மலேசியா இணக்கம்

அவுஸ்திரேலிய புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றுக் கொள்வதற்கு மலேசியா.இணக்கம் வெளியிட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசித்த நூற்றுக்கணக்கான புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றுக்கொள்வதற்கு மலேசியா இணங்கியதாக அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களுக்கு பாரிய தாக்குதலாக இது அமையும் என சுட்டிக்காட்டப்படுகிறது.

இரு தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 800 படகுப் பயணிகளை இவ்வாறு ஏற்றுக் கொள்ள மலேசியா ஒப்புக்கொண்டுள்ளது.


நான்கு ஆண்டு காலப்பகுதியின் பின்னர் இவர்களை மீள குடியேற்றுவதற்கு அவுஸ்திரேலியா இணங்கியுள்ளது.

மலேசியாவில் தற்போது 4 ஆயிரம் புகலிடக் கோரிக்கையாளர்கள் பதிவு செய்து வாழ்ந்து வருவதாக குறிப்பிடப்படுகிறது.

இந்த புதிய திட்டத்தில் படகு மூலம் புகலிடக் கோரிக்கை விடுப்போர் மலேசியாவில் தங்கியிருந்து தமது புகலிடக் கோரிக்கைகளை முன்னெடுக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## கட்சித் தலைவரின் தீர்மானங்களுக்கு எவரும் சவால் விடுக்க முடியாது

### திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

கட்சித் தலைவரின் தீர்மானங்களுக்கு எவரும் சவால் விடுக்க முடியாது என ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

குறிப்பாக செயற்குழு உறுப்பினர்களை தெரிவு செய்யும் போது கட்சியின் தலைவரின் விருப்பு வெறுப்புகளுக்கு சவால் விடுக்கமுடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியில் துரோகிகள் எவரும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மெனிஹின்ன பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கட்சியின் ஆதரவாளர்களை அதிகரிக்கும் நோக்கில் செயற்குழு உறுப்பினர் நியமனங்கள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## 2011.05 09 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1502 - கொலம்பஸ் புதிய உலகிற்கான தனது கடைசிப் பயணத்தை (1502-1504) ஸ்பெயினில் இருந்து தொடங்கினார்.

★ 1671 - ஐரிஷ் இராணுவ அதிகாரியான தோமஸ் பிளட் லண்டன் கோபுரத்தில் ஆங்கிலேய அரச நகைகளைக் களவெடுக்க முனைந்தபோது கைது செய்யப்பட்டான்.

★ 1874 - குதிரையால் செலுத்தப்படும் உலகின் முதலாவது பயணிகள் வண்டி (omnibus) மும்பை நகரில் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1901 - அவுஸ்திரேலியாவின் முதலாவது நாடாளுமன்றம் மெல்பேர்னில் திறந்து வைக்கப்பட்டது.

★ 1914 - துடுப்பாட்டத்தில் 3000 முதற்தர விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய பெருமையை ஜாக் ஹேர்ண் பெற்றார்.

★ 1919 - இலங்கையில் முதன் முதலாக உணவுக் கட்டுப்பாடு அமுலுக்கு வந்தது. அரிசிப் பாவனை மாதமொன்றிற்கு சராசரியாக 30000 தொன் இலிருந்து 20000 ஆகக் குறைக்கப்பட்டது.

★ 1920 - போலந்து இராணுவம் உக்ரேனின் கீவ் நகரைக் கைப்பற்றிய வெற்றி நிகழ்வு கிரெசாட்டிக் நகரில் இடம்பெற்றது.

★ 1927 - கன்பராவில் அவுஸ்திரேலியாவின் நாடாளுமன்றம் திறந்துவைக்கப்பட்டது.

★ 1933 - மகாத்மாகாந்தி தனது சட்ட மறுப்பு இயக்கத்தைக் கைவிட்டார்.

★ 1936 - இத்தாலி அடிஸ் அபாபா நகரை மே5 இல் கைப்பற்றிய பின்னர் எரித்திரியா, எதியோப்பியா, இத்தாலிய சோமாலிலாந்து ஆகிய நாடுகளை இணைத்து இத்தாலிய கிழக்கு ஆபிரிக்கா என்ற நாடு உருவாகியது.

★ 1940 - இரண்டாம் உலகப் போர்: டென்ஹெல்டர் என்ற இடத்தில் பிரெஞ்சு நீர்மூழ்கிக் கப்பலை ஜேர்மனிய யு-9 நீர்மூழ்கிக் கப்பல் தாக்கி மூழ்கடித்தது.

★ 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் யு-110 நீர்மூழ்கிக் கப்பலை பிரித்தானியக் கடற்படையினர் தாக்கிக் கைப்பற்றினர்.

★ 1942 - இரண்டாம் உலகப் போர்: உக்ரேனில் சின்கிவ் நகரில் 588 யூதர்கள் நாசிகளினால் கொல்லப்பட்டனர்.

★ 1945- இரண்டாம் உலகப் போர்: சோவியத் ஒன்றியம் வெற்றி நாளைக் கொண்டாடியது.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: பெர்லினில் கடைசி ஜேர்மன் படைகள் சோவியத் தளபதி கியோர்கி சூக்கொவ் இடம் சரணடைந்தனர்.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: யூகொஸ்லாவியாவில் நிலை கொண்டிருந்த ஜேர்மனிய படைகள் நிபந்தனை இன்றி சரணடைந்தனர். சிலொவேனியாவில் போர் முடிபுக்கு வந்தது.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனிய இராணுவத் தளபதி ஹேர்மன் கோரிங் அமெரிக்க இராணுவத்தால் கைப்பற்றப்பட்டான்.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர் மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட நோர்வேயின் ஜனாதிபதியாக இருந்த விட்குன் உயிஸ்லிங் நோர் வேயில் கைது செய்யப்பட்டார்.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் இராணுவம் பிராக் நகரை அடைந்தன.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: கால்வாய் தீவுகள் பிரித்தானியரால் விடுவிக்கப்பட்டன.

★ 1955 - பனிப்போர்: மேற்கு ஜேர்மனி நேட்டோவில் இணைந்தது.

★ 1956 - உலகின் 8 ஆவது உயரமான மலையான மனஸ்லுவின் உச்சி முதன் முதலாக ஜப்பானிய மலையேறிகளால் எட்டப்பட்டது.

★ 1980 - புளோரிடாவில் லைபீரியாவைச் சேர்ந்த சரக்குக் கப்பல் பாலம் ஒன்றில் மோதியதில் பாலம் சேதமடைந்ததில் 35 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1985 - காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

★ 1987 - போலந்து பயணிகள் விமானம் வார்சாவில் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த 183 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2002 - ரஷ்யாவில் காஸ்பீஸ்க் என்ற இடத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 43 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2004-செச்னியா ஜனாதிபதி அகமது காதீரொவ் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

### பிறப்பு

★ 1408 - அன்னமாச்சாரியார், கர்நாடக இசைக் கலைஞர் (இ.1503)

# ஒசாமா குறித்த புதிய காணொளிகள்; அமெரிக்கா வெளியிட்டுள்ளது

(வோஷிங்டன்)

பாகிஸ்தானில் அபோதாபாத் நகரில் தங்கியிருந்த ஒசாமா தொலைக்காட்சி பார்த்தபடி ஹாயாக இருந்துள்ளான் என்பதைக் காட்டும் வகையிலான காணொளிகளை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

இதன்மூலம் பாகிஸ்தான் எல்லைக்குட்பட்ட நகரில்தான் இருந்துள்ளான் என்பதற்கு மேலும் கூடுதல் ஆதாரமாகவுள்ளது.

கடந்த முதலாம்திகதி இஸ்லாமாபாத் அருகே பதுங்கியிருந்தபோது அமெரிக்கப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டான். இதனைத் தொடர்ந்து இவரது வீட்டில் இருந்து முக்கிய பொருட்கள் கைப்பற்றப்பட்டன. இதில் ஒரு சில காட்சிகள் கொண்ட காணொளி கசட்டை அமெரிக்கா வெளியிட்டது.

இந்த காணொளிகளில் ஒன்றில் ஒசாமா பின்லேடன் தொலைக்காட்சி பார்ப்பது போன்ற காட்சி இடம்பெற்றிருக்கிறது. இந்நேரத்தில் தொலைக்காட்சியில் இவர் உரையாற்றும் படியான காணொளியை இவரே ரிமோட் மூலம் இயக்கிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இந்த வீட்டில் பெருமளவில் ஆடம்பரப் பொருட்கள் எதுவும் இல்லை. சாதாரண மேசைமீது ஒரு பழைய தொலைக்காட்சி மற்றும் இதனைச் சுற்றி மின்வயர்கள் சிதறிக்கிடப்பது போன்று உள்ளது.

இந்த வீட்டில் இருந்தபடி பயங்கரவாதிகளுக்கு உத்தரவிடுவது, அவர்களை செயற்படுத்துவது உள்ளிட்ட விடயங்களில் ஈடுபட்டுள்ளார் என்பதற்கு ஆதாரமாக உள்ளது என அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் தங்களின் கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

மேலும் இங்கிருந்து எடுக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் பல்வேறு தாக்குதல் திட்டங்களை பாகிஸ்தானில் இருந்தபடி நிறைவேற்றியிருக்கிறான் என்பதற்கு இதை விட வேறு ஆதாரம் தேவையில்லை என்றார்.

வெளியிடப்பட்ட காணொளியின் ஒடி



யோவை அமெரிக்கா தடை செய்து விட்டது. இதன்மூலம் ஒசாமாவின் கொள்கைகளை பரவவிடாமல் தடுக்கும் நோக்கமாக அமையும் என்றும் ஒரு அமெரிக்க உளவுத் துறை அதிகாரி தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இந்தோனேசியாவில் விமான விபத்து
## 27 பேர் பலி


(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் நேற்று முன்தினம் நிகழந்த விமான விபத்தில், பயணிகள் மற்றும் விமான ஊழியர்கள் உட்பட 27 பேர் பலியாகினர்.

இந்தோனேசிய அரசுக்குச் சொந்தமான சிறிய ரக பயணிகள் விமானம் ஒன்று, மேற்கு பாபுவா மாகாணம் சாரோங் நகரத்திலிருந்து 400 கி.மீ தொலைவில் உள்ள கைமனா நகரத்திற்கு புறப்பட்டது. அதில் பயணிகள் 21 பேரும், விமான ஊழியர்கள் ஆறு பேரும் பயணித்தனர்.

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில், எதிர்பாராத விதமாக அந்த விமானம் வெடித்துச் சிதறியது. இந்த பயங்கர விபத்தில், அதில் பயணம் செய்த பயணிகள், விமான ஊழியர்கள் உள்ளிட்ட 27 பேரும் பலியாகினர். (ஸ்ரீ)

# ஒசாமாவை சுட்டு வீழ்த்திய படையினர் ஜனாதிபதி பராக் ஒபாமாவுடன் சந்திப்பு




(வோஷிங்டன்)

ஒசாமா பின்லேடனைச் சுட்டு வீழ்த்திய இராணுவ சிறப்பு படையினரை, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். உங்களின் செயல் நாட்டின் வரலாற்றில் நடந்த மிகச் சிறந்த இராணுவ நடவடிக்கைகளில் ஒன்று என பாராட்டினார்.

ஒசாமா பின்லேடனைச் சுட்டு வீழ்த்திய, இராணுவ சிறப்பு அதிரடி படையினரை கென்டகி மாகாணம் போர்ட் கேம்ப்பெல்லில் நேற்று முன்தினம் ஜனாதிபதி ஒபாமா சந்தித்துப் பேசினார். அவருடன் துணை ஜனாதிபதி ஜோ பிடனும் சென்றிருந்தார்.

அங்கு நடந்த நிகழ்ச்சியில் ஒசாமாவைக் கொன்ற சிறப்பு படையினருக்கு நாட்டின் மிக உயர்ந்த இராணுவ விருதான பிரிசிடென்ஷியல் யூனிட் சைட்டேஷன் விருதை வழங்கி கௌரவித்தார்.

பின் அவர்களுக்கு வணக்கம் (சல்யூட்) செய்தார். பின்லேடனை சிறப்புப் படையினர் எப்படிக் கொன்றனர் என்பது குறித்து துணை ஜனாதிபதி ஜோ பிடேன் ஜனாதிபதிக்கு விளங்கினார்.

பின்னர் சிறப்பு படையினர் மத்தியில் பேசிய பராக் ஒபாமா அல் கொய்தாவின் தலையை வெட்டிவிட்டோம். இறுதியில் அவர்களைத் தோற்கடிக்க வேண்டும். நமது முக்கிய குறிக்கோளை நோக்கி நாம் முன்னேறி வருகிறோம். நமது குறிக்கோளின் மையப்புள்ளி, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் தான் உள்ளது என்றார். (ஸ்ரீ-2)

# பாகிஸ்தானில் ஏழு ஆண்டுகளாக தங்கியிருந்த ஒசாமா பின்லேடன்


அபோதாபாத்தில் கொல்லப்படுவதற்கு முன் பாகிஸ்தானில் கடந்த ஏழு ஆண்டுகளுக்கும் மேல் ஒசாமா பின்லேடன் வசித்து வந்ததாக பாக். அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் கைபர்-பக்துன்க்வா மாகாணத்தில் உள்ள அபோதாபாத் நகரில், ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட பின், அந்த வீட்டில் இருந்த, 15 அல்லது 16 பேரை பாக். பாதுகாப்பு பொலிஸார் கைது செய்தனர். இவர்களில் ஒசாமாவின் மனைவிகள் மூன்று பேரும், அவர்களது குழந்தைகளும் அடங்குவர். ஒருமனைவி காயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

ஒசாமாவின் மனைவிகளுள் ஒருவரான அமல் அகமது அப்துல்பத்தாவிடம் (29) பொலிஸார் நடத்திய விசாரணையில் ஒசாமா ஐந்தாண்டுகளாக அபோதாபாத் நகர் வீட்டில் வசித்து வந்தது தெரியவந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் நடந்த விசாரணையில் அபோதாபாத் வீட்டுக்கு வருவதற்கு முன்பே, ஹரிபூர் மாவட்டத்தில் உள்ள சக்ஷா முகமது கான் என்ற கிராமத்தில் ஒசாமா தனது குடும்பத்துடன் இரண்டரை ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வந்ததாக அமல் தெரிவித்துள்ளார்.

அபோதாபாத்தில் இருந்து சக்ஷா கிராமம், 34 கி.மீ, தொலைவில் உள்ளது. இதனால் 2003இல் இருந்தே ஒசாமா பாகிஸ்தானில் வசித்து வந்தது தெரியவந்துள்ளது. (ஸ்ரீ)




ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நேற்று முன்தினம் அணுமின் நிலையங்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் நடந்தது. அதில் ஒருவர் அணுமின் நிலையங்களின் ஆபத்தைக் குறிக்கும் வகையில் கோரமான முகமூடி அணிந்துள்ளார்.




# சிங்கப்பூர் பாராளுமன்றத் தேர்தல் ஆளும் கட்சி அமோக வெற்றி



(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் பாராளுமன்ற தேர்தல் நடந்தது. அதில் ஆளும் மக்கள் செயல் கட்சியும், எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியும் போட்டியிட்டன. தேர்தல் முடிந்த நிலையில் நேற்று முன்தினம் வாக்கு எண்ணிக்கை நடந்து முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் ஆளுங்கட்சி அமோக வெற்றி பெற்றது. மொத்தம் 87 தொகுதிகளுக்கு தேர்தல் நடந்தது.

அதில் 81 இடங்களில் ஆளும் கட்சியான மக்கள் செயல் கட்சி வென்றுள்ளது. இதன்மூலம் அக்கட்சி தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கிறது. எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சிக்கு 6 தொகுதிகள் மட்டுமே கிடைத்துள்ளது. ஆனால் குழு பிரதிநிதித்துவ உறுப்பினர்கள் தேர்தலில் அக்கட்சி முதன்முறையாக வெற்றி பெற்றுள்ளது.

இந்த தேர்தலில் ஆளும் கட்சியான மக்கள் செயல் கட்சி கடுமையான போட்டியை சந்தித்தது. பல தேர்தல் வாக்குறுதிகளை அளித்தது. இருந்தும் கடந்த 2006ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்ற தேர்தலை விட அக்கட்சிக்கு வாக்கு சதவீதம் குறைந்துள்ளது. கடந்த தேர்தலில் 67 சதவீதம் வாக்கு கிடைத்தது. ஆனால் இந்த தடவை அது 60.4 சதவீதமாக குறைந்துவிட்டது.

தேர்தல் வெற்றி குறித்து பிரதமர் லீ சியென் லூங் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் தங்கள் கட்சிக்கு வாக்களித்து வெற்றி பெற செய்த மக்களுக்கு நன்றி கூறினார். (ஸ்ரீ)

# பாகிஸ்தான் அமைச்சரின் வீட்டுக்கருகில் குண்டுவெடிப்பு
## நால்வர் காயம்

வடமேற்கு பாகிஸ்தானில் பெஷாவரின் புறநகரில் மாகாண அமைச்சர் ஒருவரின் வீட்டுக்கு வெளியே குண்டுவெடித்ததில் பொலிஸார் உள்ளிட்ட 4 பேர் காயமடைந்தனர்.

கைபர்-பக்துன்கவா வேளாண் அமைச்சர் அர்பாப் அயூப் ஜனின் வீட்டுக்கு வெளியே அந்த குண்டுவெடித்தது. அவர் ஆளும் அவாமி தேசிய கட்சியைச் சேர்ந்தவர். குண்டுவெடிப்பு நிகழ்ந்தபோது வீட்டில் அமைச்சர் இருந்தாரா என்பது உடனடியாக தெரியவில்லை.

அமைச்சரின் இல்லத்துக்கு வெளியே சோதனைச் சாவடி ஒன்றில் காவல் பணியில் இருந்த பொலிஸ் காவலர்கள் உள்ளிட்ட 4பேர் இந்த தாக்குதலில் காயமடைந்தனர்.

ரிமோட் மூலம் அந்த வெடிகுண்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ளது. குண்டு வெடித்ததற்கு எந்தவொரு இயக்கமும் பொறுப்பேற்கவில்லை.

அபோதாபாத்தில் அல்கொய்தா தலைவர் பின்லேடன் அமெரிக்கப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்ட சில தினங்கள் கழித்து இந்த குண்டுவெடிப்பு நடத்தப்பட்டுள்ளது. பின்லேடன் மறைந்திருந்த அபோதாபாத் நகரம் கைபர்-பக்துன்கவா மாகாணத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# அரசாங்கம் இராணுவமயப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது

## மங்கள சமரவீர குற்றச்சாட்டு

(கொழும்பு)

**அரசாங்கம் நாட்டில் இராணுவ மயப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருதாக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

**பொது மக்கள் விவகாரங்களில் இராணுவத்தினரின் தலையீடு அதிகரித்துள்ளதாகத் குறிப்பிட்டுள்ளார்.**

தெற்கின் நகர அபிவிருத்திப் பணிகளிலும் இராணுவத்தினர் தலையீடு செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளார். மாத்தறை நகரின் அபிவிருத்திப் பணிகளில் இராணுவத்தினர் தேவையின்றி தலையீடு செய்ததாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கு இராணுவத்தினரின் துணை அவசியமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நகர அபிவிருத்தி சட்டங்களுக்கு அமைய நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கான சகல அதிகாரங்களும் மக்களிடம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மாத்தளை நகரில் இராணுவத்தின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும் இது ஆபத்தானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான நடவடிக்கைகள் காணப்படும் நாடுகள் இறுதியில் இராணுவ ஆட்சி நோக்கி நகர்ந்த பல சந்தர்ப்பங்கள் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை என இராணுவத்தினர் மறுத்துள்ளனர். நகர அபிவிருத்திப் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டதில்லை என இராணுவப் பேச்சாளர் உபயமெதவல தெரிவித்துள்ளார்.



எனினும் யுத்த நிறைவின் பின்னர் நாட்டின் பல அபிவிருத்தித் திட்டங்களில் இராணுவத்தினர் காத்திரமான பங்களிப்பினை வழங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார். சிவில் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது இராணுவத்தினரின் கடமைகளில் ஒன்றாகும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## வடமாகாண வலயக் கல்வி பணிப்பாளர்கள் இடமாற்றம்

(அல்வாய்)

வடமாகாணத்தில் உள்ள சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் வடமாகாண கல்வி அமைச்சு இடமாற்றம் செய்யவுள்ளது.

இதற்கான நேர்முகப்பரீட்சை இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3. மணிக்கு வடமாகாண கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளதென உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இராஜவீதியிலுள்ள ஸ்ரீ சக்திவேல் முருகன் தேவஸ்தான அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும்.

இதில் 11ஆம் திருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வைகாசி விசாகத்தன்று மாலை 5 மணிக்கு சுவாமி வீதியுலா வருவார்.

(ஸ்ரீ-2)

# பருத்தித்துறைக் கோட்ட தமிழ்த்தினப் போட்டி முடிபுகள்

(அல்வாய்)

பருத்தித்துறைக் கோட்ட தமிழ் மொழித் தினப் போட்டி முடிவுகள் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

*பிரிவு-1*

**இசையும் அசைவும்**

த.தனுஜா(யா/தும்பளை சிவப்பிரகாச ம. வித்), பூ.நிருஜா(யா/ புற்றளை மகா வித்), யோ.பிரியங்கா (யா/கற்கோவளம் மெ.மி. த.க.பா),

**பாவோதல்**

நா.விபுகா (யா/வட இந்து மகளிர் கல்லூரி), க.கஜனி (யா/தொண்டைமானாறு வீ.ம.வித்), பா.தரணிதரன்(யா/தும்பளை சிவப்பிரகாச.ம.வித்)

**வாசிப்பு**

ர.ஹம்சிகா(யா/மேலைப்புலோலி சைவப் வித்),பா.பிரியதர்சினி(யா/வல்வை சிவகுரு வித்), கு.புருசோத்மன் (யா/தம்பசிட்டி மெ.மி. த.க.பா)

**ஆக்கத்திறன் வெளிப்பாடு (கதைகூறல்)**

மே.சாரங்கன்(யா/ தும்பளை சிவப்பிரகாச ம. வித்),ர.விதுஷன் (யா/அல்வாய் வடக்கு றோ. க.த.க.பா), பி.சபேந்திரன்(யா/தம்பசிட்டி மெ.மி. த.க.பா)

**பேச்சு**

ஜெ.சர்மினி(யா/வட இந்து மகளிர் கல்லூரி), உ.லதுசோபா (யா/சிதம்பரக் கல்லூரி), ஈ.பலதாரணி (யா/தும்பளை சிவப்பிரகாச ம.வித்)

*பிரிவு-2* **வாசிப்பு**

கோ.அருட்செல்வி (யா/ மெதடிஸ்த பெ. உ.பாடசாலை), ந.துவாரகா(யா/வட இந்து மகளிர் கல்லூரி),வி.உதயநிலா(யா/பொலிகண்டி இ.த.க.பா)

**பாவோதல்**

ஜெ.யதுர்சனா(யா/மெதடிஸ்த பெ.உ.பா), பு.பிரியங்கா(யா/ வல்வை சிவகுருவித்), இ.தர்சன்(யா/ஹாட்லிக் கல்லூரி)

**பேச்சு**

சி.வைஷ்ணவி (யா/மெதடிஸ்த பெ.உ. பாடசாலை), சி.சிவதர்சன்(யா/ஹாட்லிக் கல்லூரி), அ.மரியநிலோசா(யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க.பா)

**இசை தனி**

ர.அனுசாந் (யா/ஹாட்லிக் கல்லூரி), வி. றொசானா(யா சென் தொமஸ் றோ.க.பெ.பா), தி.சுபாஸ் (யா/ பரு.சித்தி விநாயகர் வித்)

**நடனம் தனி**

பு.புகழினி(யா/மெதடிஸ்த பெ.உ.பாடசாலை),எஸ்.சஜீதா(யா/தொண்டைமானாறு வீ.ம.வித்), சு.நித்தியபூபதி (யா/வட இந்து மகளிர் கல்லூரி),

**பிரிவு-3 பேச்சு**

பா.சௌமியா(யா/மெதடிஸ்த பெ.உ. பாடசாலை),பா வினோசன்(யா/ஹாட்லிக் கல்லூரி), சி டிசாந்தி(யா/வல்வை மகளிர் ம.வித்)

**பா வோதல்**

பா.நர்மதா (யா/வட இந்து மகளிர் கல்லூரி), இ.சுபாசினி(யா/வல்வை சிவகுரு வித்), த. சஜீவன் (யா/ஹாட்லிக் கல்லூரி),

**இசை தனி**

தி.ஆரணியன்(யா/ஹாட்லிக் கல்லூரி), ஜெ.கிசோதா(யா/மெதடிஸ்த பெ.உ. பாடசாலை),ஜெ.சங்கீதா(யா/தொண்டைமானாறு வீ.ம.வித்),

**நடனம் தனி**

ச.சரண்யா (யா/மெதடிஸ்த பெ.உ. பாடசாலை),எஸ்.சிவாம்பிகை (யா/தொண்டைமானாறு வீ.ம.வித்),வ.மாதுமை(யா/வட இந்து மகளிர் கல்லூரி),

**பிரிவு-4 பேச்சு**

த.கோகுலன் (யா/ஹாட்லிக் கல்லூரி), ரா.திவாகர்(யா/சிதம்பராக் கல்லூரி), ச.தரணியா (யா/ புற்றளை மகா வித்),

**பாவோதல்**

நா.துஷிகா(யா/வட இந்து மகளிர் கல்லூரி), க.கேசவி(யா/வல்வை சிவகுரு வித்), ஞா.குவேந்திரன்(பொலிகண்டி இ.த.க.பா),

**இசை தனி**

'சோ.ரஜீந்தராஜ்(யா/ஹாட்லிக் கல்லூரி), ம. மதுஷா (யா/மெதடிஸ்த பெ.உ.பாடசாலை),அ.அனுசியா(பொலிகண்டி இ.த.க.பா),

**நடனம் தனி**

க.நிரோசினி(யா/மெதடிஸ்த பெ.உ. பாடசாலை),மு.வெண்ணிலா (யா/வட இந்து மகளிர் கல்லூரி), இ.பிரதீபா (யா/வல்வை மகளிர் ம.வித்)

**இசை குழு-1**

யா/ஹாட்லிக் கல்லூரி, பொலிகண்டி இ.த.க.பா,யா/மெதடிஸ்த பெ.உ.பா

**நடனம் குழு-1**

யா/மெதடிஸ்த பெ.உ.பா, யா/ புற்றளை மகா வித்,யா/தொண்டைமானாறு வீ.ம. வித்.

(ஸ்ரீ-3-19)

# ரஷ்யாவும் சீனாவும் இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிக்குமா?

## விஜயதாச ராஜபக்ஷ எம்.பி சந்தேகம்

ரஷ்யாவும் சீனாவும் இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்பதில் சந்தேகம் உள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐ.நா.வின் போர்க்குற்ற அறிக்கையானது இலங்கையின் அனைத்துப் பகுதிகள் மீதுமே குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது. அது நாட்டின் தனியொரு பகுதி மீது குற்றச்சாட்டை முன்வைக்கவில்லை.

இந்த அறிக்கையானது ஐ.நா.பொதுச் செயலரின் கையெழுத்துடன் வெளியாகியுள்ளதால் அனைத்துலக சமூகத்தின் மத்தியில் பெறுமதி வாய்ந்தது.

இது ஐ.நா.சாசனங்களுக்கு முரணானது என்றும் அனைத்துலக சட்டங்களுக்கு முரணானது என்றும் நாம் வாதிட்டு எதிர்ப்புத் தெரிவித்தாலும் ஐ.நா.பொதுச் செயலாளரின் அங்கீகாரத்துடனேயே அது வெளியிடப்பட்டுள்ளது. இலங்கைக்கு எதிரான தீர்மானம் மனித உரிமைகள் பேரவையில் 2009 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட போது பல்வேறு நாடுகளின் ஆதரவுடன் அதை அரசு சமாளித்துக் கொண்டது.

மனித குலத்துக்கு எதிரான மீறல்கள் எதுவும் இடம்பெற்றதாக நம்பகமான எந்தவொரு ஆதாரமோ தகவல்களோ முன்வைக்கப்படாததால் அப்போது சமாளிக்க முடிந்தது.

ஐ.நா.வின் அறிக்கை வெளியான பின்னர் அப்போது ஆதரவளித்த சில நாடுகள் இலங்கைக்கான ஆதரவை விலக்கிக் கொள்ளலாம்.சீனாவோ ரஷ்யாவோ தொடர்ந்தும் இலங்கைக்கு ஆதரவளிக்கும் என்பதில் சந்தேகம் உள்ளது. அவை முற்றிலும் ஜனநாயக நாடுகள் அல்ல.

அவை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளை பகைத்துக் கொள்வதைத் தவிர்க்க இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டு வரப்படும் போது சமுகமளிக்காமல் ஒதுங்கிக் கொள்ளவும் கூடும். ஏனென்றால் அவற்றின் 60 தொடக்கம் 70 வீதம் வரையிலான சந்தை மேற்குலகையே தங்கியுள்ளது என்றும் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 10.04.2011 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தாயாரும் குடும்பத் தலைவியுமான

### அமரர் திருமதி தணிகாசலம் கதிராசிப்பிள்ளை



அவர்களின் வீட்டுக்கிருத்தியம் மற்றும் சபிண்டீகரணக் கிரியைகள் 10.05.2011 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் ஆவரங்காலிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மதியபோசன நிகழ்வு ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சிவன் வீதி,
ஆவரங்கால், புத்தூர்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(4864)

# காணிப்பிணக்குகளை தீர்க்கும் வகையில் நல்லூரில் நிலசக்தி அலுவலகம் அமைப்பு

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

காணி தொடர்பான பிணக்குகளை தீர்க்கும் முகமாக நல்லூர் பிரதேச செயலகத்தில் நிலசக்தி அலுவலகம் அமைக்கப்படவுள்ளதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

காணிப் பயன்பாட்டு திட்டமிடல் அலுவலக திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன் பின் பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணி தொடர்பான பிணக்குகளை தீர்க்கும் முகமாகவே வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்த மின்சபிய என்று அழைக்கப்படும் நில சக்தி அலுவலகம் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மிக விரைவில் இவ் அலுவலகத்தை அமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் வாக்குறுதியளித்துள்ளார்.

மேலும் இந்த அலுவலகத்தை முதலில் நல்லூர் பிரதேச செயலகத்தில் அமைக்க வேண்டும் எனவும் என்னால் முன் மொழியப்பட்டுள்ளது. இந்த மின்சபிய அலுவலகத்தின் மூலம் நிரந்தர உறுதிகளை காணிகளுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

பூரணமாகத் திருத்தியமைக்கப்பட்டு பிணக்குகள் தீர்க்கப்பட்டு காணிகளுக்கு உறுதிகள் வழங்கும்போது அதனை வைத்து வங்கிக் கடன் வசதிகளையும் மக்கள் இலகுவாகப் பெறமுடியும்.

இதேவேளை நவீன வசதிகளோடு புவியியல் சார்ந்த தரவுகளை நடைமுறைப்படுத்தும் வகையிலும் சீரான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இவற்றின்மூலம் எவ்வித குழப்பங்களுமின்றி காணியின் உறுதியை உரியவர்களிடம் ஒப்படைக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் கோயில்களுக்குச் சொந்தமான காணிகளைச் சிலர் ஆக்கிரமித்துள்ளனர். இதனால் பல பிரச்சினைகள் ஏற்படுகிறது. இதனை நிவர்த்தி செய்ய ஒரு குழுவை அமைத்து மக்களும் பாதிக்கப்படாமல் கோயிலும் பாதிக்கப்படாமல் உறுதிகளை உரியமுறையில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தேன்.

இத்திட்டம் யாழ்.குடாநாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.



இதன்மூலம் மக்கள் வீட்டுத் திட்ட வசதிகளை இலகுவாகப் பெறமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவிற்கான பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமானது எதிர்வரும் 11 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2

❖❖❖❖❖

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 10 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

(ஸ்ரீ-3-10)

## சட்டவிரோதமாக அரச காணி பகிர்வுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

அரச காணிகளுக்கு போலியான உறுதிப் பத்திரங்களை தயாரிப்பதற்கு உதவியளிக்கும் எந்தவொரு அதிகாரிக்கும் எதிராக பாரபட்சமின்றி சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என சபாநாயகர் சம ) ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை அபிவிருத்தி வலயத்தில் அண்மையில் பாரியளவில் காணி மோசடி இடம்பெறுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்தே அவர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இதுதொடர்பான நிகழ்வொன்று நேற்று முன்தினம் அம்பாந்தோட்டையில் இடம்பெற்றுள்ளது.

காணி உறுதிப்பத்திரத்தை தங்களது பெயருக்கு சட்ட விரோதமாக மாற்றிக் கொள்பவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேபோன்று அதனை கண்காணிக்கத் தவறும் கிராம சேவையாளர்களும் பிரதேச செயலாளர்களும் சட்ட ரீதியான சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி வரும் எனவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## தலை துண்டிக்கப்பட்ட நிலையில் புலியின் சடலம் மீட்கப்பட்டது

திருகோணமலை ஏ-15 வீதியின் 4 ஆவது மைல்கல் பகுதியில் நேற்று முன்தினம் காலை தலை துண்டிக்கப்பட்ட நிலையில் காட்டுப் புலி ஒன்று பிரதேசவாசிகளால் கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த பிரதேசவாசிகள் வழங்கிய தகவலை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த காட்டுப் புலியின் உடலை மேலதிக விசாரணைகளுக்காக எடுத்துச் சென்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வன ஜீவராசிகள் திணைக்களத்துடன் இணைந்து பொலிஸாரும் மேற்கொண்டு வருகின்றனர். பெருமளவான மக்கள் சம்பவ இடத்துக்கு வந்து காட்டுப்புலியினை பார்த்துச் சென்றனர். (ஸ்ரீ-2)

## இந்தியாவுக்கு தங்கம் கடத்திய ஏழு இலங்கையர்கள் கைது

இந்தியாவுக்கு தங்கம் கடத்தியதாகத் தெரிவிக்கப்படும் இலங்கையர்கள் ஏழு பேரும் இந்தியர் ஒருவரும் புலனாய்வுப் பிரிவினரால் மும்பையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் 1.84 கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை இந்தியாவிலிருந்து கொழும்புக்கு கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தெற்கு மும்பையிலுள்ள ஹோட்டலொன்றில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் மூவர் கொழும்பிலிருந்து இந்தியாவுக்கு தங்கம் கடத்தியதை ஒப்புக் கொண்டுள்ளனர்.

மற்றுமொரு சந்தேக நபர் சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார்.

இவர்களுக்கான விசாரணைகள் முடிவடைந்துள்ளன. பாதுகாப்பு வழங்குமாறு கோரப்பட்ட நிலையில் சந்தேக நபர்கள் நீதிமன்ற பாதுகாவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையிலிருந்து தங்கம் கடத்துவதில் தனது பங்களிப்புக் குறித்து இலங்கையர் ஒருவர் தமிழில் வாக்குமூலம் வழங்கியுள்ளதாக அரச வழக்குத் தொடுநர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கைக்குண்டொன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது

(கொழும்பு)

திருகோணமலையிலிருந்து கைக்குண்டொன்றை எடுத்து வந்த இருவர் தம்புள்ளையை அண்மித்த கலேவெலையில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனியார் பேருந்தொன்றில் கைக்குண்டை மறைத்து வைத்த நிலையில் எடுத்துச் செல்ல முற்படுகையில் கைது செய்யப்பட்ட பிரஸ்தாப இருவரில் பெண்ணொருவரும் உள்ளடங்குவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு அல்லது குருநாகலையில் இயங்கும் சட்டவிரோத கும்பல்களுக்கு விற்பனை செய்யும் நோக்குடன் அவர்களை கைக்குண்டை எடுத்து வந்திருப்பதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அத்துடன் அவர்களிடம் மேலும் குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்கள் இருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-2)








கிளிநொச்சி மாவட்டத்தில் வடமாகாண ஆளுநரின் உபஅலுவலகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்திரசிறி மங்கல விளக்கேற்றுவதையும், அலுவலக பெயர்ப்பலகையை திரை நீக்கம் செய்வதையும் அருகில் பிரதிப்பிரதம செயலாளர் தி.இராசநாயகம் நிற்பதையும் அலுவலக கட்டிடத்தை திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்-என்.குமார்)*

இளைஞர்களே! உங்கள் ஒழுக்கத்தை உறுதிப் படுத்துங்கள். உங்கள் சிந்தனைகளையும் செயல்களையும் அடக்கியாளக் கற்றுக் கொள்ளுங்கள்.
*– மகாத்மா காந்தி*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## யாழ். பல்கலைக்கழக மாணவர்களே நீங்களுமா? தமிழினத்தை குத்துகிறீர்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாடுகள் ஆழ்ந்த கவலை தருவதாக உள்ளன.

தமிழ் மக்களுக்கான கல்விக் கலா பீடமாக இருக்கக் கூடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள், எமது இனத்தின் அவல நிலையை உணராதவர்களாக இருப்பது வலி தருவதாகும்.

பல்கலைக்கழகங்கள் புத்திஜீவிகளை உருவாக்கும் உயர் கல்வி நிலையங்களாக இருக்கின்ற போதிலும் எங்கள் இனத்துக்காக வாய்த்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கின்ற மாணவர்கள் தங்களை மறந்தவர்களாக, தங்கள் எதிர் காலத்தை உணராதவர்களாக, தமக்கு இருக்கக் கூடிய பொறுப்புக்கள் பற்றி எதுவும் அறியாதவர்களாக இருப்பது எமது இனத்தின் ஊழ்வினைப் பயனோ என்று எண்ணத் தோன்றுகிறது.

நேற்று முன்தினம் இரவு வணிக முகாமைத்துவப் பீட மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பு நிலைமை, அதன்போது குறிப்பிட்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் சொத்துக்களை சேதம் செய்து நாசமாக்கியமை பற்றி எண்ணும்போது அரசியலும், விலைபோதல்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சிலரிடையே ஏற்பட்டுவிட்டதென்பதையும் இத்தகைய குழப்பங்களை ஏற்படுத்துவதன் நோக்கம் என்ன என்பதை புரிய முடியவில்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் குழப்பம் இல்லாத– எமக்கு ஏற்பட்ட இழப்புத் தொடர்பில் ஆழ்ந்த சிந்தனையுள்ள பெரும்பாலான மாணவர்கள் இருக்கும்போது ஒரு குறிப்பிட்ட சில மாணவர்களின் ஊதாரித்தனங்கள் அரங்கேறுவது வேதனைக்குரியது.

பல்கலைக்கழக மாணவர் இடையே சர்ச்சைகள் ஏற்படுவதும் பின்னர் அவை பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் மற்றும் நிர்வாகத்தால் சுமுகமாக தீர்த்துவைக்கப்படுவதுமான நிகழ்வுகள் சாதாரணமானவை.

ஆனால் இத்தகைய நிலைமைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் போருக்குப் பின்பான–இழப்புகளின் காயங்களும், காணாமல் போன சொந்தங்களுக்கான தேடல்களும் இன்னமும் ஆறாத நிலையில், எங்கள் மாணவர்கள் முறுகிக் கொள்வது, தமக்குள் அடிபட்டுக் கொள்வது என எதையுமே அனுமதிக்க முடியாது.

இத்தகைய கைகலப்புக்கள், கலாட்டாக்களில் ஈடுபடும் மாணவர்களிடையே உள்நோக்கம் உண்டு என்பதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது.

அதே நேரம் இத்தகைய மாணவர்களை வழிப்படுத்துவதில் உள்ளக, வெளியக சக்திகளும் இருக்கவே செய்கின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்திற்குள் பொலிஸாரை, பாதுகாப்புப் படையினரை நிறுத்துவதற்கான ஒரு ஏற்பாடாகக் கூட இதனை நோக்குபவர்களில் நாம் குறை கண்டுவிட முடியாது. அதிலும் ஒரு நியாயம் இருக்கவே செய்கின்றது.

எதுவாயினும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தாங்கள் எந்த நோக்கத்துக்காக வந்தார்களோ அதனை நிறைவேற்றிச் செல்வதே புத்திசாலித்தனம். இதைவிடுத்து நீங்களும் தமிழினத்தின் உடலை குத்திச் சுவைபார்க்க நினைத்தால் அதைவிடப் பாவம் எதுவும் இல்லை.

# வெளி நாட்டமைச்சு முற்று முழுதாக மாற்றியமைக்கப்படல் வேண்டும்

## பேராசிரியர் ரொஹான் குணரத்தின வலியுறுத்து

(கொழும்பு)

வெளிநாட்டமைச்சின் கட்டமைப்பு முற்று முழுதாக சீரமைக்கப்பட வேண்டுமென பயங்கரவாத ஆய்வு தொடர்பான சர்வதேச நிபுணர் பேராசிரியர் ரொஹான் குணரத்தன வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான யுத்தம் நடைபெற்ற காலத்தில் வெளிநாட்டமைச்சு சர்வதேசத்துடன் நல்லுறவைப் பேணத்தவறியமையே இன்றைய சிக்கல்களுக்குக் காரணம் என்பதை குறிப்பிட்டுக் காட்டும் அவர், ஒரு சில முக்கிய விடயங்களின் போது வெளிநாட்டமைச்சின் அதிகாரிகள் உண்மை நிலைமையை தெளிவுபடுத்துவதில் அசிரத்தையாக செயல்பட்டிருப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படக் கூடிய பிரசாரங்களின் போது வெளிநாட்டமைச்சின் அதிகாரிகள் அவற்றுக்குப் பதிலளிக்க நீண்ட காலம் எடுத்துக் கொண்டதுடன் சில வேளைகளில் அவ்வாறு வழங்கிய பதில்களும் திருப்திகரமானதாக இருக்கவில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவ்வாறான அசிரத்தையான நடவடிக்கைகள் காரணமாகவே இலங்கை இன்று ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு போன்ற அறிக்கைகளின் முன் தலை குனிந்து நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

எனவே எதிர்காலத்திலும் இந்நிலை ஏற்படாதிருக்க வெளிநாட்டமைச்சின் அதிகாரிகள்மற்றும்தந்திரோபாயவழி முறைகளை முற்றாக மாற்றியமைக்க வேண்டியது அத்தியாவசியமானது என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

(ஸ்ரீ–2)

# யாழ்ப்பாணக் கல்வி வலய தமிழ்த்தின போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய தமிழ்த் தினப் போட்டி முடிவுகளை வலயப் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இதில் முதல் 3 இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**வாசிப்பு**

**பிரிவு- 1**

ச.குகாநந் (யா/சென்.ஜேம்ஸ்), ரா.ஜீவிதா (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), ப.பவதாரகன் (யா/இந்து ஆரம்ப பாடசாலை), து.வைஷ்ணவி (யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை)

**பிரிவு–2**

பத்சாங்கிதசர்மா (யா/இந்துக் கல்லூரி), செ.நிக்ஷனா (யா/ஆவரங்கால் ந.இ.வி), ர.சாந்தரூபன் (யா/மத்திய கல்லூரி)

**பேச்சு**

**பிரிவு–2**

த. அபிநாத் (யா/இந்துக் கல்லூரி), அ. அருண்ஜா (யா/பாசையூர் சென் அன்ரனி), தி.சங்கவி (யா/புனித திரேசா மகளிர் கல்லூரி)

**பிரிவு–3**

யூ.சலோமி (யா/பாசையூர் சென் அன்ரனி), இ.ஜனரஞ்சனி (யா/கொக்குவில் இந்து கல்லூரி), கௌரிபாலன் (யா/சென்ஜோன்ஸ் கல்லூரி)

**பிரிவு–4**

ப. சதிர்தர்சினி (யா/வேம்படி மகளிர் உ. பா), ச.டிசாந்தன் (யா/சென் மேரிஸ் வித்தி), க.ஜஸ்மிதா (யா/கொக்குவில் இந்து கல்லூரி)

**பிரிவு–5**

ச.சாயிராம் (யா/மத்திய கல்லூரி), அ.உமாகரன் (யா/இந்துக் கல்லூரி), கு.நேருஜன் (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி)

**பாவோதல்**

**பிரிவு–1**

அ.ஆரபி (யா/சென்.ஜோன் பொஸ்கோ), த.ஜிபசாந் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை), ஸ்ரீ.மினோஷிகா (யா/கோப்பாய் ம.வி)

**பிரிவு–2**

இ.லதாங்கி (யா/வேம்படி ம.உ.பா), உ. விதுஷன் (யா/இந்துக் கல்லூரி), ச.சிந்திஜன் (யா/சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

**பிரிவு–3**

தெ.திலக்ஷி (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), சி.ஷாமினி (யா/இந்து மகளிர் கல்லூரி), உ.துளசிகா (யா/கோப்பாய் ம.வி)

**பிரிவு–4**

ச.சாரங்கா (யா/வேம்படி ம.உ.பா), உ.ரசிந்தா (யா/கோண்டாவில் இ.ம.வி), ச.மதுராயினி (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்)

**பிரிவு–5**

ர.ஆன்ரோனியா (யா/சென்.ஜேம்ஸ்), சி.ஜெசிந்தா (யா/முத்துத்தம்பி ம.வி), ப.எழிலினி (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

(தொடரும்)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் மின் அத்தியட்சகரும், முன்னாள் மின்கண்காணிப்பாளரும், கிளி.மாவட்டத் தமிழ்ச் சங்க முன்னாள் செயலாளமான நா.வை.குமரிவேந்தன் (மகேந்திரராசா) எழுதிய "பெய்யெனப் பெய்யும் மழை" ஒருங்கிருக்கை (யோகாசன)நெறி நூல்கள் வெளியீட்டு விழா எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் கொழும்பு றோயல் கல்லூரி முதல்வரும், கொழும்புத் தமிழ்ச் சங்கக் கல்விக்குழுச் செயலாளருமான மா.கணபதிப்பிள்ளையின் தலையையில் நடைபெறும்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராசா, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி முன்னாள் முதல்வர் முனைவர் செ.திருநாவுக்கரசு, மன்னார்த் தமிழ்ச்சங்கத் தலைவர் அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார், வவுனியா தமிழ்ச்சங்கத்தலைவரும் வவுனியா மத்திய கல்லூரி ஆசிரியருமான தமிழருவி த.சிவகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்புவிருந்தினர்களாக, இலங்கை, மின்சாரசபையின் வவுனியா தலைமைப் பொறியியலாளர் செ.பிரபாகரன், கிளிநொச்சி கல்வி வலயப்பணிப்பாளர் த.குருகுலராசா, கொழும்பு ஊடகவியல் இதழியல் விரிவுரையாளர் திருவாட்டி தேவகௌரி சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் " பெய்யெனப் பெய்யும் மழை" என்ற நூலினை பேராசிரியர் சி.சிவலிங்கராசா வெளியிட்டு வைக்க முதல் பிரதியை யாழ்ப்பாணம் முன்னாள் அஞ்சல் முதல்வர் க.தம்பிஜயா பெறுவர்.

இரண்டாவது நூல் வெளியீடான "ஒருங்கிருக்கை (யோகாசன) நெறி" என்ற நூலினை இலங்கை மின்சார சபையின் வவுனியா தலைமைப் பொறியியலாளர் செ.பிரபாகரன் வெளியிட அதன் முதல் பிரதியை வவுனியா சமாதான நீதவான் து.கன கரத்தினம் பெறுவார்.

(ஸ்ரீ–2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



★ சுயநலமற்ற தன்மையே கடவுள் ஆகும். ஒருவன் செல்வந்தனாக வாழ்ந்தபோதும் சுயநலம் இல்லாதவனாக இருந்தால் அவனிடம் கடவுள் இருக்கிறார்.

★ ஒரு நல்ல இலட்சியத்துடன் முறையான வழியைக் கைக்கொண்டு தைரியத்துடன் வீரனாக விளங்குங்கள். மனிதனாக பிறந்ததற்கு வாழ்ந்து சென்றபின்னும் ஏதாவது அடையாளத்தை விட்டுச் செல்லுங்கள்.

★ உங்களுடைய நரம்புகளை முறுக்கேற்றுங்கள். காலம் எல்லாம் அழுது கொண்டிருந்தது போதும். இனி அழுகை என்ற பேச்சே இருக்கக் கூடாது. சுயவலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள்.

★ தூய்மையாக இருப்பதும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதும் தான் எல்லாவழிபாடுகளின் சாரமாகும். ஏழைகளிடமும் பலவீனர்களிடமும் நோயாளிகளிடமும் இறைவனைக் காண்பவனே உண்மையான வழிபாடு செய்பவன் ஆவான்.

★ கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக் கிறார். இதைத் தவிர தனியாக வேறு கடவுள் ஒருவர் உலகில் இல்லை.

# ஓமந்தை மகா வித்தியாலயத்திற்கு வடமாகாண ஆளுநர் விஜயம்



(யாழ்ப்பாணம்)

வவுனியா ஓமந்தை மத்திய மகா வித்தியாலயம் அண்மையில் இராணுவத்தினரால் வவுனியா வடக்கு கல்வி நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. அதன் பின்னர் குறித்த பாடசாலைக்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி பாடசாலையை நேரில் சென்று பார்வையிட்டதுடன் அங்குள்ள நிறைகுறைகளை வவுனியா வடக்கு கல்விப்பணிப்பாளர் திருமதி.அன்ரன் சோமராஜிடம் கேட்டு அறிந்து கொண்டார். அத்துடன் குறித்த பாடசாலை தொடர்பான வேலைத்திட்ட மதிப்பீடுகளை உடனடியாக ஆளுநரின் கவனத்திற்கு அனுப்பி வைக்குமாறும், மிகவிரைவில் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் ஆலோசனை கூறினார்.

இந்நிகழ்வில் வவுனியா கல்வித்திணைக்கள பொறியியலாளர் உட்பட கல்வித்திணைக்கள உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

# தேசிய இடமாற்றக் கொள்கைக்கு மாறாக கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் இடமாற்றங்கள் வழங்கப்படும் போது அது தேசிய இடமாற்றக் கொள்கைக்கு மாறாகவே வழங்கப்படுகின்றதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்களானது அரச நிதியை பயன்படுத்தி அண்மையில் நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகளிலேயே வழங்கப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், கிழக்கு மாகாணத்தில் 15 கல்வி வலயங்கள் உள்ளன. அதிலும் 5 இடங்களில் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன. இந்த பயிற்சிப் பட்டறைகளிலேயே ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கான இடமாற்றங்களானது 2007 20 ஆம் இலக்கச் சுற்று நிருபத்தின் படியே இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு ஒரு முறையைக் கையாளாமல் அரச நிதியைப் பயன்படுத்தி மட்டக்களப்பு லோட்டஸ் விடுதியிலும் தேலங்கமூவ அபிவிருத்தி நிலையம் உள்ளிட்ட ஐந்து இடங்களிலும் பயிற்சிப் பட்டறைகளை நடத்தி அதன் ஊடாக இடமாற்றங்களை வழங்குவது நியாயமற்ற செயல். இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிழக்கு மாகாண ஆளுநருக்கும், கல்விஅமைச்சின் செயலாளருக்கும் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளோம் என்றார். (ஸ்ரீ-2)

# 2100 இல் கடல் மட்டம் 1.6 மீற்றர் உயரும்

ஆர்டிக் மற்றும் கிரீன்லாந்து பகுதிகளில் ஏற்பட்டுள்ள தட்ப, வெப்ப நிலை மாற்றத்தால் பனிக்கட்டிகள் அதிகமாக உருகி, ஏராளமான அளவில் நீர் வெளியேறி வருகிறது. இதே நிலை நீடித்தால், எதிர்வரும் 2100ஆம் ஆண்டுக்குள் வங்கதேசம் முதல் புளோரிடா வரையிலும், பசுபிக் பெருங்கடலின் தாழ்வான பகுதிகளிலும் லண்டன் முதல் ஷங்காய் வரையிலான நகரங்களிலும் கடல் மட்டம் 1.6 மீற்றர் அளவிற்கு அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும் சுனாமித் தாக்கும் ஆபத்தும் அதிகரிக்கும் என்று கடல் நீர்மட்டம் குறித்த சர்வதேச ஆய்வு தெரிவிக்கிறது.கடந்த6ஆண்டுகளாக பூமி உருண்டையின் வெப்ப நிலை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறது. குறிப்பாக, ஆர்டிக் பகுதியில் வெப்ப நிலை உயர்ந்துள்ளதாக 8 நாடுகள் கொண்ட ஆர்ட்டிக் மானிபரிங், அசெஸ்மென்ட் திட்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இதனால் பனிக்கட்டிகள் தொடர்ந்து உருகி, ஏராளமான அளவில் நீர் வெளியேறுகிறது. இவ்வாறு வெளியேறும் நீர் கடலில் கலப்பதால் கடல் மட்டம் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் 0.9 மீற்றர் முதல் 1.6 மீற்றர்வரைஅதாவது 5 அடி 3 அங்குலம் வரை கடல் மட்டம்உயரும்என்று கணிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)


அம்பிகை துணை

# 31 ஆம் நாள் நெஞ்சகலா நினைவலைகள்



அன்னை மடியில் 08.11.1946

அம்பிகை அருளடியில் 09.04.2011

ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞரும்
நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவை
முன்னாள் உபசெயலாளருமான
"பாவாணர்"- "கலைஞானச்சுடர்"

## டானியல் தேவமதுரம்

பாங்குறு வதனமும் பவளவாய் சிரிப்புமாய்
பக்திமை பொதிந்த புலவர் பெருமகனே!
தீங்கவிகள் பாசுரங்கள் தேமதுரத் தமிழினிலே
திக்கெட்டும் துதிபாட தரணிதனைத் துறந்தீரோ?
ஏங்குகிறோம் என்றும் எண்ணங்கள் அலைமோத
எம்முயிர்த் தந்தைபோல் எமக்கு எவருளரோ?
நீங்காத சோதியாய் நின்னாத்மா நிறைவுடனே
நீள்சடையான் பாகத்தாள் நிறைகழலில் நித்தியமே!

கவியாக்கம் "தேமதுரன்"
தே.சுகிர் நாகேந்திரா

09.04.2011 அன்று இறைபதம் இணைந்த எமது குடும்பத்தலைவர் டானியல் தேவமதுரம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 07.05.2011 சனிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 09.05.2011 இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் கலந்து கொண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"கேந்திரவதிகை"
இல.7, பூமகள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(4890)



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்

# புதிய அனுமதிகள்

**கல்வியியல் முதுமாணி - 2011/12 (அணி IX)**
**முதுகலைமாணி - சைவசித்தாந்தம் 2011/12 (அணி III)**
**முதுகலைமாணி - தமிழ் 2011/12 (அணி III)**

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**1. கல்வியியல் முதுமாணி**

1. அனுமதிக்குரிய தகைமைகள்

➢ "அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமும், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவும்"

அத்துடன்

1) ஒரு பாடசாலையில் அல்லது யாதேனும் கல்வி நிறுவனத்தில் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டு கற்பித்தல் அனுபவம்

அல்லது

2) மேற்படி கற்கைநெறிக்குப் பொருத்தமான கல்விசார் பணிகளில் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டு அனுபவம்

2. தெரிவு முறைமை:

எழுத்துத் தேர்வும், நேர்முகத் தேர்வும்
(எழுத்துத் தேர்வு கல்விசார் பொதுத் தகைமையை பரீட்சிப்பதாக அமையும்)

கற்கைக் காலம்: ஒரு வருடம்
மொழி மூலம்: தமிழ்

விண்ணப்பப் படிவக் கட்டணம்: 500/-

**2. முதுகலைமாணி - சைவசித்தாந்தம்/முதுகலைமாணி- தமிழ்**

அனுமதிக்குரிய தகைமைகள்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதாவது ஒரு கற்கை நெறியிற் பட்டதாரியாக உள்ள எவரும் விண்ணப்பிக்கலாம். மேலும் பல்கலைக்கழக மூதவையால் ஏற்கப்படக் கூடிய வேறு தகுதிகளும் அனுபவமும் உடையவர்களின் விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படலாம்.

கற்கைக் காலம்: ஒரு வருடம்
மொழி மூலம்: தமிழ்
தெரிவு முறைமை: நேர்முகத்தேர்வு

✹ குறிப்பு: போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாவிடின் மேற்படி கற்கைநெறியானது இரத்துச் செய்யப்படக்கூடும்.

விண்ணப்பப் படிவக் கட்டணம்: 300/-

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கிளையில் கட்டணத்தைச் செலுத்தி உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்பப் படிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 5/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட 23 x 10 செ.மீ அளவுள்ள கடித உறையை உதவிப்பதிவாளர், உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கைநெறியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் 10.06.2011ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்களும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
05.05.2011

(சி-3174)

DLF IPL ஐ.பி.எல் கொண்டாட்டம்

ஏப்பிரல் 8 முதல் மே 28 வரை

# ஹயில், டில்சான் ரன் மழை பொழிந்தனர்

# கொச்சி அணியை சுருட்டி வீசியது பெங்களூர்

(பெங்களூர்)


கிறிஸ் ஹயில், டில்சான் அதிரடியில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் கொச்சி தஸ்கர்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் 10 அணிகள் மோதும் 4 ஆவது இருபது-20 தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் பெங்களூரில் நேற்று நடைபெற்ற 50 ஆவது போட்டியில் விக்டோரி தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் ஜெயவர்த்தன தலைமையிலான கொச்சி தஸ்கர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொச்சி தஸ்கர்ஸ் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொச்சி தஸ்கர்ஸ் அணிக்கு கேலிங்கர்-மக்குலம் ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கினர்.



இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 5.3 ஓவர்களில் 43 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது பிரண்டன் மக்குலம் 16 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 22 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய பார்தீவ் பட்டேல் சிறப்பாக ஆட, மறுமுனையில் கேலிங்கர் 25 பந்துகளில் (3பவுண்டரிகள் உட்பட) 24 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.


தொடர்ந்து அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன 3, பார்தீப் பட்டேல் 19, ஹோட்ஜ் 5 ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழக்க கொச்சி தஸ்கர்ஸ் அணி 13.3 ஓவர்களில் 89 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்தது.

பின்வரிசையில் ஜடேஜா 23, கோமிஸ் 7, பவார் 8 ஓட்டங்களைப் பெற கொச்சி தஸ்கர்ஸ் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 125 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் அரவிந்த், அணித்தலைவர் விக்டோரி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சகீர் கான், ஹயில், மிதுன் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 126 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற சுலப இலக்கை விரட்டிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணிக்கு ஹயில்-டில்சான் ஜோடி அதிரடி ஆரம்பம் வழங்கினர்.

இதில் ஆர்.பி.சிங்கின் முதலாவது ஓவரின் 6 ஆவது பந்தில் சிக்ஸர் விளாசி ஹயில் கலக்கினார். அடுத்து பவார் வீசிய இரண்டாவது ஓவரின் முதலிரண்டு பந்துகளிலும் பவுண்டரி அடித்த டில்சான் 5 ஆவது பந்தில் பவுண்டரி, 6 ஆவது



பந்தில் சிக்ஸரும் விளாசி மொத்தம் 20 ஓட்டங்கள் எடுத்தார்.

### ஹயில் ரன் மழை

இந்நிலையில் மூன்றாவது ஓவர் வீசுவதற்கு பரமேஸ்வரன் அழைக்கப்பட்டார். இந்த ஓவரின் முதலிரண்டு பந்துகளையும் சிக்ஸராக மாற்றினார் ஹயில். இரண்டாவது பந்து முறையற்றது (No ball) என நடுவர் அறிவிக்க அடுத்த பந்து பிறிஹிற்றாக (Free hit) மாறியது.

இதில் இரண்டாவது, மூன்றாவது பந்துகளை பவுண்டரிக்கு அனுப்பிய ஹயில் நான்காவது, ஐந்தாவது பந்துக்களில் சிக்ஸர் விளாசினார். 6 ஆவது பந்தில் பவுண்டரி அடித்த கிறிஸ் ஹயில் 3 ஆவது ஓவரில் மொத்தம் 36 ஓட்டங்களை குவித்து அசத்தினார்.

எனினும் கிறிஸ் ஹயில் 16 பந்துகளில் (3 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 44 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ஹோலி சிறப்பாக ஆட மறுமுனையில் டில்சான் 30 பந்துகளில் அரைச்சதம் கடந்து சாதித்தார்.

இந்நிலையில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 13.1 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 128 ஓட்டங்களைக் குவித்து 9 விக்கெட்டுக்களால் இலகுவான வெற்றி பெற்றது.

இதில் திலகரட்ண டில்சான் 31 பந்துகளில் (8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 57 ஓட்டங்களையும் விராட் ஹோலி 33 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 27 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

இவ் வெற்றியின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 10 ஆவது போட்டியில் 6 ஆவது வெற்றியைப் பதிவு செய்தது.

இப் போட்டியில் சகலதுறையிலும் ஜொலித்த பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியின் கிறிஸ் ஹயில் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

## மஞ்சு வன்னியாராச்சியின் தங்கப்பதக்கம் பறிக்கப்பட்டது



கடந்த பொதுநலவாய விளையாட்டு விழாவில் குத்துச்சண்டை போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற இலங்கை வீரர் மஞ்சு வன்னியாராய்ச்சி தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்து விவகாரத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளதாக பொதுநலவாய விளையாட்டுச் சம்மேளனம் நேற்று அறிவித்துள்ளது.

இதனால் அப்போட்டியில் அவர் பெற்ற தங்கப்பதக்கம் பறிக்கப்பட்டுள்ளதாகவும் அச் சம்மேளனம் அறிவித்துள்ளது.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் கூடிய பொதுநலவாய விளையாட்டுச் சம்மேளனத்தின் ஒழுக்காற்றுக் குழு இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

கடந்த வருடம் புதுடில்லியில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டு விழாவில் 56 கிலோகிராம் எடைக்கு உட்பட்டவர்களுக்கான குத்துச்சண்டைப் போட்டியில் மஞ்சு வன்னியாராச்சி தங்கப்பதக்கம் பெற்றிருந்தார். ஆனால் தடைசெய்யப்பட்ட நன்ட்ரோலின் எனும் ஊக்கமருந்தை உட்கொண்டதால் அவர் பதக்கம் இழந்துள்ளார்.

## புள்ளிப் பட்டியல்

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 10 | 8 | 2 | 0 | 0 | 16 | +0.735 |
| கொல்கத்தா | 11 | 7 | 4 | 0 | 0 | 14 | +0.464 |
| றோயல் சலஞ்ஜர்ஸ் | 10 | 6 | 3 | 0 | 1 | 13 | +0.786 |
| சென்னை | 10 | 6 | 4 | 0 | 0 | 12 | +0.223 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 10 | 5 | 4 | 0 | 1 | 11 | -0.194 |
| கொச்சி | 11 | 5 | 6 | 0 | 0 | 10 | -0.624 |
| டில்லி | 11 | 4 | 7 | 0 | 0 | 8 | -0.312 |
| புனே வாரியர்ஸ் | 10 | 3 | 7 | 0 | 0 | 6 | -0.070 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 10 | 3 | 7 | 0 | 0 | 6 | -0.125 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 9 | 3 | 6 | 0 | 0 | 6 | -0.934 |


# தொடர் தோல்விக்கு தடைபோட்டது புனே

# கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி ஏமாற்றம்

(சண்டிகார்)

கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியை வீழ்த்தி புனே வாரியர்ஸ் அணி தொடர்ச்சியான தோல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

ஐ.பி.எல். தொடரில் சண்டிகாரில் நேற்று நடைபெற்ற 51 ஆவது போட்டியில் கில்கிறிஸ்ட் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் யுவராஜ் சிங் தலைமையிலான புனே வாரியர்ஸ் அணியும்



மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 119 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஷோன் மார்ஷ் 28 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 32 ஓட்டங்களையும் தினேஷ் கார்த்திக் 27 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 30 ஓட்டங்களையும் வால்தாரி 23 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் குமார், பார்னல், ராகுல் சர்மா, மிட்ஷல் மார்ஷ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டிய புனே வாரியர்ஸ் அணி 17.1 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 120 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் அணித்தலைவர் யுவராஜ் சிங் 15 பந்துகளில் (5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 35 ஓட்டங்களையும் பாண்டி 28, உத்தப்பா 22, ரைடர் 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சிறிவாஸ்தாவ 2 விக்கெட்டுக்களையும் பிரவீன் குமார், ஹரிஸ், பாட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ்வெற்றியின் மூலம் புனே வாரியர்ஸ் அணி தொடர்ச்சியாக சந்தித்துவந்த தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.



# ஐ.நாவைப் பகைக்க வேண்டாம் அரசுக்கு ரஷ்யா, சீனா அழுத்தம்

## மீறினால் ஆதரவை விலக்குவோம் என எச்சரிக்கை

(நியூயோர்க்)

**ஐக்கிய நாடுகள் சபையையோ அதன் செயலாளர் நாயகம் பான் கீ மூனையோ பகைத்துக் கொள்ள வேண்டாம் என ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுத்துள்ளது. தமது அழுத்தத்தை மீறி நடந்தால் இலங்கைக் கான தமது ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதாகவும் அந் நாடுகள் தெரிவித்துள்ளன.**

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனை இழிவு படுத்தும் வகையில் எத்தகைய நடவடிக்கை களையும் மேற்கொள்ள வேண்டாம் என இந் நாடுகள் கொழும்புக்கு அழுத்தம் கொடுத்தி ருப்பதாக தெரிய வருகின்றது.

இலங்கையில் செயற்பட்டு வருகின்ற சர்வதேச அமைப்புகளுக்கோ அல்லது அதன் பணியாளர்களுக்கோ எவ்வித இடையூறு களைஏற்படுத்தும்வகையில்நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் எனவும் இந் நாடுகள் அறிவுறுத்தியுள்ளன.

நிபுணர்கள் குழுவின் அறிக்கை பான் கீ மூனால் பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னர் ஐக் கிய நாடுகள் சபை மற்றும் பான் கீ மூனுக்கு எதிராக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி அரசாங்கமும் சிங்களப் பௌத்த தேசிய வாதிகளும் கடுமையான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் ஐ.நா. மற்றும் பான் கீ மூனுக்கு எதிராக கொழும்பு தொடர்ச்சியாக போராட்டங்கள், பரப்புரைகளை மேற்கொண் டால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலை மையிலான அரசாங்கத்துக்கு வழங்கி வரும் ஆதரவை மீளப் பெறவேண்டிய நிலை ஏற்ப டும் என இந் நாடுகள் எச்சரித்துள்ளன.

அத்துடன் கூட்டணிக் கட்சிகளின் தலை வர்கள் அனைத்துலக அமைப்புக்களையும் அதன் அதிகாரிகளையும் இழிவுபடுத்தும் அறிக்கைகளை வெளியிடுவதை தவிர்த்துக் கொள்வதைஅரசாங்கம்உறுதிசெய்துகொள்ளு மாறு இந்த நாடுகள் அறிவுறுத்தியுள்ளன.

இந் நிலையில் நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் கொழும்புக்கு ஆதரவு தெரிவித்துள்ள இந் நாடுகளை பகைத்துக் கொள்ள விரும்பாத கொழும்பு, ஐ.நா. மற்று பான் கீ மூனுக்கு எதிரான போராட்டங்களை யும் பரப்புரைகளையும் நிறுத்திக் கொள்ளும் நடவடிக்கைகளில் முனைப்புக் காட்டி வருகின் றதாகவும் தகவல் தெரிவிக்கின்றன. (ந-5)

---

# இலங்கை மீது அனைத்துலக...

துள்ள நிலையில் அந்த அறிக்கையின் அடிப் படையில் ஐ.நா. மனித உரிமைகள் சபை யில் இந்த விடயத்தை மீண்டும் முன்னெடுக் கும்படி கடும் அழுத்தங்கள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

2009ஆம் ஆண்டு வன்னியில் யுத்தம் முடிபடைந்த காலத்தில் இதேபோன்ற ஒரு பிரேரணை ஐ.நா. மனித உரிமைச் சபை யில் கொண்டுவரப்பட்ட போதும் அதனை நிறைவேற்றுதற்குரிய போதுமான ஆதரவை பெறமுடியாத நிலையில் பிரேரணை தோல்வி கண்டது. முக்கியமாக இந்தியா பின்னணி யிலிருந்து மேற்கொண்ட முயற்சியினாலேயே இது தோற்கடிக்கப்பட்டதாக செய்திகள் வெளி யாகியிருந்தன.

கியூபா, வியட்நாம் போன்ற நாடுகள் கூட இந்தியாவின் மறைமுக அழுத்தங்கள் காரண மாக இப் பிரேரணையை எதிர்த்து வாக்களித் திருந்தன. இதன் காரணமாக பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் இந்த வாக்கெடுப்பில் இலங்கைக்கு எதிராக வாக்களித்திருந்த போதும் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

அண்மையில் வெளியிடப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையிலும் மனித உரிமை சபையில் 2009ஆம் ஆண்டு தோற்கடிக்கப் பட்ட இத் தீர்மானம் தொடர்பாக குறிப்பிடப்பட் டிருந்தது.

இந்த தீர்மானத்தை மீளாய்வு செய்ய வேண்டும் எனவும் நிபுணர் குழு பரிந்துரைத் திருந்தது. இந் நிலையிலேயே ஐ.நா. மனித உரிமை சபையில் இலங்கை போர்க்குற்றம் தொடர்பான பிரேரணை ஒன்றைத் திரும்ப வும் கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த முறைபோல் இன்றி இம்முறை பிரேரணைக்கு பரந்துபட்ட ஆதரவினை திரட்டு வது தொடர்பாக அடுத்த வாரம் நியூயோர்க் கில் இடம்பெறும் கூட்டத்தில் ஆராயப்படும் என நம்பப்படுகிறது. குறிப்பாக இந்தியாவின் ஆதரவினை திரட்டுவது தொடர்பாக பேசப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக அரசு உத்தியோக பூர்வ பதில் எதனையும் இதுவரை அனுப்பவில்லை. மாறாக அவ் அறிக்கைக்கு எதிராக நாடு முழுவதும் ஆர்ப் பாட்டங்களும் கையெழுத்து வேட்டையும் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த மே தின நிகழ்ச்சிகளில் உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த் ராஜபக்ஷ ஐ.நா. அறிக்கைக்கு எதி ராக வெளிப்படையாகவே கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

ஐ.நா. அறிக்கையின் அடிப்படையில் இலங்கை அரசு சுயாதீனமான விசாரணை களை முன்னெடுக்கத் தவறினால் அனைத் துலக விசாரணைகள் தவிர்க்கமுடியாதவை யாக இருக்கும் என எச்சரிக்கைகள் விடுக்கப் பட்டுள்ள நிலையில் இதனை நோக்கிய ராஜ தந்திர முயற்சிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இது தொடர்பிலான அவசர கூட்டம் ஒன்று நியூயோர்க்கில் அடுத்த வாரம் நடைபெறவுள் ளது. இதனை ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கான இலங்கைப் பிரதிநிதியும் உறுதிப்படுத் தியுள்ளார். (ந-5)

---

# இராணுவக் கட்டுப்பாடற்ற...

குழப்ப நிலை உள்ள எந்த இடத்திலும் இராணுவப் பிரசன்னம் அவசியமானது என வும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். நகர வர்த்தகர்களுக்கான விஷேட கூட்டமொன்றை படைத்தரப்பு நேற்று யாழ். கத்தோலிக்க மண்டபத்தில் நடத்தியது.

இக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே யாழ். கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ஹத் துருசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தனது உரையில் அவர் தெரி வித்ததாவது,

யாழ். குடாநாட்டில் படையினரின் அள வைக் குறைத்து பொது மக்களுக்கு பாது காப்பு கெடுபிடிகளை இலகுவாக்கினோம். எனினும் கடந்த டிசம்பர் மாதம் யாழ். மாவட் டத் தில் அதிகரித்த குற்றச்செயல்களால் படை யினரை மீண்டும் நான் வீதிக்கு அனுப்பி னேன். சோதனைச் சாவடிகள், வீதி ரோந்து நடவடிக்கையை ஆரம்பித்தோம்.

இதனாலேயே குடாநாட்டில் இடம் பெற்றகுற்றச்செயல் களை என்னால் கட்டுப்படுத்த முடிந் தது.

நாட்டின்ஏனைய பிரதேசங்கள், ஏனைய நாடுகளு டன் ஒப்பிடும் போது குடாநாட்டில் குற் றச் செயல்கள் மிகக் குறைவு. குற்றவாளிகள் இருக்கும் வரை குற்றச் செயல்களும் இடம் பெறும்.

இராணுவத்திலும் ஒரு சில குற்றவாளி கள் உள்ளனர். அவர்களும் குற்றச் செயல் களில் ஈடுபடுவர். ஆனால் பொது மக்கள் அது தொடர்பில் அறிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுப்போம்.

யாழ். நகரில் தனியார் கட்டிடங்களில் இயங்கிய படைத்தளங்கள் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்காத இடங்களுக்கு மாற்றப்பட்டுவிட்டன.

அத்துடன் கட்டிடங்களும் உரிமையாளர் களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மேலும் பல உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகள் விடுவிக் கப்படுகின்றன. எனவே பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் படை முகாம்கள் நகர்த்தப்படுகின்றன.

எனினும் யாழ். குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி என எவையும் இருக்காது. குழப்பமான நிலையுள்ள இடங்களில் படை யினரின் பிரசன்னம் அவசியம். இது இங்கு மட்டுமல்ல எல்லா நாடுகளிலும் உள்ள நிலை.

போர் முடிந்து விட்டது தானே இனி எதற்கு இராணுவம் எனக் கேட்பது தவறு. போர் முடிந் தாலும் இராணுவத்தினர் மக்களின் சமாதா னப் பாலமாக அமைவர்.

யாழ்.மாவட்டத்தில் கப்பம் கேட்கும் நட வடிக்கையை இல்லாது ஒழிப்பதற்கு படையி னர் விழிப்பாக இருக்க வேண்டும் என ஜனா திபதியும் பாதுகாப்பு அமைச்சின் செயலாள ரும் கடும் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

எனவே கப்பம் கேட்பது சலுகைகளை பெற்றுத் தருவதாக லஞ்சம் கேட்பது போன்ற அச்சுறுத்தல்கள் இருந்தால் உடனடியாக யாழ். வர்த்தகர்கள் படையினருக்கு தகவலை வழங்குங்கள். மாறாக கப்பம் வழங்குவதோ, இலஞ்சம் கொடுப்பதையோ செய்யாதீர்கள்.

காங்கேசன்துறை சீமெந்து உற்பத்தி நிலையத்தை மீண்டும் இயங்க வைப்பதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகிறது. ஆனால் அங்கு வெளியேறும் சுண்ணாம்புக் கலவை களால் குடிநீருக்குப் பாதிப்பு ஏற்படுமாயின் அத்திட்டத்தை கைவிடவேண்டிவரும்.

விமானப்போக்குவரத்து, கப்பல் போக்கு வரத்து என்பவற்றை அதிகரிப்பதன் மூலமே வர்த்தக நடவடிக்கைகளை துரிதப்படுத்த முடியும். இதற்கென அரசாங்கம் காங்கேசன் துறைமுகம், பலாலி விமான நிலையம் என்ப வற்றை ஒழுங்குபடுத்தத் திட்டமிட்டுள்ளது. இவ் வாறு யாழ். கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துரு சிங்க தெரிவித்தார். (ந-5,6)

---

# யாழ். பல்...

போது பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர் களால் விடப்பட்டிருந்த ஆறு மோட்டார் சைக் கிள் களும், 10 துவிச்சக்கர வண்டி களும் கோப் பாய் பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டுள் ளன. (ந)

இறைச்சிக் கோழி விற்பனை
சுத்தம் செய்த நிறை Kg - 420/=
CSI
முழுநிறை Kg - 270 /=
வரணி மிஷன் பாம், வரணி
தொடர்புகளுக்கு: 0777715367
(4895)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.